இந்து ஒளி

தீபம் 22 சுடர் 3

HINDU OLI

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் மகோற்சவ சிறப்பிதழ்

அனுசரணை : அமரர் செல்லப்பா குகதாசன் அறக்கொடை நிதியம்

வைகாசி - ஆனி

May - June 2018

அகில இலங்கை இந்து மாமன்ற ஆன்மீக இதழ்

Religious Journal of All Ceylon Hindu Congress

'நீலகண்டம்' அமரர் திரு. கந்தையா நீலகண்டன் அஞ்சலி நிகழ்வும் நினைவேந்தலும், 08-04-2018 அன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது

அமரரின் உருவப்படத்திற்கு மாலை அணிவிக்கும் திருமதி நீலகண்டன் மற்றும் பிரணவன் நீலகண்டன்

அஞ்சலிச்சுடரேற்றும் திரு. சரவணன் நீலகண்டன் தம்பதியர், மாமன்ற பிரதித்தலைவர் திரு.மா.தவயோகராஜா, பொருளாளர் திருமதி. அ. கயிலாசபிள்ளை மற்றும் நல்லை ஆதீன குருமுதல்வர் ஆகியோர்

அஞ்சலிச்சுடரேற்றும் திரு.வே.கந்தசாமி, கலாநிதி ஆறு.திருமுருகன், திரு.எஸ்.செல்வராகவன், சிவத்திரு சுப்பிரமணியம் செட்டியார், மாண்புமிகு நீதியரசர் சி.துரைராஜா

அஞ்சலியுரைகள் நிகழ்த்தியோர்....

நல்லை ஆதீன குருமுதல்வர், மாண்புமிகு க.ஸ்ரீபவன், கலாநிதி ஸ்ரீபிரசாந்தன், திரு.ந.கருணைஆனந்தன், திரு.த.முத்துக்குமாரசாமி, வைத்தியகலாநிதி.மு.கதிர்காமநாதன்

திரு.தம்பு சிவசுப்பிரமணியம், திருமதி சாந்தி கேசவன், திரு.வெ.சசிகரன்,திரு.எம்.ஆர்.ராஜ்மோகன்,திரு.எஸ்.ஜெயக்குமார், சிவஸ்ரீ பத்மநாபசர்மா

திருமதி ஜமுனா கணேசலிங்கம்

நன்றியுரை - திரு.சி. தனபாலா

'நீலகண்டம்' சிறப்பு இந்து ஒளி இதழை மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் மாண்புமிகு சி.துரைராஜா மற்றும் முன்னைநாள் பிரதம நீதியரசர் மாண்புமிகு க.ஸ்ரீபவன் ஆகியோர் வெளியிட்டு, முதற் பிரதிகளை திருமதி சசிதேவி நீலகண்டன், திரு. சரவணன் நீலகண்டன் மற்றும் திரு. பிரணவன் நீலகண்டன் ஆகியோருக்கு வழங்கினர்.

உ
சிவமயம்

இந்து ஒளி

தீபம் - 22 சுடர் - 03

விளம்பி வருடம் ஆனித் திங்கள் 10ஆம் நாள் (24.06.2018)

பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

தேவாரம்

தன்னைச் சரணென்று தாளடைந்
தேன்றன் அடியடையப்
புன்னைப் பொழிற்புக லூரண்ணல்
செய்வன கேண்மின்களோ
என்னைப் பிறப்பறுத் தென்வினை
கட்டறுத் தேழ்நரகத்
தென்னைக் கிடக்கலொட் டான்சிவ
லோகத் திருத்திடுமே.

திருவாசகம்

கொன்றை மதியமும் கூவிள மத்தமும்
துன்றிய சென்னியர் அன்னே என்னும்
துன்றிய சென்னியின் மத்தம்உன் மத்தமே
இன்றெனக் கானவா றன்னே என்னும்.

திருவிசைப்பா

சுருதிவா னவனாம் திருநெடு மாலாம்
சுந்தர விசும்பின்இந் திரனாம்
பருதிவா னவனாம் படர்சடை முக்கண்
பகவனாம் அகஉயிர்க்கு அமுதாம்
எருதுவா கனனாம் எயில்கள் மூன்றெரித்த
ஏறுசே வகனுமாம் பின்னும்
கருதுவார் கருதும் உருவமாம் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே!

திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே

திருப்புராணம்

விழவ றாதன விளங்கொளி மணிநெடு வீதி
முழவ றாதன மொய்குழ லியர்நட வரங்கம்
மழவ றாதன மங்கலம் பொலிமணி முன்றில்
உழவ றாதநல் வளத்தன ஓங்கிருங் குடிகள்

அலைகடல் மத்தியில் அரசாட்சிபுரியும் நாகபூஷணி அம்பாள்

ஈழத்திருநாட்டிலுள்ள சக்தி தலங்களில் நயினாதீவு நாகபூஷணி அம்பாள் திருத்தலத்திற்கு தனித்துவம் உண்டு. அலைகடலுக்கு நடுவே அருள்மழை பொலியும் அம்பாளின் திருவருளை போற்றாதவர்கள் இல்லை. இத் திருக் கோவிலை இந்துக்கள் மட்டுமன்றி பௌத்தர்களும் உயர் மதிப்புக்கொடுத்து வழிபாடு செய்துவருவதைக் காணலாம். இத் திருக்கோயிலை தரிசிக்க வருபவர்கள் பசியாறுவதற்கு ஆலய சூழலில் பல மடங்கள் காணப்படுகின்றன. இதுவும் அம்பாளின் அற்புதமே.

நயினை நாகபூஷணி அம்மன் ஆலய அறங்காவலர்கள் சமூகப்பணிகளில் அக்கறை செலுத்த முன்வந்துள்ளனர். இது பாராட்டுக்குரிய விடயம். நயினாதீவில் ஒரு இந்து ஆராய்ச்சி நிலையத்தை உருவாக்கி சர்வதேச ரீதியில் தத்துவவியல் ஆராய்ச்சியாளர்கள் ஒன்றுகூடி கற்பதற்கு வசதி ஏற்படுத்த வேண்டும். மேலும் நயினாதீவு ஆலய சுற்றுப்புற பகுதிகளையும் அழகுபடுத்தி யாத்திரிகர்களை கவரும் வகையில் சில ஏற்பாடுகளை செய்வதும் தேவையாக இருக்கிறது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கலைத்துறை சார்ந்த கற்கைநெறி ஒன்று நயினாதீவில் எதிர்காலத்தில் உருவாகவேண்டும். இங்கு ஆத்மீகச் சூழலோடு அறிவியல் சூழலும் எழுச்சிபெறவேண்டும். ஏனைய கோயில்கள்

மறுபக்கம் பார்க்க...

வாழ்த்து

கரிமுகன் கழல்கள் வாழ்க கந்தவேள் கருணை வாழ்க
அரியயன் காணொ ணாத அரனடி நீடு வாழ்க
விரிசடைப் பெருமானார் தம் அடியவர் எல்லாம் வாழ்க
பரிதிசூழ் பாடும் விண்ணும் பொலிவுடன் நீடுவாழ்க!

செய்யும் சமூகப்பணிகள் பற்றி சிந்திப்பதை விடுத்து புதிய சமூகப்பணிகளை நயினை அறங்காவலர்கள் முன்னெடுக்க வேண்டும். நயினாதீவில் இருந்து சிதம்பரத்துக்கு செல்வதற்கான சிறிய துறைமுக வசதிகளை எதிர்காலத் திட்டமிடல் செயற்பாடுகளின்போது முன்வைத்தல் பெரும்பயனாக அமையும்.

நயினாதீவில் குடிசனத்தொகை மிகவும் குறைந்து கொண்டுபோவதாக அறியமுடிகிறது. இது விடயத்தில் நயினை நாகபூஷணி அறங்காவலர் சபை கவனத்தில் கொண்டு மக்களை எவ்வாறு மீளக்குடியேற்றலாம் என்பதில் ஆர்வம் செலுத்துவதும் காலத்தின் தேவையாக இருக்கிறது.

வாழ்கவே வாழ்க வென்நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்க மெய்ஞ்ஞானத் தவன்தாள்
வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே!

(திருமந்திரம்)

இந்து ஒளி | அகில இலங்கை இந்து மாமன்ற இந்து ஆராய்ச்சி நிலையத்தின் வெளியீடு

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் மகோற்சவ சிறப்பிதழ்

வைகாசி – ஆனி 2018

ஆசிரியர் குழு : சைவஞானபானு கலாநிதி ஆறு. திருமுருகன்
திரு.வே. கந்தசாமி
கலாநிதி ம. பாலகைலாசநாத சர்மா
சிவஸ்ரீ க. வைத்தீஸ்வரக் குருக்கள்
திரு. த. மனோகரன்

ஒரு பிரதியின் விலை	ரூபா 50.00
வருடாந்தச் சந்தா (உள்நாடு)	ரூபா 300.00 (தபாற் செலவு தனி)
வருடாந்தச் சந்தா (வெளிநாடு)	US டொலர் 15

அகில இலங்கை இந்து மாமன்றம்

தலைமையகம்: 91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு – 2, இலங்கை.
தொலைபேசி (கொழும்பு) : 0112434990, தொலைநகல் : 0112344720
மின்னஞ்சல் : hinducongress@gmail.com

யாழ் பணிமனை : 211/17, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி (யாழ்ப்பாணம்) : 0212221075, தொலைநகல் : 0212217280
மின்னஞ்சல் : hinducongressjaffna@gmail.com
இணையத்தளம் : http://www.hinducongress.lk

இந்து ஒளியில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் ஆக்கியோர்களுடையதே.

HINDU OLI | *Publication of* HINDU RESEARCH CENTRE OF ALL CEYLON HINDU CONGRESS

NAINATIVU SRI NAGAPOOSHANI AMMAN MAHOTSAVA SPECIAL ISSUE

May - June 2018

Editorial Board : Dr. Aru. Thirumurugan
Mr. V. Kandasamy
Dr. M. Balakailasanatha Sarma
Sivasri K. Vaitheeswara Kurukkal
Mr. D. Manoharan

Price	Rs. 50.00
Annual Subscription (Inland)	Rs. 300.00 (Excluding Postage)
Annual Subscription (Foreign)	US $ 15 (Including Postage)

ALL CEYLON HINDU CONGRESS

Head Office: 91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha
Colombo - 2, Sri Lanka.
Telephone No.: 011 2434990, Fax No.: 011 2344720
E-Mail : hinducongress@gmail.com

Jaffna Office : 211/17, Temple Road, Nallur, Jaffna.
Telephone No.: 0212221075, Fax No.: 0212217280
E-Mail : hinducongressjaffna@gmail.com
Website :"http://www.hinducongress.lk

Views expressed in the articles in Hindu Oli are those of the contributors.

ISSN : 2012 - 9645

ஆன்மீகச் சுடரின் அருளிமடல்

தனித்துவமிக்க சக்திபீடமாகத் திகழும் நயினைப்பதி

ஈழத்திருநாட்டில் புகழ்பூத்த சக்தி ஆலயங்களுள் ஒன்றாக, தலைசிறந்து விளங்கும் நயினைப்பதி நாகபூஷணி அம்மன் திருக்கோயிலுக்கு ஒரு தனித்துவ வரலாற்றுப் பெருமையுண்டு. அறுபத்து நான்கு சக்திபீடங்களுள் ஒன்றாக, அதியுயர் சிறப்பைப் பெற்றுத்திகழும் இவ் ஆலயம் பல நூறுவருடகால வரலாறு கொண்டது. அலைகடல் மத்தியிலிருந்து சிவசக்தியாக அருள் பாலித்துக் கொண்டிருக்கும் நயினை அம்பிகையை தரிசித்துவரும் அடியார்கள் எண்ணிக்கை அளவிடமுடியாதது. நாகம் வழிபாடு செய்த அற்புத நிகழ்வுடன் தொடர்புடைய திருக்கோயிலாக சிறப்புப்பெறும் நயினைப் பதியின் வரலாற்றின் ஊடாக நாக வழிபாட்டின் தனித்துவம் வெளிப்படுத்தப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்து மக்கள் கடல் கடந்து பயணம் செய்யவேண்டிய நிலையில், நயினை நாகபூஷணி அம்மன் ஆலயம் புண்ணிய தீர்த்த யாத்திரை தலமாகவும் சிறப்புப் பெறுகிறது. ஆலய மகோற்சவ காலத்தின்போது, ஈழத்திருநாட்டின் பல பாகங்களிலிருந்து மட்டுமல்ல, இந்தியாவிலிருந்தும் அடியார்கள் பலர் வருகைதந்து ஆலயத்தில் தங்கிநின்று அம்பாளின் அருள்பெற்றுச் செல்வது அற்புதக் காட்சியாகும். ஆலய நிர்வாகம் அன்னதான மடங்களை அமைத்து அடியார்களுக்கு அமுது அளித்துவரும் செயற்பாடு போற்றுதற்குரியது.

நாகபூஷணி அம்பாளின் கிருபையால் நயினை மண்ணில் பல சித்தர்களும், சமயப் பெரியார்களும், கல்விமான்களும் உருவாகியிருப்பதும் சிறப்புக்குரியது. நயினை மண்ணில் தோன்றிய சைவப் பெரியார் இராமச்சந்திரா அவர்கள் சமய தத்துவங்கள் அடங்கிய தமிழ், ஆங்கில நூல்களை மட்டுமல்ல, பல கட்டுரைகளையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

நயினை மண்ணில் வாழ்ந்து கொண்டிருந்த மக்கள் பலர், உள்நாட்டுப் பிரச்சினைகளால் புலம்பெயர்ந்து சென்றவேளையில், தங்கள் நாடுகளில் குறிப்பாக கனடா, லண்டன், ஜேர்மனி போன்ற நாடுகளில் நாகபூஷணி அம்மன் ஆலயத்தை உருவாக்கி வழிபாடு செய்து வருவதன் மூலம், அம்பாள் அருள் உலகெலாம் பரவச் செய்திருக்கிறார்கள் என்பது சிறப்புக்குரியது. நயினை அம்பிகைக்கு மகோற்சவம் நிகழும் காலத்தில் வெளிநாடுகளிலுள்ள ஆலயங்களிலும் உற்சவப் பெருவிழாக்களை நடாத்துவதையும் வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள்.

நயினை ஆலயமும், அதனைச் சார்ந்த சமூகமும் பல அறநெறிப் பணிகளை செய்துவருவதும் போற்றுதற்குரியது. சமூகச்சூழல் சுத்தம் கருதி அவர்களால் நடைமுறைப்படுத்தப்படும் ஒரு செயற்பாடு என்னை பெரிதும் கவர்ந்துள்ளது. அர்ச்சனைப் பொருட்களை வழங்குவதற்கு சிறு பனை ஓலைப் பெட்டிகளை பயன்படுத்துவது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். இதனை ஒரு பாரம்பரிய செயற்பாடாக சொல்லலாம். முன்னைய காலத்தில் தீவக மக்கள் பனை ஓலையை மூலப்பொருளாகக் கொண்டு பெட்டி, பாய், கடகம் போன்ற பொருட்களை உற்பத்தி செய்து தமது வாழ்வாதாரத்தை நிலைப்படுத்திக் கொண்டார்கள். இன்று அந்த நிலை வெகுவாகக் குறைந்து விட்டது. இந்நிலையில், ஆலய நிர்வாகம் அர்ச்சனைக்காக பனை ஓலை தயாரிப்புக்களை பயன்படுத்துவதன் ஊடாக, பாரம்பரிய உற்பத்தியின் செயற்பாடுகளால், தீவக மக்களது வாழ்வாதார நிலையில் மேம்பாடு காணக்கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்கலாம். சமூக மாற்றங்கள் ஆலயங்களிலிருந்தே ஆரம்பிக்கப்படவேண்டும். இதற்கு நயினை அம்பிகையின் ஆலயம் ஒரு முன்மாதிரியாக இருக்கிறது என்று சொல்லலாம். இலங்கையின் ஏனைய ஆலயங்களும் இத்தகைய நல்ல மாற்றங்களை பின்பற்றுவது அவசியமானது.

நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் மகோற்சவத்தையொட்டி வழமைபோல இவ்வருடமும் அகில இலங்கை இந்து மாமன்றம் இந்து ஒளி சஞ்சிகையை சிறப்பிதழாக வெளியிடுவது மகிழ்ச்சிக்குரியது. மறைந்த மாமன்றத் தலைவர் பேரன்பிற்குரிய கந்தையா நீலகண்டன் அவர்கள் இந்து ஆலயங்களின் திருவிழா காலங்களில் இந்து ஒளி சிறப்பிதழாக வெளிவரவேண்டும் என்பதில் பெரிதும் விருப்பம் கொண்டிருந்தவர். இந்து ஒளி சஞ்சிகையின் வளர்ச்சிக்காக உழைத்த பெருமகன். அவரது விருப்பத்தை

மறுபக்கம் பார்க்க...

3ஆம் பக்க தொடர்ச்சி...

தொடர்ந்து நிறைவேற்றிவரும் இந்து மாமன்றத்தின் செயற்பாடுகள் பெரிதும் போற்றத்தக்கவை.

இதே வேளையில் மறைந்த தலைவரின் வெற்றிடத்துக்கு, புதிதாக தெரிவுசெய்யப்பட்டிருக்கும் திரு.மா.தவயோகராஜா அவர்களுக்கும், புதிய பிரதித் தலைவராக தெரிவு செய்யப்பட்டிருக்கும் திரு.சின்னத்துரை தனபாலா அவர்களுக்கும் மனப்பூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டு, அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக இந்துக்களின் குரலாக ஒலித்துவரும் மாமன்றத்தின் காத்திரமான சேவைகள் சிறப்பாக தொடருவதற்கு இறையருள் துணைநிற்க பிரார்த்திக்கிறோம்.

ரிஷி தொண்டுநாதன்

சிவப்பெருஞ்சோதியுள் கலந்துவிட்ட ஸ்ரீ காஞ்சி காமகோடிபீட மகாபெரியவருக்கு மாமன்றத்தின் பிரார்த்தனை

தமிழ்நாட்டில் மட்டுமல்லாது உலகம் எங்கும் பரந்து வாழும் இந்துக்களுக்கெல்லாம் மகாகுருவாகவும் அவர்களின் மீது அக்கறையும் அன்பும் கொண்டவராகவும் திகழ்ந்த ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் 69வது ஆச்சாரியராக விளங்கிய பூஜ்ய ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள் 28-02-2018 அன்று சிவப்பெருஞ்சோதியுள் கலந்துவிட்டதை அறிந்து இலங்கை வாழ் இந்து மக்களும் நாமும் மிகவும் அதிர்ச்சியடைந்தோம்.

1996ல், அன்றைய சென்னை சீமெந்துக் கம்பனியின் தலைவர் திரு அர்ச்சுனராஜா அவர்களின் முயற்சியால் எமது மாமன்றப் பிரதிநிதிகள் மகாபெரியவர் பூஜ்யஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகளை சந்தித்து அவர்களின் அருளாசியுடனும் ஆலோசனைப்படியும் சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானின் பஞ்சலோக விக்கிரகம் ஒன்றினை தமிழ்நாட்டிலிருந்து தருவித்து இலங்கை, கொழும்பில் புதிதாக அமைக்கப்பட்ட எமது மாமன்றத்தின் 5வது மாடியில் அமைந்துள்ள பிரார்த்தனை மண்டபத்தில் ஸ்தாபித்து கும்பாபிடேகமும் செய்வித்தோம் என்பதை கனத்த இதயத்துடனும், இன்றும் எம்முடனிருக்கும் மகாபெரியவரின் ஆசிகளுடனும் நினைவுகூருகின்றோம்.

அதேவேளை, அப்புதிய கட்டடத்தின் அங்குரார்ப்பண வைபவத்தில் வெளியிடப்பட்ட கட்டிடப்பூர்த்தி மலர் (1996), மாமன்றத்தின் பொன்விழா மலர் (2007) மற்றும் வைரவிழா மலர் (2016) ஆகியவற்றுக்கும் தனது அருளாசிச் செய்தியினை வழங்கி எம்மை தொடந்தும் ஆசிர்வதித்து வந்தமை எமது நினைவுகளில் இழையோடுகின்றது.

மகாபெரியவர் சிவப்பெருஞ்சோதியுள் ஐக்கியமானதை முன்னிட்டு இலங்கைவாழ் இந்துமக்களின் சார்பில் எமது பிரார்த்தனைகளை ஏற்றுக்கொள்ளும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இந்து ஒளி - நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் மகோற்சவ சிறப்பிதழ் வெளியீடு

அனுசரணை:

அமரர் செல்லப்பா சுகதாசன் அறக்கிகாடை நிதியம்

சுகன் மோட்டோர் ஸ்ரோர்ஸ்

தலைமையகம்:
64, கல்பொத்த வீதி,
கொட்டாஞ்சேனை,
கொழும்பு - 13

கிளைகள்:
52, 2ம் குறுக்கு வீதி, வவுனியா.
110, பஜார் வீதி, வவுனியா

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன்

ஆலய வரலாறும் வழிபாட்டு மரபுகளும்

சில குறிப்புகள்

மா.வேதநாதன்

(பேராசிரியர், தலைவர், இந்துநாகரிகத் துறை, யாழ். பல்கலைக்கழகம்)

ஈழத்தின் இந்துமத வரலாற்றை ஆராய முற்படும் அறிஞர்கள் நயினாதீவு ஸ்ரீ நாக பூசணியம்மன் ஆலய வரலாற்றைக் கட்டாயம் கருத்தில் கொள்ளுதல் மிகவும் முக்கியமானதாகும். நாக வழிபாட்டின் தொன்மையை இங்கே காண முடிகிறது.

நயினாதீவு ஏறக்குறைய மூன்று மைல் நீளமும், ஒரு மைல் அகலமும் கொண்ட ஞான பூமியாகும். சுமார் ஐயாயிரம் இந்துக்கள் வாழும் இம் மணித்தீவு சர்வ மத சந்நிதியாக விளங்கும் பெருமைக்குரியது. இப்புண்ணிய பூமியில் கோயில் கொண்டுள்ள ஸ்ரீநாகபூசணி அம்மன், ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் குண்டலினி சக்தியாக, நீலத் திரைக்கடல் ஓரத்தில் ஆழ்கடல் மத்தியில் அமர்ந்திருந்து அருள் பாலித்து வருகின்றாள். முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளாகப் பொலிந்து விளங்குகிறாள். புகழ் பூக்கும் நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில் திருக்குடமுழுக்கு என்ற பெருஞ் சாந்தி விழாவானது 28.08.1983 ஞாயிற்றுக் கிழமை காலை 6.05 மணி முதல் 7.15 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் சிறப்பாக நடைபெற்று தொடர்ந்து முப்பது நாட்கள் மண்டலாபிஷேகமும் இலட்சார்ச்சனையும் நடைபெற்றன. 23.09.1983 ல் சண்டிஹோமமும் சிறப்புற நடைபெற்றது.

நயினை ஸ்ரீ நாகபூசணியம்மன் ஆலயத்தின் தொடக்க காலம் எது என்பது ஆராய்ச்சிக்குரியதாகும். இவ்வாலய மூல மூர்த்தி இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட பழம் பெருமையுடையதென்பதில் சந்தேகமில்லை.

புராதன பெருமை வாய்ந்த ஸ்ரீ நாகபூசணியம்மன் ஆலயத்தைப் போர்த்துக்கீசர் அழித்தனர். அப்போது ஆலயத்திலிருந்த மூல மூர்த்தியை ஆலய வடமேற்கில் நின்ற ஒரு செவ்வால மரப்பொந்துள் மறைத்து வைத்தனர் என்ற ஐதீகம் இன்றும் நிலவுகின்றது. பல ஆண்டுகளின் பின்னர் இராமலிங்கம் - இராமசந்திரன் என்பவர் கி.பி.1788ல் நாகபூசணியம்மன் ஆலயத்தைக் கல்லால் கட்டியதாகவும், அப்போது ஆண்டுக்கொரு முறை ஆனி மாதம் 10ம் திகதி தொடக்கம் 29ம் திகதி வரை 10 நாட்கள் திருவிழா நடைபெற்றது என்ற குறிப்பு யாழ்ப்பாணக் கச்சேரியிலுள்ள சைவக் கோயில்களின் பதிவு இடாப்பில் காணப்படுகிறது.

நயினாதீவு நாகபூசணியம்மன் கோவிலைப் பற்றிய கடந்த கால முழு விபரங்களையும் விசாரணை செய்த கொமிஷனரின் அறிக்கையில் இக் கோயில் பொதுக் கோயில் என்பதும் இதன் நிர்வாகத்திற்குப் பொதுமக்கள் உரிமையுடையவரென்பதும் சந்தேகத்திற்கு இடமில்லா முறையில் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. மேலும் அவ்வறிக்கையில் யாழ்பாணத்திலுள்ள கோயில்களெல்லாவற்றுள்ளும் நயினை நாகபூசணியம்மன் கோவிலுக்கே விலையுயர்ந்த காணிக்கைப் பொருட்கள் செலுத்தப்படுகின்றனவென்பது மலை மேல் விளக்கு என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது மனங்கொள்ளத்தக்கது.

யாழ் மாவட்ட நீதிமன்றத்தின் 14151 இலக்க வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் 1949ம் ஆண்டிலிருந்து நயினை நாகபூசணியம்மன் ஆலய பரிபாலத்தினை ஒன்பது உறுப்பினர்களைக் கொண்ட அறங்காவலர் சபையினர் சிறப்பாகப் பரிபாலித்து வருகின்றனர். இவர்களில் நால்வர் பரம்பரை அங்கத்தவர்களாகவும் ஐவர் மகாசபை உறுப்பினர்களில் இருந்து தெரிவு செய்யப்பட்டும் சேவை செய்து வருகின்றனர்.

நாகேச்சரத்தில் ஸ்ரீ நாகபூசணி அம்பாள்

திருக்கேதீச்சரத்தில் கௌரியம்பாள் இருப்பது போலவும், கோணேச்சரத்தில் மாதுமையம்மை விளங்குவது போலவும், முன்னேசுவரத்தில் வடிவாம்பிகை காணப்படுவது போலவும், நகுலேசுவரத்தில் திருத்தம்பலேசுவரி திகழ்வது போலவும், நயினாதீவிலுள்ள நாகேசுவரத்தில் அருள் மிகு ஸ்ரீ நாகபூசணியம்மன் காட்சி தருகிறாள். மேலும் ஈழத்தில் சீரணிப்பதியில் நாகம்மையும், கோண்டாவில் கிழக்கில் நாகபூசணியம்மையும் காணப்படுவதும் கவனிக்கத்தக்கதாகும்.

நயினாதீவுக்கு வடபாலுள்ள புளியந்தீவு (புளியேந்தி) என்னும் சிறு கிராமத்திலுள்ள நாகதம்பிரான் ஆலயத்தில் தற்போது பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் சிவலிங்கம் நயினாதீவு ஸ்ரீ நாகபூசணியம்மன் ஆலயத்தின் சுற்றுப் பிரகாரத்தில் புராதன காலத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த சிவலிங்கமாகும் என்ற நம்பிக்கை நயினையூர் மக்கள் மத்தியில் இன்றும் வலுப் பெற்றிருக்கின்றது. இக்கருத்து நன்கு சிந்தித்தற்குரியது.

கி.பி. 14ம் நூற்றாண்டின் இறுதியில் அல்லது கி.பி. 15ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த அருணகிரிநாதர் திருப்புகழில் 'கரிநாகபூஷணத்தி', 'நாகபூசணி' என்ற சொற்களை கையாளுகின்றார். கி.பி. 18ம் நூற்றாண்டில் வாழ்ந்த அபிராமிப் பட்டரும், அபிராமி அந்தாதிப் பாடலொன்றில் 'சாதி நச்சுவாய் அகிமாலினி' என்று குறிப்பிடுகின்றார். இச் சொற் பிரயோகங்கள் நயினை நாகபூசணி அம்மனை நினைவுபடுத்துகின்றன. அபிராமி அந்தாதி பாடலில் காணப்படும் இக் குறிப்பை கி.வா. ஜகந்நாதன் அவர்கள் நயினை நாகபூசணி அம்மனோடு 'மாலை பூண்ட மலர்' (பக்.190) என்ற அவரது நூலில் தொடர்புபடுத்தி எழுதியுள்ளார்.

சுயம்புருவமாக விளங்கும் நயினை நாகபூசணி

கருவறைக்குள் காணப்படும் கருநாகச் சிலையும், அதனருகிலுள்ள அழகிய பீடத்தின்கண் அருவுருவமாகவுள்ள அம்மனின் திருவுருவும் சுயம்பு உருவங்களாகவே காட்சி தருகின்றது. சுயம்புருவங்களின் தன்மை - அமைப்பு ஆகியன பற்றி சில்பரத்தினம் முதலிய சிற்ப நூல்களிலும் (சில்பரத்தினம் 11-2-128-132) குறிப்பிடப்பட்டுள்ளன. சுயம்புருவங்கள் பற்றி சிற்ப நூல்கள் குறிப்பிடும் கருத்துக்கள் சிலவற்றை இங்கு நோக்குவோம். சுயம்பு உருவங்கள் தானாகத் தோன்றுவன. தொடக்கம் அற்றன. அவை பலவகையின. சில பழுதடைந்தும் காணப்படுவன, சில மெல்லிய தோற்றத்தின, சில குட்டையாகவும், சில பலகை போன்ற தட்டையான அமைப்புமுடையன. சில பலமுனைகளுடன் கூடியனவாகவும் பசு மாட்டின் காது போன்ற அமைப்பைக் கொண்டனவாகவும் விளங்குவன.

மாதுளம் பழம் போன்ற அமைப்பைக் கொண்ட சுயம்பு உருவங்களும் உள்ளன. சில பீடத்துடன் காணப்படுவன. சிலவற்றில் பீடம் இருக்காது. சுயம்புருவங்கள் கோயில்களில் மட்டுமன்றி காடு, மலை, ஆறு, கடல், புண்ணிய தீர்த்தம், புண்ணிய சேஷ்திரம் ஆகிய இடங்களிலும் விளங்குவன. இவை எந்நிலையில் இருக்கின்றனவோ அந்நிலையில் உபாசிப்பதற்கு உகந்த இவற்றை காண்பதும், பூசிப்பதும் சிறந்த சித்தியை தரும். இதனாலன்றோ அனுதினமும் ஆயிரக்கணக்கான அடியார்கள் அம்பாளை வணங்க வந்தவண்ணமிருக்கின்றார்கள். சுயம்புருவங்களின் மூலத்தையோ அல்லது அதன் அமைப்பினையோ ஆராய்வது உகந்ததல்ல என்பது ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்கள் போன்ற அனுபூதிமான்களின் கருத்தாகும்.

மேற்கூறிய கருத்துக்களை ஆற அமர நடுநிலை நின்று சிந்திக்கும் போது கருவறைக்குள் காணப்படும் பீடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் நயினை நாகபூசணியம்மனின் அருவுருவத் திருவுரு சுயம்புருவம் என்பது தெட்டத் தெளிவதாகத் தெரிகின்றது.

மேலும் கருவறைக்குள் சுயம்புருவமாகக் காணப்படும் கல்லினாலான கருநாகச் சிலையானது ஐந்து தலை நாகம் படமெடுத்திருப்பது போன்று பார்ப்பதற்கு பயங்கரமாக சீறுவது போல தெரிகின்ற போதும் உண்மையன்புடன் உபாசிக்கின்றவர்களுக்கு பக்தியை ஏற்படுத்தக் கூடியதாகவிருக்கின்றது. காரைக்குடி எம். செல்லக்கண்ணு ஸ்தபதியார் மூலஸ்தானத்திலுள்ள அம்மன் விக்கிரகம் ஆயிரம் வருடங்களுக்கு முந்திய புராதனமானதென்ற கருத்தை வெளியிட்டதுடன் நாகப்பிரதிஷ்டை இதற்கு முன்னரே ஏற்பட்டிருக்க வேண்டுமென்றும் வீரகேசரி (11.03. 1951) பத்திரிக்கையில் குறிப்பிட்டுள்ளார். 11.03.1951ல் சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்களுடன் நயினை நாகபூசணியம்மன் ஆலயத்தை தரிசிக்க வந்த தென்னிந்திய சிற்ப சாஸ்திர ஆராச்சியாளர் திரு. எம். நரசிம்மன் அவர்கள் 'நயினாதீவில் மூலஸ்தானத்தில் அம்மன் உருவம் போல இருப்பது பழைய நாகப் பிரதிஷ்டையே இது மிகவும் தேய்ந்து அம்மன் உருவம் போலத் தெரிகிறது. இதற்குப் பின்னால் ஐந்து தலை நாகப் பிரதிஷ்டை ஒன்று உண்டு. இந்தியாவிலும் நாக வழிபாட்டிற்கே பிரத்தியேகமாகவுள்ள இவ்வளவு புராதன கோவிலை காண்பதரிது. கலப்பற்ற தூய்மையான நாக வழிபாட்டுப் பண்பினை நயினாதீவிற் காணலாம். இந்த நாகச் சிலை பதினான்காயிரம் வருடப் பழமையுடையது. இந்தியா, இலங்கை போன்ற இடங்களில் வேறு எங்கும் பார்க்க முடியாத பிரத்தியட்ச உருவமாக சர்ப்ப வழிபாட்டின் தொன்மைக் கருவூலமாக இது இருக்கின்றது." என நாகக் கல்லின் காலத்தை கருவிகொண்டு கணித்த பின் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

இந்நாக உருவின் வால் பகுதியை நிலத்துள் பல அடி ஆழத்திற்கு கீழ் நோக்கி அகழ்ந்து சென்று அறிய முற்பட்ட போது அதன் வாற்பகுதி முற்றுப் பெறாது வளர்ந்து சென்றதும் உண்மையான செய்தியாகும். எனவே கருவறைக்குள் காணப்படும் கருநாகச் சிலையும் பீடத்திலுள்ள அம்பாளின் திருவுருவும் சுயம்பு உருவங்களே என்பது மலை மேல் விளக்கு.

இலங்கையிலுள்ள சக்தி ஆலயங்களுள் சுயம்புத் திருவுருவத்தைக் கர்ப்பக்கிருகத்தில் கொண்டிலங்கும் ஒரேயொரு சக்தியாலயம் நயினை ஸ்ரீ நாகபூசணியம்மன் ஆலயம் எனலாம். இலங்கையிலுள்ள சிவாலயங்களில் இப்படியான பெருமைமிகு சுயம்புகேஸ்வரர் ஆலயங்கள் ஒட்டிசுட்டான், கொக்கட்டிச் சோலை, கற்சிலைமடு, வன்னேரிக்குளம் ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.

நிகமஞானதேவர் தமது ஜீர்னோத்தாரண தசகத்தில் இந்தியாவெங்கணும் பரந்து விளங்கும் அறுபத்து நான்கு சுயம்பு லிங்கங்களைக் குறிப்பிட்டுள்ளார் என்பது மனம் கொள்ளத்தக்கது.

சுயம்பு உருவங்களில் ஏதாவது உற்பாதங்களினால் சிதைவு காணப்படினும் திரும்பவும் பிரதிஷ்டை முதலிய கிரிகைகளின்றி வழிபடலாம். அத்துணை பெருமை வாய்ந்தன

சுயம்பு உருவங்கள். இவற்றில் ஏதாவதொரு பாகம் பாதிப்புற்றால் அப்பாகம் தங்கம் அல்லது செம்பு ஆகியவற்றால் செய்யப்பட்ட பட்டங்களை கொண்டு பிணைக்கப்படலாமென்றும், பின்னப்பட்ட பகுதியை வெள்ளி முதலிய உலோகங்களால் நிரவித் தொடர்ந்து பூசிக்கலாமென்றும் சாத்திரங்கள் சாற்றுகின்றன. ஆகமங்களில் ஏனைய உருவங்களுக்கு விதிக்கப்படும் விதிமுறைகள் நயினையில் உள்ளது போன்ற சுயம்புருவங்களுக்கு உரியனவல்லவென்பது இங்கு மனங் கொள்ளத்தக்கதாகும்.

மணிபல்லவத்தின் மனோன்மணியம்மை

நயினாதீவு, மணிபல்லவம், மணித்தீவு என்றெல்லாம் அழைக்கப்படும் வரலாற்றுச் சிறப்புடையது. இங்கு எழுந்தருளி அருள் பாலிக்கும் அம்மனை ஸ்ரீநாகபூசணி அம்மன் என்றே பண்டுதொட்டு இன்று வரையும் அன்பர்கள் அழைத்து வருகின்றார்கள். அருளாளர்கள் அம்பிகையின் அருட்பேராயிரத்தைக் கூறி வாழ்த்தி வணங்குவது சாக்த வழிபாட்டு மரபாகும். இந்த மரபினடிப்படையில் ஸ்ரீ நாகபூசணியம்மனை நாகேஸ்வரி நாகஇராஜேஸ்வரி, நாக இராஜராஜேஸ்வரி, புவனேஸ்வரி, என்றெல்லாம் பக்தர்கள் போற்றி வணங்குவர். "மெய் அறிவாளர்கள் பல பெயரிட்டு அழைத்தாலும் மெய்ப்பொருள் ஒன்றே என்பது இந்து மத பண்பாட்டு பாரம்பரியமாகும். இக்கருத்தை இருக்கு வேதம் "ஏகம் சத் விப்ரா பஹு°தாவதந்தி" (இ.வே. 1-164-46) என்று குறிப்பிடுவது நோக்கற்பாலதாகும். இங்குள்ள மூலமூர்த்தி ஸ்ரீநாகபூசணி அம்மன் என அழைக்கப்படுகின்ற போதும் இவ்வாலயத்தின் எழுந்தருளி மூர்த்தியாக விளங்கும் அம்பிகை மனோன்மணியம்மைக்குரிய அங்கலட்சணத்துடன் கூடிய நான்கு திருக்கரங்களுடன் திகழ்கின்றாள். முன்னுள்ள வலக்கரமும் இடக்கரமும் அபய வரத கரங்களாக அமைந்துள்ளன. பின் வலக்கரம் தாமரை மலரைத் தாங்கியுள்ளது. பின் இடக்கரத்தில் அட்சர மாலை திகழ்கின்றது. இந்த மனோன்மணியம்மையின் சொரூபமான திருவுருவச் சிலையொன்று பல ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டிருந்த போதும் 28.08. 1983 ல் நடைபெற்ற மஹா கும்பாபிஷேக தினத்தன்று பிரதிஷ்டை செய்வதற்கு திருவருள் கிடைத்துள்ளது. இத்திருவுருவம் தெற்கு நோக்கிய வண்ணம் தென் கோபுர வாயில் வழியாக வணங்கக் கூடிய முறையில் மகா மண்டபத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இந்த மனோன்மணியம்மையின் சிற்பச் சிலைகளை விமானம் கோபுரம் ஆகியவற்றிலும் கண்டு தரிசிக்கக் கூடியதாக விருக்கின்றது. மங்காப் புகழ்பூக்கும் மணித்தீவிலுறை மனோன்மணியை ஸ்ரீ நாகபூசணி அம்மனெனவே நினைந்துருகி அந்தமில் ஆனந்தம் அடையலாம்.

ஆகம மரபில் அமைந்துள்ள திராவிடச் சின்னம்.

இலங்கையிலுள்ள இந்துக் கோயில்களுள் நயினை ஸ்ரீ நாகபூசணியம்மன் ஆலயமும் திராவிடப் பாணியில் கட்டப்பட்ட சிறந்த கோயில்களில் ஒன்றெனலாம். இவ்வாலயம் ஆகம முறைப்படி கிழக்கு நோக்கிய வண்ணம் அழகுற அமைக்கப்பட்டிருக்கின்றது. நயினை ஆலய அமைப்பினை கூர்ந்து கவனித்தால் சுயம்புருவான நாகத்தையும் அம்மனையும் கொண்டிலங்கும் கர்ப்பக் கிருகம், இரு நிலை விமானம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், வசந்த மண்டபம், தெற்குப்புற இராஜகோபுரம், கிழக்குபுற இராஜகோபுரம், நவக்கிரக கோயில், நால்வர் கோயில், சண்டேஸ்வரர் கோயில், பிள்ளையார், சுப்பிரமணியர், சூரியன், சந்திரன் ஆகிய பரிவார மூர்த்திகள், யாகசாலை, பாகசாலை, வாகனசாலை, திருக்கேணி, ஆகிய முக்கிய உறுப்புக்கள் இருப்பதை அவதானிக்கலாம். கர்ப்பக் கிருகத்தின் புறச்சுவர்களிலமைக்கப்பட்ட கூடங்களான பஞ்சரகோஷ்டங்களில் நிருத்த கணபதி, கௌமாரி, வைஷ்ணவி, ப்ராம்மி, துர்க்கை ஆகிய கோஷ்ட தேவதைகள் காணப்படுகின்றனர்.

இப்படியாக ஆகம மரபும் திராவிடக் கலைகளும் இணைந்து சிறந்து விளங்கும் திருக்கோயிலாக இக் கோயில் மிளிர்கின்றது.

அம்பாளை அர்ச்சித்த அரவம்.

திருவானைக்காவில் உள்ள இறைவனை யானையும் சிலந்தியும் பூசித்ததைப் போன்று நயினை ஸ்ரீ நாகபூசணியம்மையை அரவம் அர்ச்சித்து வந்ததாகவும் -வருவதாகவும் அம்பாள் அடியார்களின் அனுபவக் கதைகள் கூறுகின்றன. புராதன காலத்தில் நயினையில் உள்ள ஸ்ரீநாகபூசணி அம்மனை ஒரு நாகம் பூசித்து வந்ததாம்.

ஒரு நாள் அந்த நாகம் அர்ச்சனை செய்தற் பொருட்டு பூக்கள் கொய்து கொண்டு நயினாதீவுக்கு அப்பால் உள்ள புளியந் தீவு (புலியேந்தி) என்னும் சிறு தீவிலிருந்து மீளும் வழியில் ஒரு கருடன் அதனைக் கொல்லும் பொருட்டு எதிர்த்து வந்தது. கருடனைக் கண்டு அஞ்சிய நாகம் நயினைக் கடற்கரைக்கு சமீபத்திலிருந்த கல்லொன்றினைச் சுற்றிக் கொண்டிருந்தது. கருடனும் அந்த நாகத்தை கொல்லாமலும் அதனை விட்டகலாமலும் அதற்கெதிரேயிருந்த கல்லொன்றின் மீது இருந்தது. இங்ஙனம் இவையிரண்டும் பகைமையை கொண்டிருந்த சமயத்தில் அக்கடல் வழியாக மரக்கலத்தில் சென்ற வைசிகன் ஒருவன் (மாநாய்கன் என்பர் சிலர்) அந்நாகத்தின் பயத்தை குறிப்பாலுணர்ந்து மரக் கலத்தை நிறுத்தி அக்கருடனை விலகும்படி கேட்டான். "உனது செல்வம் யாவற்றையும் கொணர்ந்து நாகம்மாள் கோவிலுக்கு கொடுப்பாயானால் விலகுவேன் என்றது கருடன். வணிகனும் அங்ஙனமே செய்தான். நாகமும் தனது நன்றியை செலுத்தி நயினாதீவை அடைந்தது. வணிகனும் தனது நாட்டிற்கு திரும்பினான். நடந்தவற்றை எல்லாம் தன் மனைவியிடம்

கூறினான். அன்றிரவு வணிகனும் அவன் மனைவியும் நித்திரை கொள்ளும்போது ஒரு பேரொளி தோன்றி அவர்களுடைய கண்களை சிறிது நேரம் கூசச் செய்தது. பின்பு அவர்கள் எழும்பிப் பார்த்த போது நாகரத்தினக் கற்கள் அவ்வறையிலே இருப்பதை கண்டார்கள் நயினை அம்பிகையின் திருவருள் இருந்தவாறென்னேயென அவர்கள் வியப்புற்று நயினா தீவுக்கு யாத்திரை செய்யப் புறப்பட்டு நயினையின் வட கிழக்கு கரையோரத்தில் ஸ்ரீநாகபூசணி அம்மனுக்குச் சிறந்ததோர் ஆலயம் கட்டுவித்தார்கள். ஏழு வீதிகளும் கோபுரங்களும் அமைத்தார்கள். செப்புத் தேர், பவளத் தேர்களும் செய்வித்தார்கள். நயினார் பட்டர் என்னும் பிராமண குருவைப் பூசகராக நியமித்தார்கள். நயினாதீவின் கடலோரத்தில் கடலுக்குள் இன்றும் பாம்பு சுற்றிய கல், கருடனிருந்த கல் ஆகிய இரு கற்கள் காணப்படுகின்றன. இன்றும் மக்கள் மத்தியில் இக் கர்ண பரம்பரைக் கதை வேரூன்றியிருக்கின்றது.

வழிபாட்டு மரபுகள்

எல்லாம்வல்ல பராசக்தியை நாம் உபாசிக்கும் வழிகள் பலவுள. அவற்றுள் கலியுகத்தில் யோகியர், ஞானியர், தவிர்ந்த பொதுமக்களால் அனுஷ்டிக்கப்படுவனவற்றுள் மிகவும் பிரசித்தமானவை மூன்று வகையானவை. அவையாவன வைதீக மரபில் அம்பிகையை வழிபடுதல், ஆகம மரபில் அம்பிகையை ஆராதித்தல், தாந்திரிக முறையில் ஸ்ரீவித்தியோபாசனை பண்ணுதல். இம் மூன்று முறைகளில் அமையும் வழிபாட்டு மரபுகள் நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இவ்வாறு மந்திர, தந்திர யந்திர முறைகளால் வழிபடப்படும் நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்தில் தமிழ் நாட்டு மரபிலமைந்த தட்சிணாசார வழிபாட்டு முறையே பண்டுதொட்டு இன்று வரை இருந்து வருகின்றது.

இக் கோயிலின் மகோற்சவம் ஆனி மாதத்தில் நடைபெறுவது வழக்கமாகும். ஆரம்பத்தில் 10 நாட்கள் மட்டும் பிரமோற்சவம் நடைபெற்றது. 1960ம் ஆண்டில் இருந்து 15 நாட்கள் திருவிழா சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இத் திருவிழாக்களுள் தேர்த் திருவிழாவின் போது பல்லாயிரம் பக்தர்கள் கூடுவர். அருள் மிகு ஸ்ரீநாகபூசணி அம்பாள் 8.07.1957 ல் செய்து முடிக்கப் பெற்ற சிறந்த சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய திருத்தேரில் பவனி வரும் போது பக்த கோடிகள் பரவசமடைவதைப் பார்க்க முடியும். இன்று விநாயகருக்கும் சுப்பிரமணியருக்கும் தனித்தனி சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய சித்திரத் தேர்கள் இருக்கின்றன. இவ்வாலயத்தின் மஞ்சத் திருவிழாவும் எம் நெஞ்சத்தை உருக்கும் பெருவிழாவாக நடைபெற்று வருகின்றது. இம்மஞ்சத் திருப்பணி நயினை - கொழும்பு வர்த்தகப் பெருமக்களால் 1981ஆம் ஆண்டில் செய்து முடிக்கப் பெற்று 10.07.1981ல் அதன் வெள்ளோட்டமும் நடைபெற்றது.

நித்திய நைமித்திய காவியக் கிரியைகள் சிறப்பாகப் பேணப்படும் இவ்வாலயத்தில் நைமித்தியக் கிரியைகளுள் ஒன்றான மகா கும்பாபிஷேகம் காலாகாலம் நடைபெற்று வந்துள்ளது. பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறை மகா கும்பாபிஷேகம் செய்யப்படுவது இந்து சமய சாஸ்திர மரபாகும். இதற்கமைய நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்தில் 26. 04.1951 இலும் 3.6.1963 இலும் புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. இதன் பின்னர் சுமார் இருபது வருடங்களின் மேல் 28.08.1983 ல் அம்பிகையின் திருவருள் கொண்டு அறங்காவலர்கள் சபையினரால் புனராவர்த்தன கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற்றது. சுயம்புருவங்கள் பிரதிஷ்டை முதலிய கிரியைகளின்றி வழிபடத்தக்க பெருமை வாய்ந்தவை என்பதை மீண்டும் இங்கு நினைவு கூருவது பொருத்தமாகும். ஆகமங்களில் குறிப்பிடப்படும் ஆறு காலப் பூசைகளில் இவ் வாலயத்தில் தற்போது காலைப் பூசை, உச்சிக் காலப் பூசை, சாயரட்சைப்பூசை, அர்த்தசாமப்பூசை ஆகிய நான்கு நேரப் பூசைகளே நித்திய கிரியைகளாக நடைபெற்று வருகின்றன.

மாதந்தோறும் வரும் பூரணையில் அம்பிகை ஸ்ரீ சக்கரத்தில் வித்யோபாசனை செய்யப்படுகின்றாள். மந்திர வழிபாடு இந்தியாவிலும் இலங்கையிலும் பெரிதும் விளங்குகின்றது. இவ்யந்திரங்களனைத்துள்ளும் பிரசித்தி பெற்றது ஸ்ரீ சக்கரம் இந்த யந்திரத்தை மூன்று வகையாக அமைப்பார்கள். இவற்றிற்கு மேரு, கைலாசம், பூ என்ற என்ற மூன்று நிலைகள் உண்டு. நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயத்தில் மேருப்ரஸ்தார ஸ்ரீசக்கர மந்திரத்தில் அம்பிகை உபாசனை செய்யப்படுகிறாள். புரட்டாதி மாதத்தில் வரும் நவராத்திரி தினங்களில் இவ்வாலயத்தில் நிகழும் சக்தி வழிபாடுகள் அற்புதம் மிக்கவை. பிள்ளையில்லாதவர்கள் நாகபூசணி அம்மன் ஆலயத்திற்கு வருகை தந்து நாகப் பிரதிஷ்டை செய்து பிள்ளைகளைப் பெற்று மகிழ்கின்றனர். தமிழகத்திலும் அம்மரபு நிலவி வருகின்றது. இது இவ் ஆலயத்தின் தனிப் பெருஞ் சிறப்பாகும்.

இத்துணை வரலாற்றுச் சிறப்புகளோடும், சாக்த வழிபாட்டு மரபுகளோடும் சிறந்து விளங்கும் அருள்மிகு ஸ்ரீ நாகபூசணி அம்மனை வணங்கிப் பேரின்பம் பெறுவோமாக.

நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மனுக்கு அரோஹரா!

(நன்றி : நயினை ஸ்ரீ நாகபூசணி அம்பாள் கோயில் திருக் குட்முழக்குப் பெருவிழா மலர் : பாகம் 1. 28.08.1983.)

நயினாதீவு

நாகபூசணி அம்பாள்

திருத்தல வரலாறு

(ஆத்ம ஜோதி நா. முத்தையா)

கல்லோலோல்ல ஸிதாமிர்தாத் பதிலஹரீ மத்யேவிராஜன் மணி
துவீபேகல்ய கவாடிகா பரிவிருதே காதம்ப வாட்யுஜ்ஜ்ய வலே
ரத்னஸ்தம்ப ஸஹஸ்ரநிர்மித ஸபாமத்யே விபானோத்தமே
சிந்தாரத்ன விநிமிர்தம் ஜனனிதே ஸிம்ஹாஸனம் பாவயே.

இது ஆதிசங்கராச்சாரியாரினால் 'மந்த்ர மாத்ருகா புஷ்பமாலாஸ்தவ' என்ற நூலில் அருளப்பட்ட சுலோகமாகும்

இதன் பொருள்: தாயே! அலைகளினால் சோபிக்கின்ற அமிர்த சமுத்திரத்தின் நடுவில் விளங்குகின்ற மணித்தீவிலே கற்பக மரங்களாலான வேலியினால் சூழப்பட்டதும், கடம்ப மர வரிசைகளால் பிரகாசிப்பதும், இரத்தினங்களால் இழைக்கப்பட்டு ஆயிரங்கால்கள் அமைத்து நிருமித்த சபையின் நடுவில் உள்ளதுமான சிறந்த விமானத்திலே (கோயிலிலே சிந்தா மணிகளை அமைத்துச் செய்யப்பட்டதான சிங்காசனத்தை நான் உனக்கு தியானம் செய்து கொடுக்கிறேன்.) மனதினால் சமர்ப்பிக்கிறேன்.

சக்தி பீடங்களாகிய நவபீடங்களில் நயினையும் ஒன்றாகும். மணித்தீவு எனச் சங்கராச்சாரியார் குறிப்பிட்டதுவும் இதனையே தான். ஈழத்து திருத்தலங்களுள் சரித்திரங் கண்ட தலங்கள் பலவுள. அத்தலங்களை இன்றும் சாதி சமய வேறுபாடற்ற முறையில் மக்கள் சென்று வணங்குவதை காண்கிறோம். அரசியலார் கனவிலுங் காணமுடியாத சமரச மனோபாவத்தை அத்தலங்களில் மக்கள் அனுபவிக்கின்றனர். உதாரணம். கதிர்காமம், சிவனொளிபாதம், திருக்கேதீச்சரம், கோணேச்சரம், முன்னேஸ்வரம், செல்லச்சந்நிதி, நயினாதீவிலுள்ள நாகேச்சுரம் என்பன. இவற்றுக்கெல்லாம் ஆதிசக்தி பீடமாயமைந்தது நாகேஸ்வரி ஆலயமாகும். இதனுடைய தோற்றம் சரித்திர காலத்திற்கு முற்பட்டதென கூறுவதற்கும் தகுந்த ஆதாரங்களுண்டு.

இலங்கையின் வடபாகத்தில் ஏழு தீவுகள் இருக்கின்றன. அவற்றுள் நடுநாயகமாக விளங்குவது நயினாதீவாகும். இது இயற்கை அழகினை உடையது. புராதன பல அதிசயங்களை உடையது. யாழ்ப்பாணம் பட்டினத்திற்கு தென்மேற்கே சுமார் இருபது மைல் தூரத்தில் உள்ளது. இதற்கு மணித்தீவு, மணிபல்லவத்தீவு, மணிநாகதீவு, நாகதீவு, நாகநயினார் தீவு, நயினார்தீவு, சம்புத் தீவு ஆகிய பல பெயர்கள் உண்டு. தட்சிண கைலாயமெனப் பெயர் பெற்றுச் சிறப்புற விளங்கிய லெமூரியாக் (நாகநாடு) கண்டத்தில் கடல்வாய்ப்பட்டது போக எஞ்சியுள்ள பாகத்தில் ஓர் சிறந்த பகுதி என்பது ஆராச்சியாளர்களுடைய துணிபாகும். நயினாதீவுச் சுவாமிகள் போன்ற பல மகான்களும் பல புலவர்களும் வாழ்ந்து வந்ததே இதற்கு அத்தாட்சியாகும்.

பூர்வத்தில் இலங்கையில் இயக்கர், நாகர் ஆகிய இரு சாதியினர் வசித்து வந்ததாக சரித்திரம் கூறுகின்றது. நாகர் வடக்கேயும் இயக்கர் தெற்கேயும் வசித்து வந்தனர். நாகர் சர்ப்ப வழிபாடுடையவராய் இருந்தனர். இவர்கள் கல்வியிலும் சீர்சிருத்தத்திலும் சிறந்தவர்கள். நாக இராசனாகிய மகோதரனுக்கும் அவன் மருமகனாகிய குலோதரனுக்குமிடையில் மணியிழைத்த ஆசனத்தை முன்னிட்டு பெரும்போர் நடந்தது. அப்பொழுது இந்தியாவிலிருந்து கௌதம புத்தர் இங்கு வந்து இவர்களுக்கிடையே சமாதானத்தை நிலைநாட்டி பஞ்சசீலத்தை இவர்களுக்கு உபதேசம் செய்தார். உபதேசத்தை கேட்டதும் இருவரும் மனந் திருந்தி மணியாசனத்தை புத்தருக்குக் கொடுக்க அவர் அதை இங்கு ஸ்தாபித்துச் சென்றாரென்று மகாவம்சம் கூறுகின்றது.

மணித்தீவில் புவனேஸ்வரி பீடம் எனக் காளிதாசனால் கூறப்பட்டது இத்தலமே என்று கூறுவர். சீத்தலைச் சாத்தனார் தமது மணிமேகலை என்னும் நூலில் இதை 'மணிபல்லவம்' என்றும் பட்டினத்தடிகள் இதை 'மணித்தீவு' என்றும் கூறியதாக தெரிகின்றது. இத்தீவில் சர்ப்பங்கள் மற்றைய அயல் தீவுகளிலிலும் பார்க்க அதிகமாக வாசஞ் செய்கின்றன. இவைகட்கு ஜென்ம விரோதிகளான கீரிப்பிள்ளை, செண்பகம் இங்கு இயற்கையாயில்லை. அவற்றை இங்கு கொண்டு வந்து வளர்ப்பினும் அவை இறந்து விடுகின்றன.

நாகபூசணி அம்பாளின் திருக்கோயிலின் வடபாலுள்ள பாம்பன் கடலில் இற்றைக்கு ஏறக்குறைய இரண்டாயிரம் வருடங்களின் முன் ஓர் நாகம் தன் வாயில் பூவை கவ்விக் கொண்டு வடக்கிலிருந்து தெற்கு நோக்கி நீந்தி வருகையில் ஒரு கருடன் குறித்த பாம்பை கண்டு தொடர்ந்தது. இதனால் குறித்த சர்ப்பம் கடலில் வளர்ந்துள்ள ஒரு கல்லில் சுற்றி

மறைந்து கொண்டது. கருடனும் எதிரே உள்ளதோர் கல்லில் இருந்து கொண்டது. நாகமும் கருடனும் தர்க்கம் செய்து கொண்டிருக்கையில்அவ்வழியாக மரக்கலத்தில் வந்த வணிகன் இவைகளை கண்டதாகவும் நாகபாஷை அறிந்த படியால் நாகத்திடமிருந்து வரலாற்றை அறிந்து கருடனை அந்த நாகத்தை கொல்லாது விடும்படி கேட்டதாகவும் கருடன் இத்தீவிலிருக்கும் தேவி ஆலயத்திற்கு அவனது பொருள் யாவற்றையும் செலவு செய்து விடும்படி சொன்னதாகவும் அவனும் அப்படியே செய்து நாகத்தை தப்ப வைத்ததாகவும் சொல்கின்றனர். அக் கற்கள் இரண்டும் இன்றும் பாம்பு சுற்றிய கல்லு, கருடன் கல்லு என்ற பெயர்களால் அழைக்கப் பெறுகின்றன.

நயினார் பட்டர் என்ற பிராமணரால் இங்குள்ள அம்மை பூசிக்கப் பெற்றமையால் நயினா தீவு என்று இது அழைக்கப்படுகிறது. இப்பொழுது அனலைதீவு - புளியந்தீவில் இருக்கும் நாகதம்பிரான் விக்கிரகம் டச்சுக்காரர் கோவிலை தாக்குமுன் நயினாதீவில் இருந்ததென்பது முதியோர்களால் ஒப்ப முடிந்ததொன்றாகும். நாகபூசணி அம்மன் ஆலயத்தில் பூர்வ மூல மூர்த்தியாக அமைந்திருப்பது ஐந்து தலை நாகமாகும். இம் மூர்த்தியை தரிசித்த தென்னிந்திய சிற்ப சாஸ்திர ஆராச்சியாளர் எம். நரசிம்மன் அவர்கள் சரித்திரத்திலே பேசப்பட்ட பழைய சர்ப்ப வழிபாட்டுக்கு ஆதாரமாக இலங்கை இந்தியாவிலே இன்றும் பிரத்தியட்சமாக காட்சியளிப்பது இம் மூர்த்தியே என்றும் சர்ப்ப வழிபாட்டில் நம்பிக்கை குறைந்த பிற் காலத்திலே நாகபூசணி அம்மையை அயலே பிரதிஷ்டை செய்திருக்கிறார்களென்றும் முடிபுக்கு வந்திருக்கிறார்கள். மகாகுண்டலினி சந்தியே சர்ப்ப உருவமாகும்.

நாகபூசணி அம்மன் ஆலயம் சமுத்திரத்தை நோக்கியபடி தம்மை அடையும் மெய்யடியார்களைத் தாமதமின்றி வரவேற்பது போன்று அழகுற விளங்குகின்றது. இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இங்கு வாணிப நிமித்தம் வந்த காவரிப் பூம்பட்டினத்து வணிக குல பெருமக்கள் இதைச் சீர்படுத்தி நிறுவுவதில் பங்குபற்றினர். செப்புத் தேர், பவளத் தேர்களை ஏற்படுத்தி வைத்தார்கள் என்றும் நயினாப் பட்டரை பூசகராக ஏற்படுத்தினர் என்றும் கர்ண பரம்பரையாக நம்பப்பட்டு வருகின்றது. இதன் மூல மூர்த்தியான சர்ப்ப வழிபாட்டு காலம் பதினாயிரம் ஆண்டென்று இந்திய சிற்ப சாஸ்திர அறிஞர் நரசிம்மன் கூறியுள்ளார். புராதனமான இந்த ஆலயம் இடையிடையே பலராலும் சீர் திருத்தப்பட்டு நிர்மாணிக்கப்பட்டு வந்தது. டச்சுக்காரர் காலத்தில் அவர்கள் இப் புராதன ஆலயத்தையும் இங்கிருந்த சிவன் கோயிலையும் இடித்து அழித்தார்கள். ஆனால் இந்த அம்மையின் திருவுருவத்தை அந்த நேரத்தில் ஆலய பொந்துக்குள் ஒளித்து வைத்திருந்த அடியார்கள் திரும்பவும் கோயிலை கட்டி ஸ்தாபித்தனர்.

அக்கோவிலிலே அப்பொழுதிருந்த செப்புத்தேர் பவளத்தேர்கள் அந்நியர் கைப்படாமல் வடமேற்குக் கடலில் தள்ளி விடப்பட்டன. கோவில் மேலும் திருத்தப்பட்டு தற்போதைய நிலையில் விளங்குகின்றது. இத்தலம் அர்ச்சுனன், பட்டினத்தடிகள், மணிமேகலை, ஆபுத்திரன், புத்தர் முதலிய பெரியோர்களால் தரிசிக்கப்பட்டது.

பழைய காலத்தில் எல்லாம் வல்ல இறைவன் ஆன்மாக்களை உய்வித்தற் பொருட்டு தமது மாபெருங் கருணையைப் பதித்த இடங்கள் அறுபத்து நான்காகும் அருட்சக்தி பீடங்கள் எனப்படும் இவை காசி விசாலாட்சி, காஞ்சி காமாட்சி, மதுரை மீனாட்சி என்று வருவனவாகும். இவற்றுள் இரண்டு மணித்தீவில் அமைந்துள்ளன என்றும் அவை "புவனேஸ்வரி பீடம்" "திரிபுரபைரவிபீடம்" எனப் பெயர் பெற்றவை என்றும் தேவி பராக்கிரமத்தில் விபரிக்கப்பட்டுள்ளது.

அனலை தீவைச் சேர்ந்த புளியந் தீவு என்னுமிடத்திலுள்ள இப் பெருமாளை 'புலிஏந்தி நாகதம்பிரான்' எனவும் அழைப்பர். நாகபூசணி அம்மை தம்மை வழிபடும் மெய்யடியார்களுக்கு சகல பாக்கியங்களையும் அளித்து வருகிறார். ஆனால் பிரதானமாக புத்திர பாக்கியமின்றி தீராத மனக்கவலையுற்றோரின் பிணியை தீர்க்கும் அருமருந்தாக அம்மை அருள்பாலிக்கிறாள். அதனால் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் வருடத்தின் பல நாட்களிலும் அன்பர்கள் இங்கு வந்து சாந்தி பெற்று செல்கிறார்கள்.

(நன்றி: நயினாதீவு நாகபூசணி அம்மன் கோவில் திருக்குட முழக்கு பெருவிழா மலர் பாகம் 1. 28.08. 1983.)

நயினை மான்மியம்

பெற்றதா லன்னை பெறுமுயி ரனைத்தும் பேணலா லன்னைபெற் றிடுவோர்
உற்றதா லன்னை விரும்பிய வனைத்தும் முதவலா லன்னையெக் கலையுஞ்
சொற்றதா லன்னை யுலகொடு வானுந் தொழுதலா லன்னையென் றென்றும்
பற்றதாங் கருணை பொழிதலால் அன்னை பராபரை நாகபூ டணியால்

- நயினை நாகமணிப்புலவர்.

(1980 ஆம் ஆண்டு இலங்கை சாகித்திய மண்டலப்பரிசு பெற்ற நூலிலிருந்து)

நயினாதீவுச் சுவாமிகள்

ஆத்மஜோதி நா. முத்தையா

1945ஆம் 46ஆம் ஆண்டாக இருக்கலாம் என்ற நினைவு அன்பர் பொன். கிருஷ்ணபிள்ளை அவர்களை சந்திப்பதற்காகக் கோப்பாய் அரசினர் பயிற்சிக் கல்லூ ரிக்குச் சென்றிருந்தேன். அங்கு மாணவர்கள் வரிசையாக உள்ளே சென்று வேறோர் வாசலால் வெளியேறுவதைக் கண்டேன். பண்டிதர் கிருஷ்ணபிள்ளை அவர்களும் மரநிழலில் நின்றார்கள். அவரைத் தேடிச் சென்றவன் ஆனபடியினால் கண்டதும், "கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது போல" என்று சொல்வார்களே, அது என்னளவில் இன்று பலித்துவிட்டது என்றேன். உங்களைத் தேடி வியாபாரி மூலைக்குத்தான் செல்ல இருந்தேன், என்னையும் அறியாமல் கால்கள் இங்கே இழுத்து வந்து விட்டன" என்றேன். "கால்கள் இங்கு இழுத்து வந்துவிட முடியாது. நயினாதீவுச் சுவாமியார்தான் இழுத்து வந்திருக்க வேண்டும்" என்றார்கள். அதன் பின்புதான் மாணவர்கள் வரிசையாக ஒரு வாசல் புகுந்து இன்னொரு வாசலால் வெளியேறிய காரணம் புலப்பட்டது.

அப்பொழுது அதிபராக இருந்த திரு சண்முகரத்தினம் அவர்கள் குடும்பத்தினருடன் நயினார்தீவு நாகபூஷணி அம்பாளைத் தரிசிக்கச் சென்றிருந்தார்கள். அவரோ அடியார் பக்தி தெய்வ பக்தியிற் சிறந்தவர். நயினாதீவுச் சுவாமிகள் தேர்முட்டியடியில் தனிமையாக இருப்பதைப் பார்த்து அவரை நாடித் தனியாகவே சென்று தரிசித்தார்கள். நிமிர்ந்து முகத்தைப் பார்த்த சுவாமிகள் கையசைத்து: இருக்குமாறு பணித்தார்கள். ஒரு மணித்தியாலம்வரை கழிந்துவிட்டது. அதிபர் அவர்கள் சுவாமிகளுடைய சந்நிதியில் தியானம் இன்பம் அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். உடன் வந்தவர்கள் "தோணி புறப்படப் போகிறது வாருங்கள்" என்று துரிதப்படுத்தினார்கள். உணர்வு பெற்ற அதிபர் அவர்கள் தான் செல்வதற்கு விடைதருமாறு வேண்டி எழுந்தார்கள், சுவாமிகள், "அவசரம் வேண்டாம். அரை மணியத்தியாலம் கழித்துச் செல்லலாம்" என்றார்கள். சரியாக அரை மணித்தியாலம் கழிந்து அவர்களிடம் ஓர் தந்தி வந்தது. அதிபருடைய உறவினர் முறையினர் ஒருவர் இறந்துவிட்டதாக வந்த தந்திதான் அது. அவர் அப்பொழுதே சென்றிருந்தால் இத்தந்தியைப் பெற்றிருக்க முடியாது. மரணச் சடங்கில் கலந்திருக்க முடியாது. அதிபர் அவர்கள் முகமெல்லாம் கண்ணீர்சொரிய விடை பெற்றார்கள். சுவாமிகளைத் தமது இல்லத்திற்கு வந்து புனிதப்படுத்துமாறு அழைத்தார்கள். சுவாமிகளும் கையசைத்து போகுமாறும் தாம் வருவதாகவுங் கூறினார்கள்.

சுவாமிகள் குறிப்பிட்ட பிரகாரம் இன்று வந்துள்ளார்கள். மாணவர் ஒவ்வொருவரும் வீழ்ந்து வணங்கிச் சுவாமிகளுடைய ஆசீர்வாதம் பெறவேண்டும் என்ற ஆசையினால் மாணவர்களுடைய வணக்கம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. "நாமும் இவர்கள் பின்னே போனால் நமக்கும் தரிசனம் கிடைக்கும்" என்று கூறிய பண்டிதர் அடியேனையும் அழைத்துச் சென்றார். இருவரும் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து எழுந்து நின்றோம். எமதிருவர் நெற்றியிலும் விபூதியைப் பூசிய சுவாமிகள் "எல்லாங் கைகூடும்" என்று கூறி இருக்குமாறு பணித்தார்கள். சுவாமி சந்நிதியில் கண் மூடித் தியானத்தில் இருந்தோம். அன்றுதான் அடியேன் தியான சுகத்தை உணர்ந்தேன். அதிபர் அவர்களுக்கும் பண்டிதர் அடியேனை அறிமுகம் செய்து வைத்தார்கள். கொழும்பு இராமச்சந்திரரைத் தெரியுமா? என்று சுவாமிகள் கேட்டார்கள். "ஆம்" என்று பதில் அளித்தேன். "அவர் ஒரு நல்வழிகாட்டி" என்று சுவாமிகள் கூறினார்கள். நாங்கள்

இருவரும் விடைபெற்றுக்கொண்டு வெளியே வந்தோம். வெளியே வந்ததும், அன்பர் கிருஷ்ணபிள்ளை அவர்கள், சுவாமிகள் "எல்லாங் கைகூடும்" என்று கூறினார்களே என்ன நினைத்து வந்தீர்கள்? என்று கேட்டார். எனக்கு ரமண பகவானுடைய தரிசனம் எப்போ கிடைக்கும்? என்பதுதான் அடியேனுடைய உள்ளத்தில் இருந்த வேண்டுதல் என்று கூறினேன். அந்த ஆண்டு கம்பளையில் நடைபெற்ற பகவான் ரமண மகரிஷியினுடைய ஜயந்தி விழாவிற்கு இராமச் சந்திரனார் அவர்களும் வந்திருந்தார்கள். அடியேனும் பங்குபற்றச் சென்றிருந்தேன். திரு இராமச்சந்திரனார் அவர்கள் தமது உரையில், "கடையிற் சுவாமிகள், குழந்தை வேற் சுவாமிகள், அருளம்பல சுவாமிகள் மூவரும் பெரும் பாலுஞ் சஞ்சாரஞ் செய்த இடமும், தொடர்பாக நெடுநாட்களுக்குத் தங்கியிருந்த இடமும் வண்ணார் பண்ணையாகும். அப்பிரதேசத்திற் சிவன் கோயிலடியி விருந்து சிவலிங்கப்புளியடி வரையுமுள்ள பகுதியிற் சைவ வாழ்வுக்கான நற்பண்புகள் இன்றும் திகழக் காண் கின்றோம். நாவலர் பள்ளிக்கூடம், இந்துக் கல்லூரி, நாவலர் மணிமண்டபம், சிவதொண்டன் நிலையம் என்ற சிறந்த சைவ ஸ்தாபனங்கள் நான்கும் அப்பகுதியிலேயே உள்ளன." இப்பேச்சைக் கேட்டதும் இந்த இடங்களைப் பார்க்க வேண்டும் என்றொரு தாகம் ஏற்பட்டது. ஒருநாள், அப் பக்கமாகச் செல்லும்போது சுவாமிகள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக் கண்மையிலுள்ள சிவலிங்கப்புளியடி என்னுமிடத்தில், முன்னாள் கல்விப்பகுதியில் வேலை பார்த்த அன்பர் திரு. எஸ். சிவசுப்பிரமணியம் அவர்கள் இல்லத்தில் வந்திருக்கிறார்கள் என்பதைக் கேள்விப்பட்டேன். அங்கு சென்று இரண்டாம் முறையும் சுவாமிகளைத் தரிசிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. யோகர் சுவாமிகளுடைய தரிசனமும் பலமுறை அந்த எல்லைக்குள்ளே தான் அடியேனுக்குக் கிடைத்ததைச் சிந்திக்கும்போது அப்பகுதி, அடியார்களுடைய பாததூளிபட்டுப் பரிசுத்தமான சிவயோக பூமி என்றே சொல்லத்தோன்றுகின்றது உலகெங்கணும் உள்ள சக்தி பீடங்கள் அறுபத்து நான்கில் நயினாதீவு நாக பூஷணி ஆலயமும் ஒன்றாகும். இலக்கியங்களில் வரும் மணி பல்லவம் என்பதும் இதுவே. மணிமேகலையும் மணிமேகலா தெய்வமும் வரப்பெற்ற இடமாகும். நயினாதீவு முற்காலத்தில் சிறந்ததோர் துறைமுகமாகவும் விளங்கியது. மணித்தீவு, மணிநாகதீவு, நாகதீபம் என்ற பெயர்களும் இத்தீவிற்கு உண்டு. பாரத நாட்டிலிருந்து வருவோர் அம்பிகையைத் தரிசிக்கத் தவறுவதில்லை. நான்கே நான்கு மைல் சுற்றளவுள்ள அத்தீவில் பெரும் பகுதியோர் சைவ வேளாண் மரபைச் சார்ந்தவர்களாகும். இம்மரபில் ஆறுமுகம் என்னும் பெரியார் ஒருவர் வாழ்ந்தார். அவருக்கு ஒரு மகன். அம்மகனுக்கு முத்துக்குமாரசாமி என்று நாமகரணம் சூட்டினர் பெற்றார். இந்த முத்துக்குமாரசாமியே பிற்காலத்தில் நயினாதீவுச் சாமியார் என்று அழைக்கப்பட்டார். உரிய காலத்தில் ஆரம்பக்கல்வி பெற்றார். அக்கால இளைஞர்களில் பெரும்பாலோர் ஆரம்பக்கல்விமுடிந்ததும் முடியாததுமாக யாழ்ப்பாண நகருக்கோ கொழும்புக்கோ அன்றி கண்டி போன்ற பட்டினங்களுக்கோ சென்றுவிடுதல் வழக்கமாக இருந்தது. முத்துக்குமாரசாமி ஆரம்பக்கல்வி முடிந்ததும் கொழும்புக்குச் சென்று ஒரு வர்த்தக நிலையத்தில் வேலைக்கு அமர்ந்தார். முத்துக்குமாரசாமி வர்த்தக நிலையத்தில் சிப்பந்தியாக வேலை பார்த்தாலும் மனம் இறை பணியையே நாடி நின்றது. ஒருநாள் வர்த்தக அதிபர் இவரை ஏசிவிட்டார். அந்த வன்சொல்லை அவரால் பொறுக்க முடியவில்லை. ரமண பகவானுக்குப் பதினாறு வயதாயிருக்கும் போது இவரது தமையனார் இவர் ஒழுங்காகப் படிப்பதில்லை என்பதை மனதிற் கொண்டு இப்படிப்பட்டவனுக்கு இங்கு என்ன வேலை? என்று ஏசினார். இந்த ஏச்சு மனதில் தைக்க, "இது நல்ல விஷயத்தை நாடிச் செல்கிறது. இதை யாரும் தேடவேண்டாம்" என்று ஒரு கடிதத்தில் எழுதி வைத்துவிட்டுத் திருவண்ணாமலைக்குச் சென்றுவிட்டார். இவருடைய துறவுக்கு இவரது தமையனாரே காரணம் ஆனார். இச்செய்தி போன்றுதான் முத்துச்சாமியும் ஒரு சீட்டுக்கவி மாத்திரம் எழுதிவைத்துவிட்டு யாருக்கும் சொல்லாமல் கொள்ளாமல் கடையை விட்டுச் சென்று விட்டார். கவி ஒரு விரசமான கவிதான். ஆனால் அந்த நேரத்து மன உணர்வை அக்கவி படம் பிடித்துக் காட்டுகின்றது. பல இடங்களிலும் தேடினார்கள் ஊரிலும் தேடினார்கள். முத்துக்குமாரசாமி சென்ற இடத்தை யாரும் அறியார். துறவுக்கேற்ற பக்குவநிலை ஏற்படும்போது சிறு சம்பவங்கள் கூடத் துறவுக்குக் காரணமாக அமைந்து விடுகின்றன. அக்காலத்தில் இந்தியாவுக்குச் சென்று வருவதில் எந்த விதக் கஷ்டமும் இருக்கவில்லை வீட்டிலே யாருடனாவது கோபித்துக்கொண்டால் காசிக்கோ, சிதம்பரத்திற்கோ சென்றுவிடுவதாகச் சொல்லி உடனே சென்று விடுவார்கள். அங்கெல்லாம் சுற்றி அலைந்துவிட்டுத் திரும்பி வருவோரும் உண்டு. காவிதாங்கிச் சந்நியாசியானவர்களும் உண்டு. முத்துக்குமாரசாமியாருடைய உள்ளம் இறைவனை நாடி இருந்தமையால் தலயாத்திரையை மேற்கொண்டார்.

"மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கு வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே" என்ற தாயுமானாரின் வாக்குப்படி இவரது யாத்திரை வீண்போக வில்லை. இவரிடத்து விளங்கிய தெய்வபக்தி ஞானம், தூய்மை, மனஅடக்கம், இன்சொல், அருளோடு கூடிய நோக்கு, எந்த நேரமுஞ் சிவசிந்தனை ஆகிய குணங்கள் இவரைத் தகுந்த ஒரு குருவிடம் கொண்டு. சென்று சேர்த்தன. அவரோடு பல ஆண்டுகள் தங்கிக் குரு. உபதேசமும், சந்நியாசமும் பெற்றுக்கொண்டார். இவரது பக்குவ நிலை அறிந்த குருநாதர் நீ உனது ஊருக்குச் செல்லலாம் என்று உத்தரவு கொடுத்தார். குருநாதரைப் பிரிய மனமின்றிப் பிரிந்து ஊர்நோக்கி வந்தார். பல ஆண்டுகளுக்குப் பின் நீண்ட சடாமுடியுடன் காவி உடை தரித்த சுவாமியார் ஒருவர் நயினாதீவில், உலாவுவதை நயினாதீவு மக்கள் பார்த்தனர். எங்களுடைய ஆறுமுகத்தாரின் மகன் முத்துக்குமார சாமியைப் போல அல்லவா தோற்றம் இருக்கிறது என்று சிலர் தமக்குள்ளே பேசிக்கொண்டனர். வேறு சிலர் அதற்கு மறுப்புத் தெரிவித்தனர், முத்துக்குமாரசுவாமி இருக்கும். இடமோ

போன இடமோ யாருக்கும் தெரியாது. அவர் உயிரோடு இருக்கிறார் என்பதே சந்தேகம் என்றனர். மிக. நெருங்கிய உறவினர் முத்துக்குமாரசாமியிடம் நெருங்கிப் பழகி அவர் தமது முத்துக்குமாரசாமி தான் என்று தெளிந்துகொண்டனர். உற்றார் உறவினர் அவரை அணுகித் தமது இல்லத்திற்கு வருமாறு அழைத்தனர். அவர் யாருடைய இல்லத்திற்கும் செல்வதற்கு மறுத்து விட்டார். நாளொரு கோயிலில் சென்று தங்கி வந்தார். கோயில் மண்டபங்களையே தமது வசிப்பிடமாகக் கொண்டார். அவ்வூரவர்களுக்கு ஆறுமுகத்தின் மகன் முத்துக்குமாரசாமியைத்தான் தெரியுமே தவிர, இப்போது வந்திருப்பவர் எந்த நிலையில் உயர்ந்து வந்துள்ளார் என்பதை அறிந்து கொள்ள அவர்களால் முடியவில்லை. முத்துக்குமாரசாமிக்குப் பயித்தியம் பிடித்து அலைகிறான் என்றனர். சாமியாராய்ப் போய்விட்டான் என்றனர் வேறு சிலர். இந்த வயதிலை இவனுக்கென்ன சாமி வேடம் என்றனர் வேறு சிலர். நல்லதொரு கலியாணம் செய்து வைத்துவிட்டால் இந்தச் சாமிப்பயித்தியம் எல்லாம் போய்விடும் என்றனர் இன்னுஞ் சிலர். கோயில் மண்டபங்களிலே படுத்துறங்கித் தானும் தன்பாடுமாய்த் திரிந்த சுவாமியார் என்ன சாப்பிடுகின்றார்? என்பதை யாரும் அறியார். தங்கள் இல்லத்திற்கு வரவழைத்த உற்றார் உறவினரே அவர் இருக்குமிடந்தேடிச்சென்று உணவு கொடுத்திருக்கலாம் அல்லவா? அவர்களுக்கே அவ்வளவு சிந்தனை ஓடவில்லை. மற்றவர்களைப்பற்றிக் கூறுவானேன். நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர் இல்லற ஞானியாகிய இராமச்சந்திரா அவர்களது வாழ்க்கை. பெரும்பான்மையும் கொழும்பை மையமாக வைத்தே அமைந்தது. தாயாரின் மரணச் சடங்கை முன்னிட்டு நயினாதீவுக்கு வந்த இராமச்சந்திரனார் தமது மைத்துனர் ஒருவர் மூலம் நயினாதீவுக்கு வந்திருக்கும் முத்துக்குமாரசாமியைப்பற்றிக் கேள்வியுற்றார். கேள்வியுற்ற உடனேயே அவரைத் தரிசிக்க வேண்டும் என்ற தாகமும் ஏற்பட்டுவிட்டது. அன்றிரவே அதிகாலையில் செல்வதாக இருவரும் தீர்மானித்துக் கொண்டனர். இருவரும் அக்கமும் பக்கமுமாகப்படுத்துக்கொண்டனர். அதிகாலையில் நான்கு மணிக்கு இருவரும் எழுந்து பிள்ளையார் கோயிலை நோக்கிச் சுவாமியாரிடம் செல்வதாகவும் அங்கு இல்லையேல் திரும்பி விடுவதாகவும் கூறிக்கொண்டனர். போகும் வழியில் முருகன் கோயில் கிணற்றுக்குச் சென்று கை கால் முகம் கழுவிக்கொண்டனர். பலபல என்று விடியும் நேரம். முருகப்பெருமானைத் தரிசித்து விட்டுத் திரும்பினார்கள். நால்வரையும் ஆட்கொள்ளவந்த தட்சணாமூர்த்தி கல்லா விருட்ச நிழலிலே காணப்பட்டதுபோல தேடிச்சென்ற சுவாமிகளும் மரம் ஒன்றின்கீழ்க் காட்சி கொடுத்தார். இரும்பைக் காந்தம் இழுப்பதுபோல இராமச்சந்திரனார் சுவாமிகளுடைய சக்தியால் கவரப்பட்டு அவர் பாதம் தொழுது பக்கத்திலே அமர்ந்தார். இராமச்சந்திரனாரை உற்றுப் பார்த்த சுவாமியார், "நீயும் நம்ம பட்டிதான். ஆத்மீக விஷயத்தில் அவசரப்படக்கூடாது" என்று தமது பேச்சை ஆரம்பித்தார். "பிரிந்த அம்மையார் உனக்கு மாத்திரம் தாயார் அல்லர். எனக்கும் இந்த ஊர் மக்கள் சகலருக்குமே அவர் தாயார் ஆவர். பெரிய இல்லற ஞானி அவர். அன்னதானஞ் செய்வதில் அவருக்கு ஒரு தனி ஆனந்தம்" என்று இராமச்சந்திரனாரின் தாயாருடைய தெய்வீகக் குணாங்களை விபரித்த பின்பு ஆன்மீக சம்பந்தமான விஷயங்களுக்கு வந்தார். மகாத்மா காந்தியுடன் இராமச்சந்திரனாருக்கு இருந்த தொடர்பு, யோகர் சுவாமிகளுடன் இருந்த அத்யாத்ம உறவு, சுவாமி இராமதாசர், சுவாமி சிவானந்தர் ஆகியோருடைய நூல்கள் மூலம் பெற்ற அறிவு முதலியவற்றைத் தாமே சொல்லிவிட்டு இராமச்சந்திரனாரைப் பேசத் தூண்டும் முறையில் சம்பாசணையைத் திருப்பினார். இராமச்சந்திரனாரின் பேச்சு ஆரம்பமாகியது. பெரிய கடைச் சுவாமியின் அடியார்கள் என மதிக்கப்பட்ட காசிச் சுவாமி, கற்கண்டுச் சுவாமி ஆகிய இருவரின் ஆசிகளைத் தான் மூன்றாவது வயதில் பெற்றதை எடுத்துச் சொல்லிவிட்டு, யாழ்ப்பாணத்தில் ஆங்கிலக் கல்வி கற்கும்போது சந்தித்த நல்லூர் செல்லப்பாச் சுவாமிகள் ஓட்டுமடம் பொன்னப்ப சுவாமிகள் இருவரையும் குறிப்பிட்டார். பின்பு உத்தியோகமான பின் சந்தித்த அருளம்பல சுவாமிகள். வரத சுவாமிகள் ஆகிய இருவரும் காட்டிய விசேட அன்பையும் விளக்கினார். கொழும்பில் படிக்கும்போது ஆனைக்குட்டிச்சுவாமிகளைத் தரிசிக்கவில்லையோ? என்றொரு கேள்வியைத் தூக்கிப்போட்டார் சுவாமியார். இருமுறை சந்தித்ததாகக் கூறினார் இராமச்சந்திரனார். "அவர் உனக்கு ஒன்றும் கூறவில்லையா?" இரண்டாம் முறை அவரது தரிசனம் தமக்குக் கிடைத்தது அஞ்சுலாம்படியில் என்றும், அப்போது அவர் ஒரு கள்ளுத் தவறணையின் எதிர்ப்பக்கக் கானுக்குள் நின்றுகொண்டு, அங்கு வந்து மது அருந்திக்கொண்டிருந்த ஆண்களையும் பெண்களையும் பார்த்தவண்ணம் சிரித்துக்கொண்டிருந் தார் என்றும் தம்மை வணங்கிய இராமச்சந்திரனாரைப் பார்த்து "நீயும் இப்படி ஒருநாள் குடித்துவிட்டுக் கத்தாடுவாய்" என்று சொல்லிப் புன்னகை செய்தார் என்றும் கூறினார். இதனைக் கேட்டுப் புன்முறுவல் பூத்த சுவாமிகள் "நீ இன்னும் சந்திக்க வேண்டிய ஒரு மகான் இருக்கிறார் அவர் திருவண்ணாமலையில் எழுத்தருளியுள்ளார். ரமணமகரிஷி என்பது அவருடைய பெயர். அவரைப்பற்றி நீ கேள்விப்பட்டதில்லையோ?" என்றார். "கேள்விப்பட்டிருக்கிறேன் சுவாமி. அவரது வரலாற்றையும் மௌன உபதேச மகிமையையும் படித்துமிருக்கிறேன். ஆனால் அழைப்பு இன்னுங்கிட்டவில்லை. திருவருள் கூட்டுங்காலம் வரவில்லைப் போலும்" என்று பதில் கூறினார் இராமச்சந்திரனார். "ஆம் ஆம் அவனன்றி அணுவேனும் அசையாதென்ற ஆப்தர் மொழியின் உண்மை ஆன்மீக வாழ்வில் தான் தெளிவாகப் பிரதிபலிக்கின்றது, திருவாதவூரர் திருப்பெருந்துறைக்குப் போனது பாண்டியன் கட்டளைப்படி குதிரை வாங்கவா? அல்லது குரு தரிசனம் பெறவா? தாயுமானவர் மௌனகுரு வந்திருக்கிறார் என்று கேள்விப்பட்டா திருச்சி மலைக்கோயிலுக்குப் போனவர்? வழக்கம் போல் தெய்வ ஆராதனைக்கல்லவோ சென்றவர்' என்று கேள்வியும் கேட்டு விடையும் தானே கூறினார். "சிறு வயதிலேயே உன்னை நாகபூஷணி அம்பாள்

சந்நிதானத்தில் ஸ்ரீ அருணாசலேஸ்வரருக்கு அர்ப்பணஞ் செய்ததை அறியாயா? திருவண்ணாமலையில் அந்த மகான் உனக்குத் தாயாகவும் தந்தையாகவும் குருவாகவும் விளங்குவார். உனது வருகையை எதிர்பார்த்துக்காத்துக் கொண்டிருக்கிறார்" எனறு கூறினார். சுவாமியாரின் வார்த்தைகளில் மனதைப்பறிகொடுத்த இராமச்சந்திரனார் உள்ளம் உருகி ஆனந்தக்கண்ணீர் சொரிந்தார். வைகறை இருளும் அகன்றது. சுவாமிகளுடைய திருமுகமும் தேஜோமயானந்தமாக விளங்கியது. இராமச்சந்திரனார் எழுந்து அடியற்ற மரம்போல் சுவாமிகளுடைய பாதத்திலே வீழ்ந்து தமது கண்ணிரால் பாதங்களைக் கழுவினார். சுவாமிகள் அவருடைய சிரசிலே தமது திருக்கரத்தைக் காட்டி ஆசீர்வதித்தார். நயினாதீவிலுள்ள மக்கள் சுவாமிகளை முத்துக்குமாரசாமியார் என்றே அழைத்தனர். ஆனால் அயலூரவர்கள் சுவாமியாரைப் பெயர் சொல்லி அழைக்க அஞ்சினர் போலும் நயினாதீவுச் சுவாமியார் என்றே அழைத்தனர். திருவாதவூரர் செம்மாங்குடி சீர்காழி போன்ற பெயர்களும் இவ்வண்ணம் வந்தவையே. ஊரைச் சொன்னாலும் பேரைச் சொல்லக்கூடாது என்ற தத்துவம் இப்படி வந்ததேதான். சுவாமிகளுடைய குருநாதன் பெரியானைக் குட்டி சுவாமிகளே தான். குருநாதன் அவருக்கு என்ன பெயரை வைத்தாரோ யாரறிவார்? இப்படி ஊர் பேர் தெரியாது, உலகுக்குத் தம்மைக் காட்டிக்கொள்ளாது மறைந்த மகான்கள் எத்தனை பேரோ யாரறிவார்

சுவாமியார் என்று பெயர் எடுத்துவிட்டால் அவர்களைச் சுற்றி ஒரு கூட்டம் எப்பொழுதும் இருந்து கொண்டேதான் இருக்கும். நயினாதீவுச் சுவாமிகளும் அதற்கு விலக்கானவர் அல்லர். சுவாமிகள் தமது அடியார் கூட்டத்தோடு வடபகுதியில் உள்ள எல்லா ஆலயங்களுக்கும் யாத்திரை செய்தருளினார். சுவாமியை நாடிவந்தவர்கள் யாவரும் ஏதோ ஒரு வகையில் பயன் பெற்றே சென்றனர். சுவாமி கொடுத்த விபூதியைப் பெற்று உடல்நோய், உள்ள நோய், தீர்ந்தவர் ஆயிரத்திற்கதிகமானவர்கள். ஆத்மஞானம் நாடி வந்தவர்கள் ஆத்மஞானம் பெற்றனர். சுவாமிகளுடைய சீடர் கூட்டம் இன்று எல்லா ஊர்களிலும் உண்டு. தமது சீடர்களில் முதல்வரான சண்முகரத்தினம் அவர்களைக் கொண்டு நயினாதீவு தென்மேற்குப் பகுதிக் கடற்கரையில் ஒரு தீர்த்தக்கேணி அமைப்பித்தார். இன்றும் நயினாதீவு, நாகம்மாள் தீர்த்தம் ஆடிவருவது இத்தீர்த்தக் கேணியில்தான் என்பது குறிப்பிடத்தக்கதொன்றாகும். சுவாமிகள் இயல்பாகவே கவிபாடும் திறமை வாய்ந்தவர். இவரியற்றிய தனிப்பாடல்கள் பல உள்ளன. நாகேஸ்வரி தோத்திரமாலை, நாகபூசணி அந்தாதி போன்ற நூல்கள் அன்னாரின் சமாதிநிலையத் தொண்டர் சபையினரால் வெளியிடப்பெற்றுள்ளன. அடியவர்களுடைய இன்னல்களை வாக்கினாலும் நோக்கினாலும் தீர்த்தருளிய சுவாமியவர்கள் 1949ஆம் ஆண்டு தை மாதம் 26ஆம் திகதி தமது அன்பரின் இல்லத்தில் யாழ்ப்பாணம் சிவலிங்கப்புளியடியில் சமாதிநிலை எய்தினார். சுவாமிகளுடைய திருவுளப்படி அவரின் பூதஉடலை நயினாதீவு காட்டுக் கந்தசுவாமி கோயிலின் மேற்குப் புறத்தில் அடியார்கள் சமாதி வைத்தனர். இன்று அதன் மேல் ஒரு சோமாஸ்கந்த லிங்கம் பிரதிட்டை செய்யப்பட்டு நித்திய பூசை நடைபெற்று வருகிறது. சமாதி நிலையத் தொண்டர் சபையினரால் ஒரு மடாலயம் தாபிக்கப்பெற்று ஆண்டுதோறும் அன்னாரின் ஞாபகார்த்த தினம், பூசை, வழிபாடு, மகேசுவரபூசை என்பனவற்றுடன் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான அடியார்கள் சென்று சமாதியைத் தரிசித்துச் சாந்தி பெறுகின்றனர்.

(நன்றி: "ஈழத்துச் சித்தர்கள்", 1980ஆம் ஆண்டு இலங்கை சாகித்திய மண்டலப் பரிசு பெற்றது).

(குமரன் பதிப்பகம், 27, குமரன் காலணி, 2வது தெரு, வடபழனி, சென்னை - 600026)



எனக்கென்றோர் தனிவரம் யான் கேட்கவில்லை,
என்னினத்தார் வாழ்வொன்றே கருதவில்லை,
உனக்கெல்லா உயிர்களுமே சொந்தமென்ற
உண்மையையான் ஒருபோதும் மறந்ததில்லை
சினங்கொண்டு தீங்கிழைக்குந் தீயர் தாமும்
சீலமுறவேண்டு மென்றே வேண்டுகின்றேன்
தனக்கொருவ ரொப்பில்லாத் தாயே! இந்தத்
தாரணியில் சாந்தியையே தருவாய் நீயே!

- இல்லறஞானி க.இராமச்சந்திரா

(தேவி பஞ்சகம்)

ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமார சுவாமிகளால்
(நயினைச் சுவாமிகள்)
பாடப்பெற்ற

நயினை நாகேஸ்வரி தோத்திரமாலை

கற்பகக் கன்றைக் கடம்பனைத்
தந்த கனகவரை
அற்புத மோன அருள் நாகம்
தாங்கும் அமிர்த வல்லி
தற்பரை வாமம் தழைத்தே
சகல உயிர்களுக்கும்
நற்பதியே எனைப் பெற்ற
சதானந்த நாகம்மையே. 1

பெற்றதாய் பார்க்கப் பிள்ளையான் வருந்திப்
பிறப்பென்னும் சாகரத்தாழ
நற்றவ மில்லா என்னைநீ விட்டால்
நியாயமோ நல்லுரையாகச்
செற்றவக் கரையி லேறியான் உய்யத்
துணைஉனை யன்றியாருளர்சொல்
கற்றவர்க் கினியாய் நயினயம் பதிவாழ்
கண்மணி நாகபூஷணியே 2

அம்பிகை அமலை அரியவர்க்கெட்டா
ஆரணி பூரணிகௌரி
நம்பினோர்க் கின்பம் தரும்மனோன்மணியே
நற்றவரோ டுறவாக
வெம்பி வாடாதுன் கடன்வினை நீக்கி
விடுவதுன்கடன் வினைநீக்கித்
தம்பிரான் மோன சற்குரு போகம்
தந்தருள் நாகபூஷணியே 3

தந்தருள் ஞானசாதனம் சத்தியம்
தவறிலா நெறிபொறை அறிவு
பந்தமால் எய்யாப்பக்தி பேரன்பு
பகலிரவுன் அரவிந்த
அந்தமே யில்லா அடியிணை மாறா
தருள்புணர்ந் தோங்குநற்றியான
சிந்தையாய் மோன தேசிகன் திருத்தாள்
சேர்த்தருள் நாகபூஷணியே 4

சேர்த்தருள் அன்னே தீவினைகழியச்
ஜெனனமு மரணமுமொழியக்
காத்தருள் என்னை நின்கையில் தந்தேன்
கருணையே ஒளிவிழி பரப்பிப்
பார்த்தருள் ஈன்ற பகவதி ஆயி
பங்கயத்தாள் முடிசூடி
நீத்தருள் பாவ நிலைகெட மோன
நிலையருள் நாகபூஷணியே 5

பாவமே விளையும் பாழ்வினைஏதும்
பற்றிடாதிருக்க நின்பாலே
தாகமே மறவாதோர் நிலைபக்தி
தண்ணளி வளமருள் ஞான
யோகமே உதவி உலகெலாமீன்ற
உத்தம ருக்குற வாகிப்
பாகமே நீங்காப் பரமபரானந்த
பதமருள் நாகபூஷணியே 6

கற்றவர்க் கினியர் நயினையம் பதிவாழ்
காரணிநாரணன் தங்காய்
மற்றவ ரறியா மரகத வரையின்
வாமமே வளர்பசுங் கொடியே
நற்றவ ரோடு சேயெனை இருத்தி
நாதநாதாந்தமும் காட்டி
முற்றுமாய் நிறைந்த பூரணானந்த
முத்திதா நாகபூஷணியே 7

முத்தியாங் கரையைப் பற்றி நானுய்ய
முன்னதாய் முரணலை மோதி
வற்றிடாமாய வாரிதி யதனில்
மயங்கி வீழ்ந்தாழ்ந்திடா வாறு
சத்தியாய்ச சிவமாயத்தனிப்பரம் தானே
தானுமாய் நின்ற தற்பரையே
சித்தெலாம் வல்லாய் சேயெனைக் காத்தாள்
திருமணி நாகபூஷணியே 8

காத்தெனையாளும் கனகமாவரையே
கமலையும் காயையும் மருங்கே
நீத்தவர் அமரர் கருடகெந்திருவர்
நின்பணிபுரிபவர் அன்னே
வேர்த்தவ ராய்நின்றுயிர்த் திரளாட்டு
வினையெலாம் பற்றி நீறாகப்
பார்த்தருள் விழியைப் பரப்புதி ஈன்ற
பார்ப்பதி நாகபூஷணியே 9

பார்ப்பதியேக பதியரன்பங்கி
பங்கயச் சிருட்டி பல்லுயிர்க்கும்
கார்ப்பதி பதியாய்க் கதிதருங்கா
தங்கையே கருணைமாகடலே
சீர்ப்பதியாகித் தெளிவுற ஈன்ற
சேயென உணர்த்தி ஈதுஎன்றே
பார்த்துளரா தாண்டருள் புரிஞான
அம்பிகையே நாகபூஷணியே 10

நயினை நாகபூஷணி அம்மன் திருவூஞ்சல்

ஸ்ரீலஸ்ரீ ம. அமரசிங்கப் புலவர்

காப்பு

சீர்பூத்த தென்னிலங்கை தன்னின் மேவும்
திரைபூத்த கடனயினை நகரில் வாழும்
ஏர்பூத்த நாகேசு வரியைப் போற்றி
இசைபூத்த செந்தமிழாலூஞ்சல் பாட
ஆர்பூத்த சடைமௌலி யரனா ரீன்ற
அருள்பூத்த வறிவிச்சை தொழிலென் றோதும்
கார்பூத்த மும்மைத்த களிற்றின் பாதம்
கரம்பூத்த மலர்கொண்டே கருதி வாழ்வாம். 01

பலனோங்கு செம்பவளங் கால்க ளாக
பகர்வைர ரத்தினமே விட்ட மாக
குலனோங்கு வெண்டாளங் கயிற தாக
கூறரிய மாணிக்கம் பலகை யாக
வலனோங்கு மூஞ்சன்மிசை யினிது வைகி
மலர்மகளுங் கலைமகளும் வடந்தொட் டாட்ட
நலனோங்கு திருநயினை நகரில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல். 02

உவகையொடு மலரயன் மால் கரங்கள் கூப்ப
ஒசைமணி வாயிலட்ட பாலர் காப்ப
தவமறையோர் தூபமொடு தீபங் காட்ட
தாழ்ந்துகண நாதர்புகழ் மாலை சூட்ட
அவரிடப துவசமகள் வாணந் தூர்ப்ப
அனந்தன்முதலுர கர்செய செயவென் றார்ப்ப
நவையறுசீர் நயினைநகர் தன்னில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல். 03

கொம்பினொடு துடிமுரசு முழவா மோங்க
குடைகளுட னாலவட்டம் குழுமி யோங்க
தும்புருநா ரதர்வேத கீதம் பாட
தொண்டரக மகிழ்ந்துசுக வாழ்வு கூட
வம்பவிழு மலர்மாரி யமரர் பெய்ய
வரமுனிவ ரடிபரவி யாசி செய்ய
நம்புமடி யவர்க்கருளி நயினை வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல். 04

அன்னநடை யயிராணி கவிதை தாங்க
அயிலைநிகர் விழியரம்பை களாசி யேந்த
வன்னமுலை யுருவசிவெண் கவரி வீச
மணிகொள்கிரு தாசிகமண் டலங்கைக் கொள்ள
மின்னிடைமே னகைவெளிலை பாகு நல்க
வியந்துதிலோத் தமைவிகித நடனஞ் செய்ய
நன்னயஞ்சேர் நயினைநகர் தன்னில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல். 05

மதிமுகமா லினிபனிநீர் வாசந் தூவ
மயிலைநிகர் சுகேசமல ரடிக ணீவ
விதிமுறைமங் கலைமுதலோ ராலஞ் சுற்று
வேதியர்தம் மகளிர்சுப வசனஞ் சாற்ற
அதிவினய மொடுசுமனை யாடி காட்ட
அன்பினநிந் திதைசுகந்த வருக்க நீட்ட
நதியுலவு நயினைநகர் தன்னில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல். 06

கோலமுறு வைரமணிச் சுட்டி யாட
குலவுமெழின் மாணிக்கத் தோடு மாட
வாலியமுத் தாரமொடு மதாணி யாட
வயங்குவளை தொடியுடனங் கதமு மாட
சாலவொளிர் பாடகமுஞ் சிலம்பு மாட
தண்டையொடு பாதசரந் தயங்கி யாட
ஞாலமுக மெனவிளங்கு நயினை வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல். 07

முந்துதவ மாதர்துதி கூறி யாட
முகமனொடு புனன்மாதர் முன்னின் றாட
வந்தனையோ டுரகமட மாத ராட
வரையிலுறை மாதரடி வணங்கி யாட
கந்தருவ மாதரிசை பாடி யாட
கருதரிய புவிமாதர் களிகொண் டாட
நந்துதவழ் கழனிசெறி நயினை வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல். 08

ஆரணியே யம்பிகையே யாடீ ரூஞ்சல்
அந்தரியே சௌந்தரியே யாடீ ரூஞ்சல்
பூரணியே புங்கவியே யாடீ ரூஞ்சல்
புராதனியே புராந்தகியே யாடீ ரூஞ்சல்
காரணியே காருணியே யாடீ ரூஞ்சல்
கன்னிகையே கண்மணியே யாடீ ரூஞ்சல்
நாரணியே நாயகியே யாடீ ரூஞ்சல்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல். 09

பனிவரையில் வருமுமையே பரையே போற்றி
பகருமற மெண்ணான்கும் வளர்த்தாய் போற்றி
தனிமுதலாம் பரமனிடத் தவளே போற்றி
தணப்பில்பல சக்திவடி வானாய் போற்றி
இனிமைமிகு மாரமுதே கனியே போற்றி
எவ்வுயிர்க்குந் தாயாகி இருந்தாய் போற்றி
தனிகுலவு நயினைநகர் தன்னில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல். 10

ஆவாழி யந்தணரோ டரசர் வாழி
அரியதவ மகநிகமா கமமும் வாழி
தாவில்குல மங்கையர்கள் கற்பும் வாழி
சைவசமய முமறமும் தழைத்து வாழி
பாவார்வெண் ணீறுபஞ்சாட் சரமும் வாழி
பாடியவூஞ் சற்றமிழும் பாரில் வாழி
நாவலர்கள் புகழ்நயினை நகரும் வாழி
நாகபர மேஸ்வரியும் வாழி வாழி. 11

இந்து அரசியற் கொள்கை

– சப்தாங்கக் கொள்கை : ஒரு நோக்கு –

த.கி.ஷர்மிதன் B.A(Hons)

முகவுரை

பண்டைய இந்தியாவில் வழங்கிய அரசு முறைகளுள் 'இந்து அரசுமுறைமை' காலத்தால் முந்திய ஒன்றாகும். இது தற்கால அரசுமுறைகளுக்கும் முன்னோடியான பல சிந்தனைகளைக் கொண்ட பழைமைவாய்ந்த ஒன்றாக விளங்குகின்றது. அந்தவகையில், இந்து அரசுமுறைமைக் கொள்கைகளுள் ஒன்றான,'சப்தாங்கக் கொள்கை' (Seven-fold Policy) பற்றிப் பார்ப்பதாகவே இக்கட்டுரை அமைகிறது.

சப்தாங்கம் - பொருள் விளக்கம்

சப்தாங்கம் என்பதனை, சப்த - ஏழு, அங்கம் - பகுதி/உறுப்பு எனப் பகுத்து,"ஒரு இராச்சியத்திற்கு அவசியமாக இருக்க வேண்டிய ஏழு உறுப்புக்கள் பற்றிப் பேசும் கொள்கை" எனப் பொருள் கொள்ள முடியும். ஒரு இராச்சியம் (அரசு) கொண்டிருக்க வேண்டிய ஏழு உறுப்புக்கள் பற்றி இந்து அரசியற் பனுவல்களில் நன்கு விதந்துரைக்கப்பட்டுள்ளமை ஈண்டு குறிப்பிடற்குரியது.

மூலங்கள்

மகாபாரதம், அக்கினி புராணம், மனுஸ்மிருதி, காமாண்டக நீதிசாரம், அர்த்த சாஸ்திரம், சுக்கிரநீதி, பழந்தமிழ் இலக்கியங்கள் (புறநானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை, திருக்குறள்...), கல்வெட்டுக்கள், பிற்கால இலக்கியங்கள் முதலானவை இந்து அரசியற் கொள்கைகளுள் ஒன்றான சப்தாங்கக் கொள்கை பற்றி அறிய மூலங்களாகின்றன.

சப்தாங்கம்

சப்தாங்கம் என்பது ஒரு இராச்சியம் கொண்டிருக்க வேண்டிய ஏழு உறுப்புக்கள் ஆகும். அவை;**அரசு** *(ராஜ்யம்)*,**அமைச்சு** *(அமைச்சரவை)*,**நாடு** *(மக்கள்,நிலம்)*,**கோட்டை,செல்வம்,படை**மற்றும்**நட்பு** என்பனவாகும். இவை பண்டைய இந்து இலக்கியங்களில்,**சுவாமி** *(அரசன்/ராஜா)*,**அமாத்ய** *(அமைச்சு)*,**ஜனபதம்** (நாடு),**துர்க** *(அரண்/கோட்டை)*,**கோசம்** *(செல்வம்/கருவூலம்)*,**தண்டம்** *(படை)* மற்றும்**மித்திர** *(நட்பு)* எனச் சுட்டப்பட்டுள்ளன. இவை **தலை, கண், செவி, முகம், மனம், கை, கால்** ஆகிய மனிதவுடலுறுப்புக்களுக்கு ஒப்புநோக்கப்படுகிறன.

மேற்கூறப்பட்ட சப்த அங்கங்கள் பற்றிய குறிப்புக்கள் இந்து அரசியற் பனுவல்களில் சிறப்பாக இடம் பெற்றுள்ளன. சப்தாங்கக் கொள்கைக்கான அடிப்படையை வேத இலக்கியங்களில் கண்டுகொள்ள முடிகிறது. வேத நாகரிகத்தில் நாகரிகமான இராச்சியம் அமையவில்லை ஆயினும், பிற்கால ஒழுங்குபடுத்தப்பட்ட அரசுத் தோற்றத்துக்கான முகுள் நிலையாகக் கருதத்தக்க பல சிந்தனைகளைக் காணமுடிகிறது. அதற்கிணங்க, ராஜன் (அரசன்), சபா, சமிதி (அமாத்ய), ஜன (நாடு) மற்றும் படை போன்றன பற்றிய சிந்தனைகள் சப்தாங்கக் கொள்கையின் முகுள் நிலையாகக் கொள்ளத்தக்கவை.

பழமையான தர்மசாஸ்திரங்களில் ராஜா, அமாத்ய, விசய என்ற சொற்கள் ஆளப்பட்டிருப்பினும் கௌடில்யமே முதற்றடவையாக ராஜ்யத்துக்கு முழுமையான விளக்கம் தந்துள்ளது எனலாம். கௌடில்யம் ஆறாவது அதிகரணத்தில் ராஜ்யத்தின் சப்தாங்கங்களாக;சுவாமி (அரசன்/ராஜா), அமாத்ய (அமைச்சு),ஜனபதம் (நாடு), துர்க (அரண்/கோட்டை),கோசம் (செல்வம்/கருவூலம்), தண்டம் (படை), மித்திர (நட்பு) ஆகியவை குறிப்பிடப்படுகின்றன. இவற்றோடு பகை எனும் எட்டாவது அங்கத்தையும் விபரிக்கிறது. விஷ்ணுதர்மோத்திர புராணம், மகாபாரதம், மனுஸ்மிருதி போன்றனவும் இவ்வங்கங்கள் குறித்துப் பேசுகின்றன. மகாபாரதச் சாந்தி பருவத்தில் இராச்சியத்துக்கு எட்டு அங்கங்கள் கூறப்பட்டுள்ளன. ஆனால், எட்டாவது அங்கம் எது என்று சொல்லப்படவில்லை. பழந்தமிழ் இலக்கியங்களில் ஐம்பெரும் குழுவும் எண்பேர் ஆயமும் பற்றிக் காணப்படும் குறிப்புக்களும் திருக்குறளில் அரசனை முன்னிறுத்தி ஏனைய ஆறு அங்கங்களும் பேசப்படுவதும் சப்தாங்கக் கொள்கையோடு தொடர்புபட்டு நிற்கிறது எனலாம். சிலப்பதிகாரத்தில்,

"மேவிய கொள்கை வீதியில் செறிந்து ஆங்கு
ஐம்பெருங் குழுவும் எண்பேர் ஆயமும்
அரச குமரரும் பரத குமரரும்..."
எனவும்,திருக்குறளில்,
"படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு" - (குறள் 381)

எனவும் வந்துள்ளமை இதனை மெய்ப்பிக்கின்றன.

இவ்வாறாக இந்து அரசியற் பனுவல்களிலே சப்தாங்கங்கள் பற்றிய சிந்தனைகள் பேசப்பட்டிருப்பினும், பொருளில் நுண்ணிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. இக்குறையை நிவர்த்தி செய்தது கௌடில்யமே. சாணக்கிய சாத்திரமே சப்தாங்கம் பற்றிய தெளிவான சிந்தனையை முன்வைத்துள்ளது. இதனையே பெரும்பாலானோர் ஏற்கின்றமையும் குறிப்பிடற்குரியது. அவ்வகையில், "அர்த்த சாத்திரமே சப்தாங்கங்கள் பற்றிச்

சிறப்பாகக் கூறிற்று. ஏழு அங்கங்களைப் பற்றியும் இந்நூல் நன்கு கூறுகிறது. முழுமையாகவும் வரிசை முறையாகவும் தெரிவிக்கிறது. இதற்கு ஈடாக வேறு எந்த நூலிலும் விவரங்கள் இல்லை. ஏழு அங்கங்களையும் பகுத்தறிய உதவும் நூல் கௌடில்யமே அன்றி வேறு ஏதும் இல்லை" என *(R.S.சர்மா – 'பழங்கால இந்தியாவில் அரசியல் கொள்கைகள் நிலையங்கள் சில தோற்றங்கள்' (2010) - ப.41)*குறிப்பிட்டிருப்பது சுட்டிக்காட்ட உகந்தது.

சப்தாங்கக் கொள்கை

சப்தாங்கக் கொள்கை (Seven-fold Policy) என்பது புராதன இந்திய மற்றும் இந்து அரசியற் சிந்தனையுள் முக்கியமான ஒன்றாகும். இராச்சியம் தொடர்பான கொள்கையில் இது பிரதானமானது. ஒரு இராச்சியத்தின் பிரதான அங்கங்களாகச் சப்தாங்கங்களான; அரசு (அரசன்/இராச்சியம்), அமைச்சு, நட்பு, பொருள், படை, அரண், நாடு என்பன அமைந்திருக்க வேண்டும் என்பதே இக்கொள்கையின் அடிப்படையாகும். இவ்வேழு அங்கங்களும் உடையதே ஒரு நல்ல இராச்சியம் என்பதும் இவ்வேழு அங்கங்களும் ஒரு இராச்சியத்தின் இலட்சணம் என்பதுவும் வலியுறுத்தப்பட்டுள்ளன. அவ்வகையில், சப்தாங்கங்கள் பற்றிய விளக்கம் வருமாறு:

4.1. அரசன் (The King/ Master)

ஒரு இராச்சியத்தின் முக்கிய அங்கம் அரசனாவான். அரச இயந்திரத்தை சிறப்புறச் செலுத்தும் நற்சாரதி அவனே. அரசனை "சுவாமி" என்கிறார் கௌடில்யர். இச்சொல்லை ஆதார நூல்கள் யாவும் குறிப்பிடுகின்றன. சுவாமி எனும் சொல் தலைவர் அல்லது எஜமானரைக் குறிக்கும். இது முடியாட்சி, குடியாட்சி இரண்டுக்கும் பொருந்தும் போலும். ஏனெனில் அதன் குறைபாடுகளை அலசும்போது முடியாட்சி (வைராஜ்ய) அரசின் நிலைகளையும் சுட்டிக்காட்டுகின்றார். சுவாமி எனும் சொல் அரசனைக் குறிக்க முதல்தடவையாக அரத்த சாஸ்திரத்தில் பயன்படுத்தப்பட்டிருப்பதும் குறிப்பிடற்பாலது. சாணக்கியர் அரசினை மிக உயர்ந்த நிலையில் காணுகிறார். சுவாமி என்பவன் யார், அவனுக்கு இருக்க வேண்டிய தகுதிகள், அவனது கடமை, நற்பண்புகள் என பல்வேறு விடயங்களை விரிவாகத் தெரிவித்துள்ளார் கௌடில்யர்.

அரசன் என்பவன் சமூகத்தினதும் அறத்தினதும் காவலன். அறத்தைக் காத்து மக்களது பாதுகாப்பான நலவாழ்க்கைக்கு வழி செய்பவனே சுவாமி. சமூகத்தைக் காப்பதே சுவாமியின் பிரதான கடமை. இந்த இலக்கை எய்த அரசனுக்கு துணையாக அமைந்ததே அரசு எனப்படுகிறது. ஒரு ராஜ்யத்தின் சிறப்புப் பொருந்திய சுவாமிக்கு இருக்கவேண்டிய தகுதிகள், பண்புகளாக மேல்வருவனவற்றை எடுத்துக் கூறுகிறார் கௌடில்யர்.

- உயர் குடியில் பிறந்தவனாக இருக்க வேண்டும்.
- ஒழுக்கம், தர்மம், நீதி என்பவற்றைக் கைக்கொள்ள வேண்டும்.
- சிறந்த கல்விமானாக இருக்க வேண்டும். அனைத்துத் துறைகள் சார்ந்தும் அறிவைப் பெற்றிருக்க வேண்டும்.
- பிறர் சொத்துக்கு துராசை கொள்ளக் கூடாது.
- அகிம்சையைக் கடைப்பிடிக்க வேண்டும்.
- மாற்றான் மனைவியரின் உறவை விலக்க வேண்டும்.
- பெரியோரின் அறிவுரை கேட்டல்
- சுயகட்டுப்பாடு(ஆத்ம விரதா).
- வீரம், நேர்மை, உண்மை, மனவுறுதி, ஆர்வம், நன்றி பாராட்டல் எனப்பல நற்பண்புகள் கொண்டிருக்க வேண்டும்.
- பொருளாதாரத்தை நிர்வகிக்க சுறுசுறுப்புடன் இயங்க வேண்டும்.
- உயர் செயல் திட்டத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

அரசனது கடமைகளை இந்துப் பனுவல்கள் விவரிக்கையில், சுவாமியின் பிரதான கடமை 'அரசதர்மத்தை' நிறைவேற்றல் ஆகும். சுவாமி ராஜ்யப் பிரஜைகளின் தந்தையாகச் (பிதாவாக) செயற்பட வேண்டும். இதனை மனதிற் கொண்டே இராச்சியப் பரிபாலனம் செய்ய வேண்டியது. பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியவர்களைக் காப்பதுடன் சட்டத்தையும் ஆணையையும் பரிபாலித்து தர்மத்தைக் காப்பது சுவாமியின் தார்மீகக் கடமையாகும். இதற்கமைய ஒரு அரசனானவன் நாளாந்தம் கைக்கொள்ள வேண்டிய கடமைக்கான (செயற்பாட்டுக்கான) நேரசூசி ஒன்றையும் பரிந்துரைக்கிறது கௌடில்யம். அரசன் பகல், இரவு ஆகிய ஒவ்வொன்றையும் ஒன்றரை நேரமுடைய எட்டுச் சமபருவங்களாகப் பகுத்து கடமைகளை ஆற்ற வேண்டும் என்கிறது. இதன்படி மேல்வரும் வகையில் நாளாந்த கடமைகளை ஆற்ற வேண்டுகிறது.

- ஞாயிறு உதித்தபிறகான முதல் 1½ மணி நேரங்களில் பாதுகாப்பு, வருவாய் மற்றும் செலவினம் பற்றிய அறிக்கைகளைப் பெற வேண்டும்.
- ஞாயிறு உதித்தபிறகான இரண்டாம் 1½ மணி நேரங்களில் பொது மக்களைக் காணுதல், நகர மற்றும் நாட்டு மக்களிடம் குறைகளைக் கேட்டல்.
- ஞாயிறு உதித்தபிறகான 1½ மணி நேரங்கள் மற்றும்

நண்பகலிற்கு முந்தைய கடைசி 1½ மணி நேரங்கள் வருவாய்களையும் கப்பம் மற்றும் திறைகளையும் பெறுதல், அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகளை நியமித்தல், அவர்களுக்கு பணி ஒதுக்கீடு செய்தல்.

- நண்பகலுக்குப் பிறகான முதல் 1½ மணி நேரங்கள் கடிதம் எழுதுதல் மற்றும் அனுப்புதல், அரசவை உறுப்பினருடன் கலந்தாலோசித்தல், ஒற்றர்கள் மூலம் இரகசியத் தகவல்களைப் பெறுதல்.
- நண்பகலுக்குப் பிறகான இரண்டாம் 1½ மணி நேரங்கள் அரசனின் தனிப்பட்ட நேரம் மனமகிழ மற்றும் ஆழ்ந்து சிந்திப்பதற்கான நேரம்.
- நண்பகலுக்குப் பிறகான மூன்றாம் 1½ மணி நேரங்கள் மற்றும் ஞாயிறு மறைவதற்கு முன்னதான 1½ மணி நேரங்கள் படைகளை மேற்பார்வையிடுதல் மற்றும் மீள்பார்வை செய்தல், தளபதியுடன் ஆலோசித்தல்.
- நாள் பொழுது மாலை இறை வணக்கங்களுடன் முடிவடைய வேண்டும்.
- ஞாயிறு மறைந்தபின்னரான முதல் 1½ மணி நேரங்கள் உளவாளிகளுடன் நேர்முகம்.
- ஞாயிறு மறைந்தபிறகான இரண்டாம் 1½ மணி நேரங்கள் அரசனின் தனிப்பட்ட நேரம் குளிக்க, உணவருந்த மற்றும் வாசிக்கும் நேரம்.
- ஞாயிறு மறைந்தபிறகான மூன்றாம் மற்றும் நான்காம் 1½ மணி நேரங்கள் மற்றும் நள்ளிரவிற்குப் பிறகான முதல் 1½ மணி நேரங்கள் படுக்கையறைக்குத் திரும்பி இசை ஒலிகளைக் கேட்டபடி உறங்கப் போதல்.
- நள்ளிரவிற்குப் பிறகான இரண்டாம் 1½ மணி நேரங்கள் இசையின் ஒலி கேட்டு எழுந்தப் பிறகு, அரசியல் மற்றும் செய்ய வேண்டிய பணிகள் குறித்து ஆழ்ந்து சிந்தித்தல்.
- நள்ளிரவிற்குப் பிறகான மூன்றாம் 1½ மணி நேரங்கள் அரசவை உறுப்பினர்களுடன் ஆலோசித்தல், ஒற்றர்களை அனுப்புதல்.
- ஞாயிறு எழுவதற்கு முந்தைய கடைசி 1½ மணி நேரங்கள் மதம் சார்ந்த, இல்லம் சார்ந்த மற்றும் தனிப்பட்டக் கடமைகளைச் செய்தல். குருவைச் சந்தித்தல், சடங்கு ஆலோசகரைச் சந்தித்தல், புரோகிதர்களைச் சந்தித்தல், தனிப்பட்ட மருத்துவரைச் சந்தித்தல், தலைமை சமையற்காரர் மற்றும் ஆரூடக்காரரைச் சந்தித்தல்.

இத்தகைய அல்லது அரசருக்குப் பொருந்தும் வேறு ஏதேனும் நிகழ்ச்சி நிரலையும் கைக்கொள்ளலாம் எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

அரசனைச் சுற்றியே அரசின் ஏனைய மூலங்கள் இயங்குகின்றன. அரசின் தூண், ஆட்சிக் கலையின் எஜமான் அவனே. இத்தகு சுவாமி சிறந்த முறையில் இயங்கினாலே நாடும் சிறக்கும். கோன் எவ்வழியோ அவ்வழி குடிகளும் என்பதற்கு இணங்க அரசன் ஆற்றலுடையவனாக இருப்பின் குடிகளும் அதே அளவிற்கு இருப்பர் என்கிறார். அத்துடன் அரசன் தனக்கு கீழ் இயங்கும் பணியாளர்களை மட்டும் நம்பியிராது தான் மாறுவேடம் பூண்டு நாட்டின் நிலைமையை கண்காணிக்க வேண்டும். அப்போதே இராச்சியத்தின் நிதர்சனம் குறித்து தானே அறிய முடியும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறாக சுவாமி குறித்து விபரிக்கப்படுவதுடன், கௌடில்யர் எதிர்கால அரசனைப் பயிற்றுவித்தல் மற்றும் இளவரசன் குறித்தும் கவனம் செலுத்துவதைக் காண முடிகின்றது. இந்துப் பனுவல்களுள், குறிப்பாக கௌடில்யரின் அர்த்த சாஸ்திரத்தில் எடுத்துரைக்கப்படும் சுவாமி பற்றிய சிந்தனைகள் காலத்தால் பழமையாயினும் தற்கால அரசியலில் வேண்டப்படும் ஒன்றே என்பது மறுக்க முடியாத உண்மை.

(ஏனைய அங்கங்கள் பற்றி வரும் சுடர்களில் தொடர்ச்சியாகப் பார்க்கலாம்...)

மாமன்றத்தின் முன்னாள் தலைவர் அமரர் திரு. வி. கயிலாசபிள்ளை அவர்களின் முதலாவது வருட ஞாபகார்த்த நிகழ்வும் நினைவுப்பேரையும்

நீண்டகாலம் மாமன்றத்தின் தலைவராகவும் அதன்பின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைத் தலைவராகவும் அறப்பணிகள் பலவாற்றிய மனிதநேயர் அமரர் திரு.வி கயிலாசபிள்ளை அவர்கள் அமரத்துவமடைந்த முதலாவது ஆண்டு ஞாபகார்த்த நிகழ்வும் நினைவுப்பேருரையும் நிகழும் ஏவிளம்பி வருடம் மாசித்திங்கள் 27ம் நாள் (11-03-2018) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிமுதல் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.

மாமன்றப் பிரதித் தலைவர்திரு. மா. தவயோகராஜா அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு மாமன்றத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைத் தலைவரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமாகிய கலாநிதி க. கனக-ஈஸ்வரன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிப்பதாக ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தாலும் சுகயீனம் காரணமாக அவரால் கலந்துகொள்ள முடியாமல் போனதனால் அவர்சார்பில் நினைவுநிகழ்விற்கான அவரது உரை வாசிக்கப்பட்டது.

வைத்தியகலாநிதி அம்பலவாணர், இந்திய உயர்ஸ்தானிகராலயத்தினைச் சேர்ந்த ஸ்ரீ டி.சி.மஞ்சநாத், திரு. வே. கந்தசாமி, கலாநிதி ஆறு.திருமுருகன், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் மாண்புமிகு சி. துரைராஜா, வைத்தியகலாநிதி செல்லையா ஆகியோர் அதிதிகளாக கலந்துகொண்டனர்.

மனிதநேயமாமனிதர் அமரர் திரு. வி. கயிலாசபிள்ளை நினைவுப்பேருரையினை, தமிழ்நாட்டைச்சேர்ந்த பிரபல பட்டிமன்றப் பேச்சாளராகிய திரு. எஸ். ராஜா அவர்கள் "எல்லோரும் இன்புற்றிருக்க : மனிதநேயம்" என்னும் தொனிப்பொருளில் ஆற்றினார்.

அமரரின் மகன் திரு. க. அரவிந்தன் அவர்களின் நன்றியுரையினைத் தொடர்ந்து, சக்தி இல்ல மாணவியரின் இறைவணக்கத்துடன் நிகழ்வு நிறைவுற்றது.

வைகாசி விசாகம்

வைகாசி மாதமென்பது சூரியனின் கதிர்கள் இப்பூமியை சுட்டெரிக்கும் ஒரு காலமாகும். அதே நேரத்தில் பல ஆலயங்களில் தெய்வீக விழாக்களுக்கு மிக உகந்த மாதம் ஆகும். அதிலும் குறிப்பாக முருகப்பெருமானை வழிபடுவதற்கு ஏற்ற மாதமாகும்.

வைகாசி விசாக தினத்தினை அனிலநாள், சோதிநாள் எனவும் குறிப்பிடுவதுண்டு. வானசாத்திரத்தில் இருபத்தேழு நட்சத்திரங்களில் விசாகமும் ஒன்று. சூரபதுமன் முதலான அசுரர்களின் கொடுமைகளைத் தாங்கலாற்றாத தேவர்கள் சிவபெருமானிடம் சென்று தமது குறைகளை முறையிட்டனர். கருணைக்கடலாகிய சிவபிரான் அசுரர்களுடைய கொடுமைகளினின்று அவர்களைக் காத்தருளத் திருவுளங் கொண்டார். தமது ஆறு முகங்களிலுமுள்ள நெற்றிக்கண்ணின்றும் ஆறு தீப்பொறிகளைத் தோற்றுவித்தார். அவ் ஆறு பொறிகளும் வாயு, அக்கினி, தேவர்களினால் கங்கையில் கொண்டு விடப்பட்டன. கங்கை சரவணப் பொய்கையில் கொண்டு சேர்த்தது. சரவணப் பூந்தடாகத்திலே ஆறு பொறிகளும் ஆறு திருக்குழந்தைகளாகி விளங்கின. விஷ்ணுமூர்த்தி கார்த்திகை முதலிய கன்னியர்கள் மூலமாக அக்குழந்தைகட்குப் பாலூட்டுவித்தார். ஆறு பொறிகளும் திருக்குழந்தைகளான தினம் வைகாசிமாதத்து விசாகநாள் ஆகும்.

ஆறுமுகப்பெருமான் அவதரித்த தினமாதலின் வைகாசி விசாகம் விசேட தினமாகக் கொண்டாடப்படுகின்றது. உலகத்து உயிர்கள் யாவும் உய்யும் பொருட்டு எம்பிரானே தந் திருவிளையாடலாற் குழந்தையான நாளாதலின் சைவமக்கள் வழிபாட்டிற்கு இந்நாள் மிகவும் சிறந்ததாகும். இத்தினத்தில் கோயில்களில் வசந்தோற்சவமும், பிரமோற்சவமும் நடைபெறும். இந்நாளில் திருசெந்தூரில் மிகவும் சிறப்பான வழிபாடு நடைபெற்றுவருகின்றது.

இத்தினம் பல சமயத்தாருக்கும் ஒரு புனித நாளாகும். வைணவத்தில் நம்மாழ்வார் அவதார நாளாகவும் இந்நாள் கொண்டாடப்படுகின்றது.

நவக்கிரகங்களில் குரு பகவானின் அருளும்,சிவனுக்கு பிரணவ உபதேசம் செய்து "சிவகுருநாதன்" என்று பெயர்பெற்ற முருகப்பெருமானின் அருளும் நிறைந்த தினம் "வைகாசி விசாகம்". இத்தகைய சிறப்பான தினத்தில் விரதம் இருந்து, முருகப் பெருமானின் ஆலயங்களுக்குச் சென்று அவருக்கு தேன், இளநீர் போன்றவற்றால் அபிஷேகங்கள் செய்து, அக்கோவிலில் சித்திரா அன்னம், தயிர் அன்னம் போன்றவற்றை தானம் அளித்து, முருக மூல மந்திரங்கள், சண்முகக் கவசம் ஆகியவற்றைப் படித்து முருகனை வணங்க வேண்டும்.

இப்படிச் செய்வதால் நமது மனதிற்குள்ளிருக்கும் தீய எண்ணங்கள் என்ற அரக்கனையும், வெளியில் நமக்கு கேடு நினைப்பவர்களின் பகையையும் அம்முருகப்பெருமான் அழித்து, நமக்கு நல்ல செல்வ வளத்தையும் நற்சந்ததிகளையும் நீண்ட ஆயுளையும் அருள்வார்.

வழிபாட்டு முறை:

வைகாசி விசாக நாளில் அதிகாலை எழுந்து நீராடி முருகா எனக் கூறி விபூதி அணிந்து கொண்டு முருகன் படத்தின் முன்நின்று முதலில் விநாயகர் அகவல் பாடி கணபதியை வழிபட வேண்டும். பின் முருகனுக்குரிய ஸ்லோகங்கள், கந்தசஷ்டி கவசம், கந்தகுரு கவசம், கந்தர் அனுபூதி, சுப்ரமணிய ஷோடச நாமாக்கள் கூறி அர்ச்சித்து தூபதீபம் காட்டி நைவேத்யம் செய்து வழிபட்டால் முருகனின் அருள் பரிபூரணமாகக் கிட்டும். வைகாசி விசாகத்தன்று கோயிலுக்குச் சென்று வழிபட்டால் வீட்டில் உள்ள குழந்தைகள் அறிவில் சிறந்து விளங்குவார்கள். மழலைப்பேறு, புத்திர பாக்கியம் இல்லாதவர்களுக்குக் கிட்டும்.

வைகாசி மாதத்தின் சிறப்புகள் சில...

- வைகாசி மாதத்தில் வரும் விசாக நட்சத்திர நாள், முருகப் பெருமான் அவதரித்த நாளாகக் கொண்டாடப்படுகிறது. இதனை வேனில் விழா என்று கொண்டாடப்படுவது வழக்கம்.
- சிம்மாசலம் என்னும் ஊரில் குன்றின் மேல் நரசிம்மர் கோயில் கொண்டுள்ளார். ஆண்டுதோறும் வைகாசி விசாகத்தன்றுதான் அப்பெருமானைக் காண இயலும். பின்பு சந்தனக்காப்பிட்டு வைத்து விடுவார்கள்.
- வைகாசி விசாகம் புத்தர் அவதரித்த நாளாகவும் கூறப்படுகிறது. சித்தார்த்தர் புத்தரானதும், நிர்வாணமடைந்ததும் இதே நாளன்றுதான்.
- எமதர்மன் அவதரித்த நாளும் வைகாசி விசாகம் தான் என்பார்கள். இந்நாளில் எமனுக்குத் தனி பூசை சில

ஆலயங்களில் நடப்பதுண்டு. எம பூஜை செய்வதால் நோய்கள் நீங்கி நீண்ட ஆயுளுடன் வாழலாம் என்பது நம்பிக்கை.

- இந்திரன் வைகாசி விசாகத்தன்று சுவாமிமலை முருகனை வழிபட்டு ஆற்றல் பெற்றான்.
- திருமழபாடியில் ஈசன் வைகாசி விசாக நாளில் திருநடனம் புரிகிறார்.
- திருச்செந்தூரில் வைகாசி விசாகம் பத்து நாட்கள் விழாவாகக் கொண்டாடப்படுகிறது.
- நாயன்மார்களுள் கழற்சிங்கர், சோமாசி மாறர், திருஞான சம்பந்தர், திருநீலகண்ட யாழ்ப்பாணர், திருநீலநக்கர், முருகநாயனார், நமிநந்தியடிகள் ஆகியோர் அவதரித்ததும் வைகாசி மாதத்தில்தான்.
- பெரிய புராணம் அருளிய சேக்கிழார் சுவாமிகளும் வைணவப் பெரியாரான நம்மாழ்வாரும் அவதரித்தது இந்த மாதத்தில் தான்.
- திருத்தணியில் பல தீர்த்தங்கள் உள்ளன. இதில் குமார தீர்த்தமும் ஒன்று. இதில் வைகாசி விசாகத்தன்று நீராடி முருகப் பெருமானை வழிபட்டால் சகலவிதமான தோஷங்களும் நீங்கும் என்று சொல்லப்படுகிறது.
- வைகாசி மாத சுக்லபட்ச ஏகாதசியன்று விரதம் இருப்பதால், ஆசைகள் ஈடேறி முடிவில் முக்தி கிடைக்கும்.
- வைகாசிகிருஷ்ணபட்சஏகாதசியன்றுவிரதம்அனுஷ்டித்தால் வித்யாதானம் (சன்மானமின்றி கல்வியறிவித்த) செய்த பலனைத் தருவதுடன் எதிர்பாராத ஆபத்துகளில் இருந்தும் நம்மைக் காப்பாற்றும்.
- வைகாசி மாத அஷ்டமிக்கு சதாசிவாஷ்டமி என்று பெயர். அன்று இடபாரூடராகிய சிவமூர்த்தியை எண்ணி விரதமிருப்பர். வெறும் நீரை நிவேதனம் செய்து அதையே குடிக்கவேண்டும். அதன் பலனாக செய்த பாவங்கள் அனைத்தும் போகும்.
- கதிர்காமத்தில் செப்பு ஓடால் வேயப்பட்ட கொட்டகைதான் முருகனின் கோயில். முன் வாசலில் குதிரைகள் உள்ளன. 7-வது திரையில் முருகன் மயில் மீது இருதேவியருடன் அமர்ந்த ஓவியம் உள்ளது. திரைக்குப் பின் பெட்டியில் சடாட்சர மந்திரம் யந்திர வடிவில் உள்ளது. இங்கு பூஜை அபிஷேகம் யாவும் மரகதவேலுக்குத்தான் நடைபெறும். இங்கு நடைபெறும் வைகாசி விசாக விழாவில் ஆறுமுகப் புறப்பாடு மிகப்பிரபலம் வாய்ததொன்றாகும்.

(தொகுப்பு: பூரணி அரவிந்தன்)

நாவலர் வழிநின்று பணியாற்றி மறைந்த திரு.ந.கருணை ஆனந்தனுக்கு அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அஞ்சலி!

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பேராளராக மாமன்றத்தின் பணிகளுக்கு பல்வேறு வழிகளில் ஒத்துழைப்பு நல்கிவந்த திரு. ந. கருணை ஆனந்தன் அவர்கள் 16-05-2018 அன்று பரம்பொருளின் திருவடி நிழலை அடைந்துவிட்ட செய்திகேட்டு மிகவும் கவலையடைகின்றோம்.

வரிமதிப்பீட்டாளராக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் தனது பணிகளை ஆற்றி ஓய்வுபெற்ற பின்பும் தனது இறைவரி தொடர்பான நிபுணத்துவ பணிகளையும் அதற்கும் மேலாக நாவலர் நற்பணி மன்றம் எனும் அமைப்பினை நிறுவி அதனூடாக சமய-சமூகப் பணிகளை தனி ஒருவராக நின்று தனது விடாமுயற்சியுடன் இறுதிமூச்சுவரை ஆற்றிவந்தார் என்பது நாம் அனைவரும் அறிந்ததாகும்.

மாமன்றத்தின் வைரவிழா மலர் வெளியீட்டிற்கு அனுசரணை புரிந்த அன்னார், மாமன்றத்தினால் கடந்த மூன்று ஆண்டுகளாக வெளியிடப்பட்டுவரும் திருக்கணித-வாக்கிய பஞ்சாங்கங்களின் சுருக்கத் தொகுப்பான கையடக்கப் பஞ்சாங்கத்திற்கான பூரண அனுசரணையை வழங்கி அப் பணியை தடையின்றி முன்னெடுக்க துணைநின்றார் என்பதனையும் நாம் இங்கு நன்றியுடன் நினைவுகூரக் கடமைப்பட்டுள்ளோம்.

தனது நாவலர் நற்பணி மன்றத்தினூடாக நாவலர் வழிநின்று நாடெங்கும் உள்ள பல சைவப் பாடசாலைகளில் நாவலர் சிலைகளை நிறுவினார். பாதிக்கப்பட்ட மக்களுக்கு கைகொடுத்து வாழ்வாதார உதவிகளை வழங்கியதுடன் கொழும்பு தமிழ்ச் சங்கத்தினூடாக பல்வேறு தமிழ்த்தொண்டுகளையும் ஆற்றிவந்தார்.

இன்னும் பலஆண்டு காலம் வாழ்ந்து பல்வேறு சமய – சமூகப் பணிகளை ஆற்றியிருக்க வேண்டிய அன்னாரை இறைவன் தன் திருவடி நிழலில் இளைப்பாற அழைத்துக்கொண்டமை இந்நாட்டின் இந்துக்களுக்கு மிகுந்த துயரினைத் தந்துள்ளது.

அன்னாரை இழந்து துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பரம்பொருளைப் பிரார்த்திக்கின்றோம்.

சிதம்பரத்தில் ஆனி உத்தரத் திருவிழா

- ஜடாயு -

கோயில் என்பது எல்லா கோயிலுக்கும் பொதுப்பெயர் என்றாலும், சிவத்தலங்களில் சிதம்பரம் மட்டுமே கோயில் என்று குறிப்பிட்டு வழங்கப்படுகிறது. தில்லைவனம், பெரும்பற்றப்புலியூர், சிதாகாசம், ஞானாகாசம், பொன்னம்பலம், பூலோககைலாசம், புண்டரீகபுரம், வியாக்கிரபுரம் போன்ற பெயர்களும் இவ்வூருக்கு உண்டு.

ஆலயங்களில் தினமும் நடைபெறும் பூசைக்கு நித்தியம் என்றும், விசேஷ கால பூசைக்கு நைமித்திகம் என்றும் பெயர். நித்தியபூசையில் உண்டாகும் குறைகள் நைமித்திக பூசையில் நீங்குவதாக ஐதீகம். நடராஜப்பெருமானுக்கு ஒரு ஆண்டில் ஆறுமுறை விசேட அபிடேகம் நடக்கும். இதில் இரண்டு அபிடேகங்கள் திருவிழாவாக நடத்தப்படுகிறன. அவை மார்கழி திருவாதிரை, ஆனி உத்தர திருமஞ்சனம். இந்த இரு நாட்களிலும் சூரியோதயத்திற்கு முன்பே நடராஜருக்கு அபிஷேகம் செய்து முடிப்பர். ஏனைய சித்திரைத் திருவோணம், ஆவணிச் சதுர்த்தசி, புரட்டாசி சதுர்த்தசி, மாசி சதுர்த்தசி ஆகிய நான்கு தினங்களில் மாலைநேரத்தில் அபிஷேகம் நடத்தப்படும்.

ஆனித் திருமஞ்சனத்தில் அப்படி என்ன விசேஷம்?

ஆடலரசன் என்று போற்றப்படும் நடராஜப் பெருமானுக்கு வருடத்திற்கு ஆறு அபிஷேகங்கள் மட்டும் நடைபெறும். சிவபெருமானின் 64 மூர்த்தங்களில் மிகவும் அற்புதமான திருமேனி நடராஜர் திருவுருவம். இவரது நட்சத்திரத்துக்கேற்ப (திருவாதிரை) இவரது உடல் வெம்மையானது. கழுத்தில் நீல கண்டம், கையில் அக்கினிச்சுடர், உடலில் சுடுகாட்டுச் சாம்பல் பூசப்பட்டு உஷ்ணமான திருமேனியாக இருப்பதால், சிவ பெருமானைக் குளிர் வியப்பதற்காக வருடத்திற்கு ஆறு அபிஷேகங்கள் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றன. இறைவனைக் குளிர்விப்பதால் இயற்கையும் குளிர்கிறது, சமனப்படுகிறது.

சித்திரை மாதம், திருவோண நட்சத்திரத்தில் கனகசபையில் மாலை வேளையிலும், ஆனி மாதத்தில் உத்தர நட்சத்திரத்தில் ராஜசபை என்கிற ஆயிரங்கால் மண்டபத்தில் சூரிய உதயத்திற்கு முன் அதிகாலை நான்கு மணிக்கும், ஆவணி மாதத்தில் பூர்வபட்ச சதுர்த்தசியில் கனகசபையில் சாயங்கால வேளையிலும், புரட்டாசி மாதம், பூர்வபட்ச சதுர்த்தசியில் கனகசபையில் மாலை வேளையிலும், மார்கழி மாதம் திருவாதிரை நட்சத்திரத்தில் ராஜசபை என்கிற ஆயிரங்கால் மண்டபத்தில் சூரிய உதயத்திற்கு முன் அதிகாலை நான்கு மணிக்கும், மாசி மாதம் பூர்வபட்ச சதுர்த்தசியில் கனகசபையில் மாலை வேளையிலும் பூலோக கைலாசம்என்றுபோற்றப்படும்சிதம்பரம்திருத்தலத்தில்அபிஷேக, ஆராதனைகள் நடைபெறுகின்றன.

சிவமூர்த்தங்களில் உயிர்நாடி நடராஜர் திருவுருவம். இந்த உருவச்சிலை எப்படி அமையவேண்டும் என்று சிற்பசாத்திர வேதநூல்கள் கூறுகின்றன. நடராஜரின் முகத்தில் அபிஷேகம் செய்தால், அபிஷேக நீர், மூக்கு வழியாக வழியும், தொங்கும் கையில் விழும், தூக்கிய திருவடியில் கொட்டும், திருவடியின் விரல் நுனி வழியாகத் தரையில் விழும். இதுவே நடராஜர் சிலையின் உத்தமமான லட்சணம் என்று சொல்லப்படுகிறது. இது போன்ற திருமேனியை சிதம்பரம், திருவாரூர், திருவாலங்காடு, கோனேரிராஜபுரம் முதலிய திருத்தலங்களில் தரிசிக்கலாம்.

மேலும்,நடராஜர் திருவுருவம் ஐந்தெழுத்து வடிவமானது என்கிறது ஆகமம். நடராஜர் கையில் உள்ள துடி, 'சி'கரம், வீசுங்கரம் 'வ'கரம், அபயகரம் 'ய'கரம், அக்னி 'ந'கரம், திருவடியின் கீழ்முயலகன் 'ம'கரம் என்று சிந்தாந்த நூல்கள் விளக்குகின்றன. நடராஜர் திருவுருவம் ஐந்தெழுத்து அடையாளம் ஆனதால் அந்தத் திருவுருவைச் சுற்றி அமையும் பிரபை எனப்படும் திருவாசி ஓங்காரத்தின் அடையாளம் எனப்படுகிறது. அதனால்தான் நடராஜர் உருவத்தைப் பிரபை இல்லாமல் அமைப்பது இல்லை.

பொன்னம்பலமான சிதம்பரத்தில், பத்துநாட்கள் நடைபெறுவது ஆனி உத்தரத் திருவிழா. ஆனி உத்தர நட்சத்திரத்தன்று இங்குள்ள ஆயிரங்கால் மண்டபத்தில் அதிகாலையில் ஆனித் திருமஞ்சன அபிடேகம் நடக்கும். ஆனித் திருமஞ்சன விழாவை சிதம்பரத்தில் ஆரம்பித்து வைத்தவர் பதஞ்சலி மகரிஷி. இவர் ஆதிசேடனின் அம்சம் என்பது ஐதீகம்.

நடராஜப் பெருமானுக்கு ஆனிமாதம் உத்தர நட்சத்திரத்தன்று சாயரட்சை பூசையில் சிறப்பு அபிடேகமும் அலங்காரமும் செய்வதுதான் ஆனித்திருமஞ்சனம். சிவாலயங்களில்

'நீலகண்டம்' அமரர் திரு. கந்தையா நீலகண்டன் அஞ்சலி நிகழ்வும் நினைவேந்தலும்

நீண்டகாலம் மாமன்றத்தின் பொதுச் செயலாளராகவும் பின்பு தலைவராகவும் ஆன்மீகப்பணிகள் பல ஆற்றி, 18-02-2018 அன்று சிவபதமடைந்த, 'அறநெறிக்காவலர்' அமரர் திரு. கந்தையா நீலகண்டன் அவர்களுக்கு அகில இலங்கை இந்து மாமன்றமும் ஏனைய இந்து நிறுவனங்களும் இணைந்து நடத்திய 'நீலகண்டம்' அஞ்சலி நிகழ்வும் நினைவேந்தலும் 08-04-2018 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிமுதல் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.

இறைவணக்கத்தைத் தொடர்ந்து அமரரின் குடும்பத்தினர் திரு.கந்தையா நீலகண்டன் அவர்களின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்தும் ஏனையோர் அஞ்சலிச்சுடர் ஏற்றியும் தமது அஞ்சலியைத் செலுத்தினர். அடுத்து, நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் பிரார்த்தனையுரையைத் தொடர்ந்து, சிவஸ்ரீ பத்மநாப சர்மா, திரு.மா.தவயோகராஜா, மாண்புமிகு க. ஸ்ரீபவன், திரு.எம். ஆர்.இராஜ்மோகன், திரு.வே.கந்தசாமி, கலாநிதி ஆறு திருமுருகன், மாண்புமிகு சி.துரைராஜா, திரு.எஸ்.ராகவன், கலாநிதி ஸ்ரீ பிரசாந்தன், திரு.ந.கருணை ஆனந்தன், திரு. த. முத்துக்குமாரசாமி, திரு. ரமணராஜா, திரு. தம்பு சிவசுப்பிரமணியம், கலாநிதி திருமதி சாந்தி கேசவன், வைத்தியகலாநிதி மு. கதிர்காமநாதன், திரு. எஸ். ஜெயக்குமார், சைவவித்தகர் வெ. சசிகரன், திரு. வே.சந்திரசேகரம், திருமதி.யமுனா கணேசலிங்கம் ஆகியோர் தமது நினைவேந்தல்களை வழங்கினர்.

நினைவேந்தல் நிகழ்வின் முக்கிய நிகழ்வாக அமரருக்கு சமர்ப்பணமாகும் 'நீலகண்டம்' இந்து ஒளி சிறப்பிதழை முன்னைநாள் பிரதம நீதியரசர் மாண்புமிகு க. ஸ்ரீபவன் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் மாண்புமிகு சி. துரைராஜா ஆகியோர் இணைந்து வெளியிட்டு முதற் பிரதிகளை திருமதி சசிதேவி நீலகண்டன், திரு.சரவணன் நீலகண்டன் மற்றும் திரு.பிரணவன் நீலகண்டன் ஆகியோருக்கு வழங்கிவைத்தனர். இறுதியாக திரு.சி.தனபாலா அவர்கள் தனது நினைவேந்தல் உரையுடன் நன்றியுரையையும் வழங்க சக்தி இல்ல மாணவியரின் இறைவணக்கத்துடன் நினைவேந்தல் நிகழ்வு நிறைவுற்றது.

அமைந்துள்ள நடராஜர் சபையில் ஆனித் திருமஞ்சனம் விசேடமாகக் கொண்டாடப்படும். அன்று சிதம்பரம் ஆலயத்தில் ஆதிமூலவர் சந்திரமௌலீஸ்வரருக்கு ஆறுகால பூசைகள் வெகு விமர்சையாக நடக்கும். அப்போது கனகசபையில் சிறப்பு அபிடேகம் நடைபெறும். இது முடிந்த பின் சிவகாமியம்மை சமேத நடராஜருக்கு 16 வகை தீபங்களால் ஆராதனை நடைபெறும்.

இங்கு முதல் திருவிழா தொடக்கம் எட்டாம் திருவிழா வரை உற்சவ மூர்த்திகளான விநாயகர், சுப்பிரமணியர், சோமாஸ்கந்தர், சிவகாமியம்பாள், சண்டிகேசுவரர் முதலிய பஞ்சமூர்த்திகளும் வாகனங்களில் எழுந்தருள்வர். ஒன்பதாம் நாளில் பஞ்சமூர்த்திகள் அனைவரும் ஐந்து தேர்களில் பவனி வருவார்கள். நடராஜப்பெருமான் திருத்தேரில் எழுந்தருளி நான்கு வீதிகளில் உலாவந்த பின்னர் இரவில் ராஜசபை (அரசம்பலம்) என்னும் ஆயிரங்கால் மண்டபத்தில் தங்குவார். ஆனி உத்தரமான பத்தாம் நாளன்று வைகறையில் ஆனித் திருமஞ்சன அபிஷேகம் விமரிசையாக நடைபெறும். பகல் ஒருமணிக்கு நடராஜரும், சிவகாமசுந்தரியும் ஆனந்த நடனம் செய்தபடியே, ஞானாகாச சித்சபையில் எழுந்தருள்வர். பெருமாளும், சிவகாமி அம்மனும் மாறி மாறி நடனம் செய்து சிற்றம்பல மேடைக்கு எழுந்தருளும் காட்சி அனுக்கிரக தரிசனமாகும். அன்றிரவு மீண்டும் சித்சபையாகிய சிற்றம்பலத்தில் கடாபிஷேகம் நடைபெறும். அடுத்த நாள் விடையாற்றி உற்சவம் முடிந்தபின் கொடியிறக்கம் கண்டு விழா இனிதே நிறைவுறும்.

சிவாலயங்களில் பஞ்சலோகத் திருமேனியில் காட்சிதரும் நடராஜப் பெருமான், ராமநாதபுரம் மாவட்டம் உத்தரகோசமங்கைத் திருத்தலத்தில் மரகதக்கல் (பச்சைக்கல்) திருவுருவில் எழுந்தருளியுள்ளார். இத்திருமேனிக்கு சந்தனக்கலவை பூசியிருப்பார்கள்.

நடராஜருக்கு மட்டுமின்றி ஸ்ரீரங்கம் திருத்தலத்தில் அருள்புரியும் ஸ்ரீரங்கநாதருக்கும் ஆனித்திருமஞ்சன அபிஷேகம் நடைபெறுகிறது. ஆனி மாதத்தில் கேட்டை நட்சத்திரத்தன்று பெரியபெருமாளான பள்ளிகொண்ட ரங்கநாதருக்குத் திருமஞ்சனம் மிகச்சிறப்பாக நடைபெறும். இதனை ஜேஷ்டாபிஷேகம் என்று போற்றுவர். இத் திருமஞ்சனத்தின் போது பெருமாளின் திருக்கவசங்களையெல்லாம் களைந்துவிட்டு ஏகாந்தத் திருமஞ்சனம் நடைபெறும். இதை சேவிப்பது மிகவும் விசேஷம். இதனை பெரியதிருமஞ்சனம் என்பர். ஸ்ரீரங்கம் கோயிலின் தென்புறத்தில் ஓடும் காவிரி நதியில் வேத மந்திரங்கள் முழங்க நீர் சேகரிப்பார்கள். தங்கக் குடத்தில் நிறைத்த நீரை யானையின் மீதும் வெள்ளிக்குடங்களில் நிறைத்த நீரை கோயில் பரிசாரகர்கள் தலையில் சுமந்தும் திருமஞ்சனத்திற்கு எடுத்து வருவார்கள். திருமஞ்சனம் நடைபெற்றதும் பெரிய பெருமாளுக்கு தைலக்காப்பு இடுவார்கள். திருமுக மண்டலத்தைத் தவிர மிகுதி திருமேனியை இந்த நாளில் தரிசிக்க முடியாமல் திரையிட்டிருப்பார்கள். திருமஞ்சனத்திற்கு அடுத்த நாள் கோயிலில் பெருமாளுக்காகத் தயாரிக்கப்படும் சிறப்புமிக்க பிரசாதத்தை பெருமாளுக்கு நிவேதனம் செய்தபின் பக்தர்களுக்கு அளிப்பார்கள்.

ஆனித் திருமஞ்சன அபிஷேகத்தின் போது நடராஜப் பெருமானையும், ஸ்ரீரங்கநாதப் பெருமாளையும் தரிசிப்போர் வாழ்வில் பேரருளும் வசந்தமும் வீசும் என்பதில் ஐயமில்லை!

வற்றாப்பளை கண்ணகை அம்மன் பொங்கல்

வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலயத்தில் ஆண்டுதோறும் நடைபெறும் வைகாசிப் பொங்கலோடு தொடர்புடைய கிரியைகள் மிகவும் விரிவானவை. இவற்றை மிகவும் சுருக்கமான முறையில் இக்கட்டுரை விபரிக்கின்றது. பாக்குத்தெண்டல் தொடக்கம் பக்தஞானியர் பொங்கல் வரையான பத்தொன்பது நாட்கள் நடைபெறும் நிகழ்ச்சிகள் இதில் இடம்பெறுகின்றன.

மதுரையை எரித்த கண்ணகி தெற்கு நோக்கி சென்றாள் என்றும் அவள் வரும் வழியில் இருந்து இளைப்பாறிச் சென்ற இடங்களில் பத்தாவது இடமே நந்திக்கடற்கரை ஓரம். இதனால் பத்தாம்பளை (பத்தாவது பளை) என அழைக்கப்பட்ட இந்த இடம் பிற்காலத்தில் மருவி பற்றாப்பளை என்றும் இறுதியில் வற்றாப்பளை என்றும் பெயர் பெற்றதாக ஒரு ஐதீகம் உண்டு.

மூதாட்டி ரூபத்தில், நந்திக்கடல் ஓரத்தை வந்தடைந்த கண்ணகி அங்கு மாடு மேய்த்துக் கொண்டிருந்த சிறுவர்களிடம் தனக்கு பசிப்பதாக கூறி பொங்கல் ஆக்கித்தருமாறு கேட்டதோடு, பொழுது சாய்வதனால் விளக்கு ஏற்றித்தருமாறும் கேட்டுள்ளார். "விளக்கு ஏற்ற நெய் ஏதும் இல்லையே" என்ற அச்சிறார்களிடம் கடல் நீரில் விளக்கேற்றுமாறு மூதாட்டி கூற அவ்வாறே செய்த சிறுவர்கள் கடல் நீரில் விளக்கு எரியும் அற்புதம் கண்டு மெய்சிலிர்த்து நின்றனர்.

இந்த நிகழ்வை நினைவு கூரும் வகையிலேயே வைகாசிப் பொங்கல், கடல் நீரில் விளக்கெரிக்கும் வரலாற்று அற்புதம் என்பன தொன்று தொட்டு பின்பற்றப்பட்டு வருகிறது. மேலும், வன்னி மன்னர்களால் பரிபாலிக்கப்பட்ட இவ்வாலயத்தை போர்த்துக்கேயர் காலத்தில் போர்த்துக்கேய தளபதியாகிய நெவில் என்பவன் அழிக்க முற்பட்ட போது ஆலயத்தில் நின்ற பன்னிச்சை மரம் தனது காய்களை வீசி ஆலயத்தை அழிக்க விடாது போர்த்துக்கேயரை விரட்டியடித்தது என்றும் ஒரு வரலாறு உண்டு. இவ்வற்புத வரலாற்றை ஆலயத்தில் இன்றும் படிக்கப்படும் பன்னிச்சை ஆடிய பாடற்சிந்து மூலமும் ஆலயத்திலுள்ள சிற்பங்கள் மூலமும் அறிய முடிகிறது.

கண்ணகி வழிபாட்டு மரபில் அண்மைக்காலமாக ஆகம மரபு தொடர்படுத்தப்படுவதை அவதானிக்கலாம். இதன்காரணமாக மக்கள் வழிபாட்டிடங்களாக-மக்களுக்கும் தெய்வத்திற்கு மிடையில் இருந்து பிணைப்பு முறிக்கப்பட்டு ஆகம கிரியை நெறிகளுக்குட்படுத்தப்பட்டதுடன் மக்கள் வழிபாட்டு முறை மாற்றமடைந்து மக்களுக்கும் தெய்வத்திற்குமிடையில் இடைவெளியேற்பட்டது. அதுமட்டுமின்றி கண்ணகையம்மை வழிபாட்டிடங்கள் பலவும் யாழ்ப்பாணத்தில் நாவலரின் எதிர்ப்பால் மனோன்மணி அம்மன் கோயில்களாவும், இராஜராஜேஸ்வரி அம்மன்



கோயில்களாகவும் மாற்றம் பெற்றன. கிராமியத் தெய்வ வழிபாட்டில் ஆழமாக ஊறியுள்ள யாழ்ப்பாண மக்கள் கால்நடையாகவும், கடல் மூலம் வத்தையிலும் பிரசித்தி பெற்ற வற்றாப்பளை அம்மன் ஆலயத்துக்கு வரத் தலைப்பட்டனர். வட இலங்கையில் சுமார் முப்பது கண்ணகி அம்மன் கோயில்கள் இருந்தபோதும் அவற்றுள் வற்றாப்பளை அம்மன் கோயிலே தேசத்துக்கோயிலாகப் பெருந்தொகையான பக்தர்களை ஈர்ப்பது சிறப்பம்சமாகும்.

மக்களின் மரபுவழி வழிபாட்டுமுறைகளில், பிராமணர் தவிர்ந்த வேளாளரும், பிற குலப்பிரிவினரும் இணைந்து நடத்தி வந்தாலும் பின்பு ஆகம முறைப்படி பூசை செய்யும் அந்தணர்களும் பிற்காலத்தில் சேர்ந்து கொண்டனர். மக்கள் கிராமியத் தெய்வ வழிபாட்டில் ஆழமான நமப்பிக்கையுடையவர்கள். ஆரியரின் செல்வாக்கினாலேயே அந்தணர்கள் பூசை செய்யும் முறை ஏற்பட்டது. ஆகம முறைப்படி பூசை நடைபெறும் ஆலயங்களில் பழைய கிராமிய மரபுகள் புறக்கணிக்கபடுவதைக் காணலாம். ஆனால் வற்றாப்பளையில் கிராமிய மரபும் ஆகம மரபும் இணைந்து செயல்படுவதை இன்றும் காணலாம். ஆதிமுதல் பொங்கல் வழிபாடுகளை வேளார் செய்ய ஏனைய குலப்பிரிவினர் துணை புரிந்துநின்றனர். பின்பு படிப்படியாக பிராமணர்களும் இதனுட் பங்கெடுத்துக் கொண்டதுடன் பிற்காலத்தில் தென்னைமரவடியிலிருந்து பிராமணர்கள் முள்ளியவளைக்கு அழைத்துவரப்பட்டும் குடியமர்த்தப்பட்டனர். பொங்கல் மடை நிகழ்ச்சிகளில் ஆகம நெறிக்குரிய பூசை

முதலியவற்றைப் பிராமணர் செய்யும் மரபும் ஏற்பட்டது. ஆயினும் பொங்குதல்,படைத்தல் என்னும் மரபுவழிக் கிரியைகளைக் கட்டாடி உடையார் என அழைக்கப்படும் பூசாரியாரும் பிறகுலத் தொழிலாளரும் ஒழுக்கசீலராக இருந்து ஆற்றி வருகின்றனர் என்பது இங்கு குறிப்பிடப்படவேண்டியது கட்டாயமாகும்.

பாக்குத்தெண்டல்

வற்றாப்பளை கண்ணகை அம்மன் பொங்கல் நடைபெறப் போகின்றதென்பதை உபகரிப்புக்காரருக்கும் பொதுமக்களுக்கும் புலப்படுத்தலே பாக்குத்தெண்டல் நிகழ்வின் நோக்கமாகும். பொங்கலுக்கான அரிசி, மடைக்கான பழம், பாக்கு, வெற்றிலை, தேங்காய், வளந்து ஆகியப் பொருட்களை இப்பகுதியிலுள்ள பெரியார்கள் தொன்றுதொட்டு இன்று வரை வழங்கிவருகிறார்கள். இவர்களையே உபகரிப்புக்காரர் எனக் கூறுவர். இந்த உபகரிப்புக்காரரிடம் மஞ்சள், பாக்கு, வெற்றிலை என்பவற்றைப் பெறுதலையே பாக்குத்தெண்டல் (தெண்டல் என்பது தண்டல், தானம் பெறுதல் என அர்த்தப்படும்) எனக் கூறுவர். இந்நிகழ்ச்சி பற்றிப் பூசாரியார் கோபியக் குடிமகனாருக்கு அறிவிப்பார். பொங்கல் நடைபெறுவதற்குப் பதினைந்து நாட்களுக்கு முந்திய திங்கட்கிழமை பாக்குத்தெண்டல் நடைபெறும்.

தீர்த்தமெடுத்தல்

பாக்குத்தெண்டிய எட்டாம்நாள் திங்கட்கிழமை தீர்த்தமெடுத்தல் நடைபெறும். அன்று இப்பகுதி மக்கள் விரத அனுட்டானங்களுடன் இருந்து பிற்பகல் ஒருமணியளவில் முள்ளியவளைக் காட்டுவிநாயகர் ஆலயத்திலிருந்து தீர்த்தம் எடுக்கச் செல்லும் வைபவத்தில் கலந்து கொள்வர். வற்றாப்பளை கண்ணகியை வழி வழியாக வைத்து வழிபட்டு தொண்டு செய்பவர்களே முழு நாளும் உபவாசமிருந்து விளக்கு ஏற்றுவதற்கான கடல் நீரை எடுக்கும் புனித கருமத்தை செய்வர். விளக்கு ஏற்றுவதற்கான கடல் நீரை "தீர்த்தம்" என்றே அழைக்கின்றனர். சிலப்பதிகாரத்தின், சிலம்பு கூறல் பாட்டிலே வற்றாப்பளைக் கண்ணகிக்கும், முள்ளியவளை என்னும் ஊரில் உள்ள காட்டாவிநாயகர் ஆலயத்திற்குமுள்ள தொடர்பு கூறப்பட்டுள்ளது.

தீர்த்தமெடுப்பவர் தீர்த்தமெடுக்கச் செல்லுமுன் பல கிரியைகளைச் செய்ய வேண்டும். முதலில் தீர்த்தமெடுப்பவருடைய வாய் வெள்ளைத் துணியால் கட்டப்படும். பாக்குத்தெண்டியவரே தீர்த்தமெடுக்கும் வெங்கலப் பாத்திரத்தைச் சுமந்து செல்வர். தீர்த்தமெடுப்பவர் தன் வாயை வெள்ளைத் துணியால் கட்டியிருப்பர். இவர் மௌனமாகத் தீர்த்தக்குடத்தினைத் தோளில் வைத்தவாறு, சிலாவத்தை கிராமத்திலுள்ள தீர்த்தக்கரை கடலை நோக்கி சம்பிரதாயபூர்வமாக பறை முழங்க அழைத்துச் செல்லப்படுவார். அங்கு தீர்த்தக்கரையில் அமைக்கப்பட்டுள்ள அம்மன் கோயிலில் மரபு முறைப்படி பூசைகள் நடைபெறும். முதலில் தீர்த்தக் குடத்திற்கான பூசை நடைபெறும்.தீர்த்தமெடுப்பவருக்கு உதவியாக இருவர் பணியாற்றுவர். கடலில் இறங்கி வாயூறு (வாய் மட்டம்வரையான) நீர்வரைக்கும் சென்று நிற்பர். பாத்திரத்தைத் தோளில் தாங்கி வைத்திருக்கும்போதே கடல் அலை வந்து மூடும் போது பாத்திரம் நீரால் நிறைந்துவிடும். நீர் நிறைந்த பாத்திரத்தை அங்குள்ள மடையில் வைத்துப் பூசனை

புரிந்தபின் மாலை ஆறுமணியளவில் அங்கிருந்து புறப்படுவர். அப்பொழுது கடற்கரை மண் சிறிதளவு எடுத்துத் துணியில் முடிந்துகொண்டு இன்னொருவர் செல்லத் தீர்த்தக்குடம் வரும் வழிநெடுகிலும் மக்கள் பந்தரிட்டு மாவிலைத் தோரணம் இட்டு, நிறைகுடம் வைத்து வரவேற்பர். இங்ஙனம் வரிசையாக வைக்கப்பட்ட நிறைகுடப் பந்தரில் தரித்து நின்று இறுதியில் இரவு ஒன்பது மணியளவில் தீர்த்தக்குடம் காட்டுவிநாயகர் (காட்டாவிநாயகர் என்றும் வழங்குவதுண்டு) ஆலயத்தை அடைந்ததும் அங்கு விசேட பூசை நடைபெறும். இத்தருணம் அடிக்கப்படும் ஆலயமணியின் ஓசையும் பறை ஒலியும் சேர்ந்து பரவி அப்பகுதி மக்களை மெய்சிலிர்க்க வைக்கும். தீர்த்தக்குடத்தை விநாயகர் ஆலயத்திலுள்ள அம்மன் மண்டபத்தில் இறக்கி வைப்பர். இரவுபத்து மணியளவில் அம்மன் மண்டபத்தில் கும்பம் வைத்து (அம்மன் கும்பம்), மடை பரவி, ஒரு மட்பாத்திரத்தில், கொண்டுவரப்பட்ட கடல்நீரை நிரப்பி, அதனைக் கடற்கரை மண்ணால் சிறு கும்பல் செய்துமட்பாத்திரத்தை அம் மணற்கும்பல்மீது வைத்துத் திரியிட்டு விளக்கேற்றுவர். கடல்நீரில் விளக்கெரியும் அற்புதம் தொடர்ந்து ஏழு தினங்கள் காட்டுவிநாயகர் ஆலய அம்மன் மண்டபத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கும்.

நோற்புக்காரர்

தீர்த்தம் எடுக்கச் சென்ற குழு எட்டு நாட்களும் நோற்பு மண்டபத்திலேயே தங்கியிருப்பர். அங்கிருந்து கொண்டே பொங்கல் தொடர்பான தம் பணிகளை ஆற்றுவர். ஐயர் மட்டும் கோயிலில் தங்கியிருப்பார்.

ஏழுநாட்கள் காட்டுவிநாயகர் ஆலயத்தில்

விளக்கேற்றிய திங்கள் இரவுபோல் அடுத்து வரும் புதன், வெள்ளி ஆகிய இரண்டு இரவுகளிலும் பழைய கும்பம் குலைக்கப்பட்டுப் புதிதாக வைக்கப்படும். மடை பரவி அம்மன் பூசைகள் இடம்பெறும். சிலம்பு கூறல் காவியம் ஒவ்வொரு இரவும் தொடர்ந்து படிக்கப்படும். ஏழாவது நாள் ஞாயிற்றுக்கிழமை இரவு காட்டுவிநாயகர் ஆலயத்தில் பொங்கல் நடைபெறும். இத்தினத்தில் காலையிலிருந்தே பெருந்திரளான பக்தர்கள் கூடுவர். தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றி அர்ச்சனை செய்வித்து வழிபடுவர். இந்த இரவுதான் கண்ணகி அம்மன் இவ்வாலயத்தில் நடைபெறும் பொங்கல் மடையைக் கண்டு அடுத்தநாள் திங்கள் காலை வற்றாப்பளைக்குச் சென்றாள் என்பது ஐதீகம்.

காட்டுவிநாயகர் ஆலயத்தில் பொங்கல் வழிபாடுகள் முடிவுற்றபின், அடுத்தநாள் திங்கள் இரவில் வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் பொங்கல் நடைபெறும்.

மடைப்பண்டம்

பொங்கலுக்கும் மடைக்கும் உரிய பொருட்களைக் காட்டுவிநாயகர் ஆலயத்திலிருந்தே கொண்டு செல்வர். இதனையே'மடைப்பண்டம் கொண்டு செல்லுதல்' என்பர். மடைக்குரிய வாழைப்பழம், பாக்கு, வெற்றிலை முதலியனவும் பொங்கலுக்குரிய அரிசி, வளந்து என்பனவும் அம்மன் கும்பம் வைப்பதற்கான பொருள்கள், உப்புநீர் விளக்கு, தீர்த்தக்குடம், அம்மன் பத்ததிச் சின்னங்கள் அடங்கியபேழை ஆகிய



இப்பண்டங்களை திங்கள் அதிகாலை ஐந்து மணியளவில் வற்றாப்பளைக்கு நோற்புக்காரர் ஊர்வலமாகக் கொண்டு செல்வர். பறைமேளம்,சங்கு, சேமக்கலம் முதலிய வாத்தியங்களுடன் ஊர்வலம் செல்லும்.

கும்பம் வைத்தல்



மடைப் பண்டத்துடன் கொண்டுவரப்பட்ட கும்ப பாத்திரத்தையும் அதற்குரிய பொருள்களையும் வைத்தே கும்பம் வைக்கப்படும். கும்பம் வைக்கும் இடத்தை நீரால் சுத்திகரித்து அரிசியை வட்டாகப் பரவி அம்மன் மந்திரம் சொல்லி கும்பப் பாத்திரத்தை அதன்மேல் நிறுத்தி அதன்மீது தேங்காயை வைத்து மாவிலைக்குப் பதிலாக தென்னப்பாளை நெட்டுகளை வைத்து, அதன்மீது அம்மன் 'முகபாடம்' வைக்கப்படும். கும்பத்திற்குப் பட்டுச்சாத்தி பூக்கள் இட்டு அம்மனைக் கும்பத்தில் எழுந்தருளச் செய்வர். கடல்நீர் விளக்கும் ஏற்றிவைக்கப்படும்.

கச்சுநேரல்

மடைக்குரிய பொருள்களைப் பரவும் வெள்ளைத்துணியை நேருதலையே கச்சுநேருதல் என்பர். வெள்ளைத் துணியைக் கொய்து இரு கைகளாலும் அடக்கிப் பிடித்து நான்கு திக்கும் பார்த்துக் காவல் தெய்வங்களை வேண்டி நேருவர். பூசாரியார் உருவேறிய நிலையில் தோற்றமளிப்பார்.

மடை பரவுதல்

வெள்ளைத்துணிமீது வாழைப்பழம், பாக்கு, வெற்றிலை என்பவற்றில் தலா ஆயிரம் பரவப்படும். இளநீரும், இளந்தென்னம் பாளையின் மலர்களும் மடையில் பரவப்படும்.

நூல் சுற்றுதல்

பொங்கலுக்குரிய அம்மன் வளந்திற்கு விசேட முக்கியத்துவம் அளிக்கப்பட்டு நூல் சுற்றப்படும். மற்ற இரண்டு வளந்துகளிற்கும் நூல் சுற்றுவதில்லை. பின்னர் வளந்து நேரல் இடம்பெறும். கும்பம் வைத்தல், மடை பரவுதல், பொங்குதல், படைத்தல், கட்டாடுதல், வேளை விபூதி,அடியார்க்கு மஞ்சட்காப்பு அளித்தல் ஆதியாம் கருமங்களைப் பிராமணர் அல்லாத கட்டாடி



உடையாரே செய்வர். கலையாடிக் கட்டுச்சொல்கின்றதால் இவர் கட்டாடி எனும் பெயரைப் பெற்றார் என்றும் கூறுவர்.

வளந்து நேரல்

அம்மன் வளந்தினை பூசாரியார் எடுத்துச் சென்று அம்மன் முன்னிலையில் அம்மனை வணங்கி, அட்டதிக்குப் பாலகர்களையும், தேவாதி தேவர்களையும் வேண்டி நிற்பர். எட்டுத் திசைகளிலும் வளந்தினை எறிந்து ஏந்துவர். கட்டாடி உடையார் உருவேறி ஆடுவர். பொங்கல் இனிது நிறைவேற தேவாதி தேவர்களை வேண்டுவதையே வளந்து நேர்தல் என அழைக்கப்படும். மூன்று வளந்துகளை அடுப்பில் ஏற்றிப் பச்சை அரிசியும், பசுப்பாலும் சேர்த்துப் பொங்கல் நடைபெறும். பொங்கலுக்குச் சர்க்கரை சேர்ப்பதில்லை.

தூளி பிடித்தல்

சலவைத் தொழிலாளர் இருவர் வெள்ளைத் துணியைப் பிடிக்கப் பூசாரியார் அம்மன் மந்திரத்தை உச்சரித்துக் கொண்டு அம்மனின் சின்னங்களான சிலம்பு, பிரம்பு, அம்மனைக்காய் என்பவற்றை வைப்பர். அத்துணியில் 11 பாக்கு, 11 வெற்றிலை ஆதியாம் பொருட்களை வைத்துப் பூசித்துச் சிலம்பினை எடுத்துக் குலுக்கி நான்கு திக்கும் பாக்குடன் கூடிய வெற்றிலைச் சுருளை தூளியின் மறுபுறத்தே வீசுவார். இதுபோலவே எரியும் திரியையும் தூளியின் மேலால் எறிவார்.

திருக்குளிர்த்தி பாடுதல்

ஏட்டிலுள்ள அம்மன் திருக்குளிர்த்தி தனைப் பூசாரியாரும் அதற்குரியோரும் பாடுவர். பாடல் ஊடாக அம்மனின் உள்ளத்தைக் குளிர்வித்து அவளின் அருளைப் பெற்றுக் கொள்ளவே திருக்குளிர்த்தி பாடப்படுகின்றது. குளிர்த்தி பாடி முடிந்ததும் அம்மானைப் பாட்டுப் பாடப்படும். அங்ஙனம் பாடும்போது பூசாரியார் வெள்ளி புனைந்த மூன்று சித்தரக்காய்களை மேலே எறிந்து ஏந்துவர்.

கதிர்காம யாத்திரை ஆரம்பம்

அம்மனிடம் கதிர்காம யாத்திரைக்கு விடைகிடைக்கப் பெற்றயாத்திரிகர்கள் அம்மனை வழிபட்டுப் பிரசாதங்களைப் பெற்றதும் தமது யாத்திரையை ஆலயத்தின் உள்வீதியிலேயே தொடங்குவர். வேல் தாங்கிய தலைமை அடியார் கந்தப்பெருமானின் நாமாவழிப்பாடல்களை இசையொழுகப் பாடி முன்செல்ல ஏனைய அடியார்கள் பாடிக்கொண்டு பின் செல்வார்கள்.

பக்தஞானி பொங்கல்

தஞ்சாவூரிலிருந்து பக்தஞானியும் அவரின் சீடர்களும் இங்குவந்து பொங்கல் கிரியைகளில் பல ஒழுங்கு முறைகளையும் மரபுகளையும் ஏற்படுத்தினர். கண்ணகையம்மன் சின்னங்களான முகபாடம், உடுக்கு, சிலம்பு, பிரம்பு, ஏட்டுப் பிரதிகள் ஆகியவற்றையும் அவரே வழங்கினார். இவரை நினைவுகூர்தற் பொருட்டு அவர் நற்கதியடைந்த இடத்தில் வற்றாப்பளைப் பொங்கலை அடுத்த வெள்ளிக்கிழமை பொங்கல் நடைபெறும். இப்பொங்கல் முளளியவளையிலுள்ள நாவற்காட்டில் இடம் பெறும்.

பத்தஞானி பொங்கல் நிகழ்வுடன் கண்ணகையம்மை பொங்கல் கிரியைகள் யாவும் நிறைவுறும்.

கடல்நீரில் விளக்கெரிய வைத்தல், பட்ட படவாள் தளிர்த்து மரமாதல், தலையில் ஆயிரம் கண்களை காட்டியமை, புனிச்சையை ஆட்டுவித்து காயால் பறங்கித் துரைக்கு எறிவித்தமை, ஆலயப் பொருள்களைக் களவு செய்தோரின் கண்களை மறைத்தமை முதலான பல அற்புதங்களை வற்றாப்பளை அம்மன் நிகழ்த்தி அம்மக்களை இன்றும் தாய்போல் காத்துநிற்கின்றாள்.

"கண்ணகித் தாயவள் கடைக்கண் பார்வை போதுமே கடைத்தேற"

உசாத்துணை: வற்றாப்பளை கண்ணகையம்மை வரலாறு

(தொகுப்பு: மு. பிரணவன்)

மாமன்றத்தின் புதிய தலைவர் தெரிவு

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவராக இருந்து, கடந்த 18.02.2018 அன்று இறையடி சேர்ந்த அமரர் கந்தையா நீலகண்டன் அவர்களின் மறைவின்பின் ஏற்பட்ட வெற்றிடத்திற்காக கடந்த 20.05.2018 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற முகாமைப் பேரவைக் கூட்டத்தில் பிரதித் தலைவராக இருந்த திரு. மா.தவயோகராஜா அவர்கள் மாமன்றத்தின் புதிய தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இத்தெரிவினால் ஏற்பட்ட பிரதித் தலைவர் வெற்றிடத்திற்கு மாமன்றத்தின் துணைத்தலைவர்களில் ஒருவரான திரு.சின்னத்துரை தனபாலா அவர்கள் புதிய பிரதித் தலைவராகவும், திரு.சி.தனபாலா அவர்கள் வகித்த துணைத்தலைவர் பதவிக்காக திரு.த.முத்துக்குமாரசாமி அவர்களும் முகாமைப் பேரவையால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

சிறுவர் ஒளி

செய்வன திருந்தச் செய்!

சிறுவயது முதலே ஒவ்வொரு குழந்தையும் தனது செயல்களை முழுமையாகவும் அர்ப்பணிப்புடனும் ஈடுபாடுடனும் தானே செய்து பழக வேண்டும். அதுவே தர்மமும் கடமையும் ஆகும். இது பற்றி விளக்கும் சிறிய கதை ஒன்றினைப் பார்ப்போம்.

மகாபாரதம் என்ற இதிகாசம் முழுக்க முழுக்க தர்மத்தின் உபதேசம். ஒவ்வொரு கதாபாத்திரமும் தர்மத்தின் வாழும் விளக்கங்கள். கலியுக மனிதர்களைக் காட்டும் கண்ணாடி. அத்தகைய உயர்ந்த இதிகாசமான மகாபாரதத்தில் அதிதிகளை உபசரிக்கும் உயர்ந்த தர்மத்தை அதன் பாத்திரங்களே வாழ்ந்து காட்டியுள்ளன. உலகத்தில் வேறெந்த மதத்திலும் வாழ்க்கை தர்மத்தை வாழ்ந்து காட்டி உபதேசிப்பதான ஒரு இதிகாசம் கிடையாது.

பாரதப்போர் பதினெட்டு நாட்கள் நடந்தது. யுத்தம் தொடங்குவதற்கு முன் பகவான் ஸ்ரீகிருஷ்ணனுக்கும் அர்ச்சுனனுக்கும் இடையே நடந்த உரையாடலே ஸ்ரீமத் பகவத் கீதையாகும்.

நமது உறவினர்களையே கொலைபுரியும் இந்தப் போர் தேவைதானா? என்று அர்ஜுனன் செயலற்ற நிலையில் நின்றிருந்தபோது, "அர்ஜுனா, போர் செய்வதும் தர்மத்தை நிலைநாட்டுவதும் சத்திரியனான உனது கடமை. உன் கடமையிலிருந்து நீ தவறாதே" என்று எடுத்துரைத்து கடமையாற்றுவதால் அடையக்கூடியதான பூரண நிலையைப் பற்றியும் எடுத்துரைக்கிறார்.

"அர்ஜுனா! தன்னுடைய கடமையில் பற்றுள்ள ஒவ்வொருவனும் பூரண நிலையை அடைகிறான். தன் கடமையைச் செய்து கொண்டே அவனால் எவ்வாறு பூரண நிலையை அடைய முடிகிறது என்பதைச் சொல்லுகிறேன். கேள்.!"

"இந்த உலகில் உள்ள உயிர்கள் எல்லாம் யாரிடமிருந்து தோன்றி உள்ளனவோ, யாரால் இந்த உலகம் எல்லாம் நிறைந்துள்ளதோ அந்த கடவுளை தனக்குரிய கடமையைச் செய்து கொண்டே வழிபடும் மனிதன் மேன்மை அடைகிறான்."

"பார்த்தா! சிறப்புடையதாக இல்லாவிட்டாலும், தனக்குரிய கடமையைச் செய்வது, சிறப்பாக மற்றவர்களின் கடமையைச் செய்வதை விட சிறப்பானது. தனக்கென இயல்பாக விதிக்கப்பட்ட கடமையைச் செய்யும் ஒருவன் துன்பம் அடையமாட்டான்."

"குந்தியின் மகனே! குறை உள்ளது என்றாலும் தனக்கென இயல்பாய் அமைந்த

கர்மத்தை விட்டுவிடக் கூடாது. தீயைப் புகை சூழ்வது போன்று வினைகள் எல்லாம் கேடுகளால் சூழப்பட்டுள்ளன. அவற்றை நீக்கி நீ உன் கர்மத்தை தவறாது செய்வாய்" என்கிறார் ஸ்ரீ கிருஷ்ணர்.

இவ்வாறு ஒரு குருவின் ஸ்தானத்தில் இருந்து அர்ஜுனனுக்கு போதித்தார் ஸ்ரீ கிருஷ்ணர். அப்படிப்பட்ட அர்ஜுனன் தன் குருவாக இருந்த ஸ்ரீ கிருஷ்ணரின் செயல் கண்டு பதறிய நாள் ஒன்று வந்தது.

ஸ்ரீ கிருஷ்ணர் எதை அர்ஜுனனுக்கு போதித்தாரோ அவ்வாறே அவர் வாழவும் செய்ததாலேயே வாழும் கடவுளாக அர்ஜுனன் கிருஷ்ணனைக் கைதொழுதான்.

அந்நாட்களில் இரவில் போர் புரியும் வழக்கமில்லை — அது போரின் தர்மமாக இருக்கவில்லை. போர் வீரர்கள் இரவில் ஓய்வெடுப்பார்கள். தேரோட்டிகள் குதிரைகளை கட்டி வைத்து அவைகளுக்குத் தீனியும் போட்டு மறுநாள் போருக்குத் தயார் செய்துகொண்டிருப்பார்கள்.

பகல் முழுக்கப் போரிட்ட களைப்பால் அர்ஜுனன் அன்று நன்கு உறங்கிக் கொண்டிருந்தான்.

ஆனால் பகல் முழுக்கத் தேரோட்டிக் களைத்திருந்தாலும் கிருஷ்ணன் மட்டும் இரவில் ஓய்வு கொள்ளாமல் குதிரைகள்மேல் கவனம் செலுத்துவான்.

வெந்நீர் வைத்து குதிரைகளை நன்கு தேய்த்துக் குளிப்பாட்டி விடுவான். கட்டுக் கட்டாக பச்சை புல் வெட்டி வந்து குதிரைகளுக்கு ஊட்டிவிடுவான். கொள்ளை வேக வைத்து, அதைத் தன் பட்டுத் துணியில் எடுத்து ஒவ்வொரு குதிரைக்கும் தருவான். அவை உண்பதைக் கண்டு மகிழ்வான். குதிரைகள் வயிறார உண்டு முடித்த பிறகு சற்று ஓய்வு எடுத்துக் கொள்ளும். அந்த நேரத்தில் கிருஷ்ணன் குதிரைக் கொட்டில் முழுவதையும் சுத்தம் செய்வான். அதற்குள் விடியத் தொடங்கிவிடும். உடனே குதிரைகளைப் பூட்டி போருக்குச் செல்ல தேரைத் தயாராக்கிவிடுவான்.

ஒவ்வொரு நாளும் இப்படியே தொடர்ந்து நடந்து வந்தது.

ஒரு நாள், அர்ஜுனன் நள்ளிரவில் உறக்கம் கலைந்து எழுந்து கிருஷ்ணனைத் தேடி அவன் தங்கியிருக்கும் பாசறைக்குச் சென்றான். அங்கு கிருஷ்ணன் இல்லை. தூங்கி ஓய்வெடுக்காமல் கிருஷ்ணன் எங்கு சென்றிருப்பான்? என்று எண்ணியவாறு தேடினான் அர்ஜுனன்.

இறுதியில் கிருஷ்ணன் குதிரை லாயத்தில், குதிரைகளுக்குப் பணிவிடைகள் செய்து கொண்டிருப்பதைக் கண்டான்.

உடனே ஓடிச் சென்று கிருஷ்ணனின் கைகளைப் பற்றிக் கொண்டு, "கிருஷ்ணா! குதிரைகளுக்கு நீதான் பணிவிடை செய்ய வேண்டுமா? வேறு யாரிடமாவது கூறினால் செய்ய மாட்டார்களா?" என்றான்.

"அர்ஜுனா! குதிரைகளை நன்கு பராமரிக்காவிட்டால் தேர் விரைந்து ஓடுமா? பகைவரை வெல்ல முடியுமா? வேறு யாரையாவது பராமரிக்கச் சொன்னால் அவர்கள் அக்கறையாகக் கவனிப்பார்களா? அது மட்டுமல்ல இப்போது நடக்கும் போர் முடியும்வரை நாம் மைத்துனன்மார் அல்ல. நீ எஜமானன் நான் உனக்கு சாரதி. ஆதலால் உன் கடமை போர் செய்வது - என் கடமை தேர் ஓட்டுவது. குதிரைகளைப் பராமரிப்பது சாரதிக்குரிய கடமை - மறுநாள் போருக்காக நன்கு ஓய்வு எடுத்துக் கொள்வது எஜமானன் கடமை. இருவரின் கடமைகளும் செம்மையாக நடைபெற்றால் தான் போரில் வெற்றி கிட்டும்! அதனால் நீ சென்று ஓய்வெடுத்துக் கொள். என் கடமையைச் செய்யவிடாமல் குறுக்கிடாதே" என்றான் கிருஷ்ணன்.

கீதை உபதேசம் கேட்ட நாளைவிட அன்று கிருஷ்ணன் செயலாலும் சொல்லாலும் காட்டிய உபதேசம் அர்ஜுனன் நெஞ்சை நெகிழச் செய்தது.

அந்தநாள் முதல் தன் கடமையைச் சோர்வின்றி, மகிழ்வுடன் செய்து வெற்றியைக் குவித்தான் அர்ஜுனன்.

"பார்த்தா! சிறப்புடையதாக இல்லாவிட்டாலும், தனக்குரிய கடமையைச் செய்வது, சிறப்போடு மற்றவர்களின் கடமையைச் செய்வதை விட சிறப்பானது. தனக்கு என இயல்பாக விதிக்கப்பட்ட கடமையைச் செய்யும் ஒருவன் துன்பம் அடையமாட்டான்."

- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

இந்து சமயத்தவனின் சிந்தனை

த.மனோகரன்

மாமன்ற உபதலைவர், கல்விக் குழுச் செயலாளர்

பிறப்புண்டு, வாழ்வுண்டு, இறப்பும் உண்டு. இது தான் உலக வாழ்கையின் யாதார்த்தம். அந்த உண்மையைப் புரிந்து கொள்ளாமையே உலகில் நிகழும் அவலங்களுக்கும், அனர்த்தங்களுக்கும் அடித்தளமாக உள்ளது. தேவையற்ற, பயனற்ற சிந்தனைகளாலும், செயற்பாடுகளாலும் உலகமக்கள் நெறிதடுமாறித் தமது வாழ்க்கையையும் பெறுமதியற்றதாக, பயனற்றதாக ஆக்கிக் கொள்கின்றனர்.

உலகிலே பிறக்கும் உயிரினங்களெல்லாம் இறுதியிலே இறக்கின்றன. இது உலக நியதி. இயற்கையின் நியதி. விலங்குகள், பறவைகள், ஊர்வன, நீர்வாழ் உயிரினங்கள் என்று அனைத்தும் பிறக்கின்றன, உயிர்வாழும் காலத்தில் உண்கின்றன, உறங்குகின்றன, இனப்பெருக்கம் செய்கின்றன, ஈற்றில் இறந்து விடுகின்றன.

ஆனால் மனிதகுலம் மட்டும் இதற்கு விதிவிலக்காயுள்ளது. ஏனைய உயிரினங்களுக்கும் உள்ள அத்தனை நிகழ்வுகளும் மனித குலத்திற்கும் இருக்கின்றன. உயிரினங்கள் அவ்வழியில் வாழ்கின்றன ஆனால் மனிதகுலம் அவ்வழியிலிருந்து வேறுபட்டும் உள்ளது. அதாவது மனிதகுலத்திற்கு சிந்தித்து சீர்தூக்கி பார்க்கும் அறிவுள்ளது, வல்லமையுள்ளது. அதுவே ஏனைய உயிரினங்களிலிருந்து மனித குலத்தை வேறுபடுத்துகின்றது.

அதனாலேயே அதனை ஆறாவது அறிவென்கின்றோம். அந்த ஆறாவது அறிவைப் பகுத்தறிவு என்கின்றோம். மனிதனுக்கு படைத்தவனான இறைவனால் வழங்கப்பட்ட இந்தப் பகுத்தறியும் ஆற்றல் அல்லது சிந்தித்துச் செயற்படும் ஆற்றல் சரியான வழியில் பயன்படுத்தப்பட வேண்டும் .

நல்லது எது? கெட்டது எது ? செய்யத் தக்கது எது? செய்யத் தகாதது எது? என்று ஆராய்ந்து எடைபோட்டு நடக்க வேண்டும் .

சிந்தனை என்பது நல்ல வழியிலும் செல்லலாம், மாறான வழியிலும் செல்லலாம். நமது செயல்கள் அனைத்தும் நமது சிந்தனையின் வழியிலேயே நிகழ்கின்றன.

அவ்வாறுள்ள நமக்கு மனிதர்களுக்கு நேர்வழியில் வழிதவறாமல் செல்ல கடிவாளம் தேவை. அந்தக் கடிவாளமே சமயதத்துவங்கள் எனப்படுகின்றன.

இந்துக் கோயில்களில் பல்வேறு சமயச் சடங்குகள் நடைபெற்று இறைவழிபாடு செய்யப்படுகின்றன. இறுதியாக இறைவன் மீது, இறைவனைப் போற்றிப் பாடல்கள் பாடப்படுகின்றது. அவையாவும் நிறைவடைந்த பின் இந்துக் கோயில்களிலாகட்டும் இந்துக்களின் வழிபாடு எங்கு நடந்தாலும் இறுதியாக எல்லாம்வல்ல எங்கு நீக்கமற நிறைந்துள்ள சிவபொருமானிடம் என்ன வேண்டுகோள் பிரார்த்தனையாக முன்வைக்கப்படுகின்றது?.

நான் நலமாக வாழ வேண்டும், எனது குடும்பம், எனது சுற்றம், எனது சமுகம், எமது சமயத்தவர் நல்வாழ்வு வாழவேண்டும் என்று பக்கச்சார்பான அல்லது சுயநலமான வேண்டுகோளையா இந்துவானவன் இறைவனிடம் முன்வைக்கின்றான்? செயற்படுத்துமாறு பணிந்து கேட்கின்றான்? இல்லை. அவன் இறைவனிடம் கேட்பதெல்லாம் உலக நலன் சார்ந்ததாகவே அமைகின்றது. இன, மத, மொழி, நாடு, என்று அனைத்தையும் கடந்ததாகவே இந்து சமயத்தவனின் பிராத்தனை அமைகின்றது.

மனிதன் எப்படியும் வாழலாம் என்று இல்லாமல் இப்படித்தான் வாழ வேண்டும் என்று வழிகாட்டுபவையே சமயங்களும் அவற்றின் தத்துவங்களும், கோட்பாடுகளும்.

இந்த உண்மையை நாம் அதாவது மனித சமுகம் மனதிலே பதித்துக் கொண்டால் இன்று உலகில் நிலவும் பல பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணப்படும்.

மனித மனம் பண்புபெற இந்து சமயம் பலவழிகளைக் காட்டியுள்ளது. அதிலும் சிறப்பாகவும், குறிப்பாகவும் அதிலும் நமது தமிழ்மொழியிலே ஒவ்வொரு மனித மனமும் உயர்நிலை பெற நான்குவரிகளில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

நாம் தினமும் நமது அன்றாட வழிபாடுகளில் இறைவனைப் பாடித்துதிக்கின்றோம். அவன் அருளை நாடி வணங்குகின்றோம்.

இறுதியிலே இந்தப் பரம்பொருளிடம் என்ன கேட்கின்றோம்? பொன் தா? பொருள் தா? அதிகாரம் தா? பதவி தா? பட்டம் தா? பணம்தா? என்றா கேட்கின்றோம். இல்லை. ஒரு இந்துவானவன் நம் இனிய தமிழ்மொழியில் அவை அனைத்துக்கும் மேலான ஒன்றையே கடவுளிடம் கேட்கின்றான்.

தேவார, திருவாசகம் என்று பன்னிருதிருமுறைகளையும் பாடிப்பணிந்து இறைவனைப் போற்றுகின்றோம். இவற்றின் இறுதியிலே நமது பிரார்த்தனை எவ்வாறு அமைகின்றது? இதைப்பற்றி நாம் எப்போதாவது சிந்தித்துப் பார்த்துள்ளோமா?

சிந்தித்து இதுவரை பார்த்திருக்காவிட்டால் இனியாவது அது பற்றி சிந்திப்போம், ஆராய்வோம். நமது பிராத்தனையின் ஆழத்தை, அகலத்தை , நீளத்தை அறிவோம், மகிழ்வடைவோம்.

ஆம், 'தென்நாடுடைய சிவனே போற்றி' என்று எம்பெருமான் சிவனை முதலிலே போற்றுகின்றோம். அடுத்து 'எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி' என்கின்றோம்.

அதன் பொருளென்ன ? எந்நாட்டவர் என்னும் போது உலகிலுள்ள சகல நாடுகளிலுள்ள சகல மக்களும் என்றாகிறது. அதாவது உலக நாடுகளிலுள்ள பல்வேறு மொழிகள், மதங்கள், நிறங்கள், கலாச்சரங்கள், பண்பாடுகள் கோட்பாடுகள் கொண்ட அனைத்து மக்களும் என்பது பொருளாகின்றது.

"அவ்வாறு பல்வேறு வேறுபாடுகளைக் கொண்டவர்களாக இருந்தாலும் அவர்கள் அனைவருக்கும் இறைவா அருள் செய், அனைவரும் நல்வாழ்வு வாழ வழி செய் அனைவரும் நிம்மதியாக வாழ அருள் செய், அனைவரும் வளமுடன் வாழ வழி செய்" இது போன்ற உலக மக்களின் நலன்நாடிய பிரார்த்தனையை இந்து சமயத்தவன் தூய தமிழில் இறைவனிடம் கேட்கின்றான் வேண்டுதல் செய்கின்றான்.

இவ்வாறு 'உலக மக்கள் யாவரும் நலன்கள் யாவும் பெற்று இன்பமேசூழ' அதாவது மகிழ்ச்சியான வாழ்வு வாழ இறைவா அருள்செய் என்பது ஒவ்வொரு இந்துவின் நாளாந்த பிரார்த்தனையாக அமைகின்றது. அது இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க என்று அமைகின்றது.

உலகிலே பல சமயக் கோட்பாடுகள் காணப்படுகின்றன. இந்து சமயத்திலும் முக்கிய ஆறுபிரிவுகள் உள்ளன. அவை எவ்வாறிருந்த போதிலும் மானிட குலம் ஒரு இறைவனின் படைப்பே என்ற உயர்ந்த, உயரிய, உறுதியான நம்பிக்கை இந்து சமயத்தின் அடிநாதமாகின்றது. அதனாலேயே உலகிலுள்ள அனைத்து மக்களலும் நல்வாழ்வுக்காக இந்து சமயத்தவன் பிரார்த்திக்கிள்றான்.

அதையே ஒரு சித்தர் தனது பாடலில் விளக்கியுள்ளார்.

சக்தியே
பராபரம் ஒன்றே தெய்வம்
சகல உயிர் ஜீவனும் அதுதானாச்சு
புத்தியினால் அறிந்தவர்கள் புண்ணியோர்கள்
பூதலத்தில் கோடியிலே ஒருவனுண்டு
பக்தியிலே மனதை வைப்பான் பரமஞானி
பாழிலே மனதை விடான் பரமயோகி

என்கிறார் இந்தச் சித்தர்.

சக்தியே பராபரம் ஒன்றே தெய்வம் சகல உயிர்களும் இந்தப் பரம்பொருளின் அம்சமே என்கின்றார். அதாவது உலகிலுள்ள உயிரினங்கள் அத்தனையும் இறைவனின் அம்சம். அதுமட்டுமல்ல உலகமே இறைவனின் அம்சம் என்பது நமது நம்பிக்கை.

இந்து சமயம் யாரால் தோற்றுவிக்கப்பட்டது அறியப்படவில்லை. தோற்றுவாய் தெரியாத தொல்சமயம் என்ற பெருமைக்குரியது. "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்ற குறட்பாவின் கூற்றுக்கு அமைவாக ஞானிகளும், யோகிகளும், சித்தர்களும் அது போன்ற பெருமக்களும் மனிதகுல நல் வாழ்வுக்காக காட்டிய அனைத்தையும் ஏற்று அரவணைத்துக் கொள்ளும் ஞானக்கடல் இந்து சமயம்.

சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கையில் நடந்த சம்பவமொன்று இந்து சமயத்தின் பெருமையை உலகுக்கு உணர்த்தியது. சிறப்பித்தது. மரியாதையை மேம்படுத்தியது.

இந்து சமய மறுமலர்ச்சியின் ஒரு வரலாற்றுச் சின்னம் சுவாமி விவேகானந்தர் என்பதை நாமெல்லோரும் அறிவோம். அவர் அமெரிக்க நாட்டின் சிக்காக்கோ நகரிலே நடை பெற்ற சர்வசமய மகாநாட்டில் பங்கு பற்றினார் என்பதையும் அறிவோம்.

பல்வேறு நாடுகளிலிருந்து வந்திருந்த பல்வேறு சமயங்களின் பேராளர்கள் கலந்து கொண்டு உரையாற்றிய அச்சபையிலே சுவாமி விவேகானந்தரும் உரையாற்றினார். அவர் உரையாற்று முன் சபையினரை விழித்த போது சபையில் பலத்த கரகோசமும் எழுந்தது . அது ஏன் நடந்தது?

(அடுத்த சுடரில் தொடரும்...)

இந்துமதத்தவரல்லாத ஒருவரை இந்து சமய அலுவல்கள் அமைச்சின் பிரதி அமைச்சராக நியமித்தமைக்கு மாமன்றம் கண்டனம்

இந்துமத அலுவல்கள் உள்ளிட்ட சிறைச்சாலைகள், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு அமைச்சிற்கான பிரதி அமைச்சராக இந்துமதத்தவரல்லாத ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளமையானது இந்தநாட்டின் இந்துக்களுக்கு மிகப்பெரும் அதிர்ச்சியைக் ஏற்படுத்தியுள்ளது. இந்நியமனம் தொடர்பில் இலங்கைவாழ் இந்துமக்களின் சார்பில் நாம் எமது கண்டனத்தைத் தெரிவிக்கின்றோம்.

இவ்விடயம் தொடர்பில் மாமன்றத் தலைவர்திரு. மா. தவயோகராஜா அவர்கள் இந்து சமய அலுவல்கள் அமைச்சர் தே.ம. சுவாமிநாதனைத் தொடர்புகொண்டவேளை, இவ்விடயம் தொடர்பில் தான் ஜனாதிபதியுடன் பேசி தீர்வொன்றினை பெறமுயற்சிப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்து மத அலுவல்கள் அமைச்சிற்கான பிரதி அமைச்சர் பதவியினை உடனடியாக தமிழ் இந்து ஒருவருக்கு வழங்கும்படியும் எதிர்காலத்தில் இவ்வாறான மனக்கசப்பான - இந்து மக்களை அதிருப்திகொள்ளச்செய்கின்ற எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டாமெனவும் அரசைக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

மனிதனே அழித்துவரும் மனிதனின் கற்பகவிருட்சம்!

"அரச மரம்"

(தொடர் 04)

முருகையா பிரணவன்

தாவரவியல் பெயர் : ஃபைக்கஸ் ரிலிஜியோசா
(Ficus religiosa Linn.)
குடும்பம் : மோரேசியே (Moraceae)
ஆங்கிலப் பெயர் : பீப்புல் மரம் (Peepul tree)

பண்டைய காலத்தில் இருந்தே நம் முன்னோர்கள் மரங்களையும், மரங்களின் கீழ் தெய்வச்சிலைகள் மற்றும் காவல் தெய்வங்களை வைத்தும் வழிபட்டனர்.அம்மரங்கள் தலவிருட்சங்களாகவும் அடியார்களுக்குப் பெரும் நோய்தீர்க்கும் மருந்தாக திகழ்ந்தன. இவ்வாறே இந்துக்களின் வழிபாட்டில் வேம்பு, ஆல், அரசு என பல மரங்கள் நாளாந்த வாழ்வுடன் பின்னிப்பிணைந்துவிட்டன.

எனினும் அனைத்து மரங்களையும் விட அரசமரத்திற்கு தன் சிறப்பு அதிகம். அரச மரத்தை மரங்களின் அரசன் எனும் சிறப்புப்பெற்றதால்தான் அரச மரம் என்ற பெயரே வந்தது. ராஜவிருட்சம் அரசமரத்தின் வேர் பகுதியில் பிரம்மனும், நடுவில் திருமாலும், உச்சியில் ஈசனும் அருள்புரிவதாக புராணங்கள் தெரிவிக்கின்றன அதனாலும் அரசமரம் ராஜ விருட்சம் என்றும் அழைக்கப்படுகிறது. "மரங்களில் நான் அரசமரமாக இருக்கிறேன்" என்று கீதையில் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா கூறியிருக்கிறார்.

மும்மூர்த்தி வடிவமான அரச மரத்தை பூஜைகள் செய்வதும், பிரதட்சணம் செய்வதும் வணங்குவதும், துன்பங்கள் ஏற்படுவதற்குக் காரணமான பாபங்களைப் போக்கி நல்ல அறிவையும் பெற்றுத்தரும் என்கிறது வேதம்.

புராதான காலம் தொட்டே அரச மரம் பாரத கண்டத்தில் இருந்து வந்துள்ளது. இதன் பூர்வீகத்தை இந்தியா, இலங்கை, மியான்மர், நேபாளம், பாகிஸ்தான் போன்ற நாடுகள் போட்டி போட்டுக்கொண்டு தங்களுடையது என்கின்றனர். ஆனால் இதன் பூர்வீகம் பாரதம்தான் என்பதற்கு சான்றுகள் உள்ளன. அரசமரம் இந்துக்களுக்கும், பௌத்தர்களுக்கும் புனித மரமாகும். புத்தர் போதி மரத்தின் கீழ் ஞானம் பெற்றதாக நாம் அறிவோம். அந்த போதிமரம் என்பது அரச மரம்தான். இதன் அடியில் அமர்ந்து மந்திரங்களை ஜபம் செய்தாலோ, தெய்வ சம்பந்தமான ஸ்தோத்திரங்களை பாராயணம் செய்தாலோ, நிறைவான பலனை அடையலாம்."அரசுநீழலிருந்தோன்..." என சூடாமணி நிகண்டு[5] கடவுட்பெயர் தொகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. மற்ற நாட்களைவிட, சனிக்கிழமையன்று காலை நேரத்தில் அரச மரத்திலிருந்து வெளிவரும் சக்தி அதிகமாகக் காணப்படும் என்பதால் சனிக்கிழமைகளில், அரச மரத்தின் அடியில் சிறிது நேரம் அமர்ந்திருப்பதும், அரச மரத்தை வலம் வருவதும் மிகவும் நன்மையைத் தரும்.

நீண்டு நெடிய மரம், அழகான இலைகள் என்று பரந்து விரிந்து காணப்படும் அரச மரத்திற்கு அஸ்வத்தம், அச்சுவத்தம், திருமரம், போதி, கவலை, பேதி, கணவம், சராசனம், மிப்பலம் என பலபெயர்கள் உண்டு.

அரசமரத்தை சுற்றினால் குழந்தைப்பேறுகிடைக்கும் என்பது என்பது தென்றுதொட்டு இந்துக்களிடையே காணப்படும் ஒரு நம்பிக்கையாகும். இது அறிவியல் பூர்வமாகவும் நிரூபிக்கப்பட்டுள்ளளது. அரசமரம் வெளியிடும் காற்றினால் பெண்களின் மாதச்சுழற்சி மற்றும் அது சம்பந்தமான சுரப்பிகள் சீரடைகின்றன என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. "அரச மரத்தை சுற்றிவிட்டு அடிவயிற்றைத் தொட்டுப்பார்த்தாள்"என்ற பழமொழி உண்டு. இதன் பொருள் அரச மரம் குலம் தழைக்கச் செய்யும் பிள்ளைப் பேற்றை உண்டாக்கும். சூலகத்தை சீராக்கும். சூலகத்தில் உண்டான நோய்களைப் போக்கும் என்பதேயாகும். அரசமரத்தின் காற்று, கருப்பைக் கோளாறுகளை போக்கும் தன்மையுடையது. அதுபோல் மூளையின் செயல்பாடுகளைத் தூண்டி, மன அமைதியைக் கொடுக்கும் குணமும் இதற்கு உண்டு.

நம்முடைய மூதாதையர்கள், முன்னோர்கள் மருத்துவ குணங்களை சூசகமாகச் சொல்லிச் சென்றிருக்கிறார்களே தவிர, நேரடியாக அறிவியலாக அதை சொல்லாமல் சென்றுவிட்டார்கள். அதனால், பாதியில் வந்தவர்கள்-சிந்திக்கச் சோம்பல்படும்-நாகரிகமோகத்தில் ஊறித்திளைக்க விரும்பும் மனிதர்கள் "இதெல்லாம் மூட நம்பிக்கை, அதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை" என்று சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள். இதையேவிஞ்ஞானிகளோ அல்லது வெளிநாட்டுப் பல்கலைக்கழகமொன்றோ."அரச மர இலையில் இவ்வளவு வீரியம் இருக்கிறது. அந்த மரத்திற்கு கீழ் உட்கார்ந்து அரை மணி நேரம் சுவாசித்தால் இத்தனை கலோரிகள் கிடைக்கிறது" என்று அவர்கள் சொல்லிவிட்டால்போதும்... நம்புவார்கள்.

அரச, வேம்பு போன்றவைகளை பராமரிப்பது என்பது பரிகாரம் போன்றது என்று நம் முன்னோர் சொல்லியிருக்கிறார்கள். நான்கைந்து அரச மரங்களை நட்டு அதற்கு கீழ் நாலுபேர் உட்கார்ந்து மருத்துவ குணம் பெற்று உடல் நலம் தேறிச் செல்கிறார் என்றால், அந்தப் புண்ணியம் அந்த மரத்தை நட்டவரைப் போய்ச் சேரும்.

ஒரு ஆன்மாவைத் திருப்திப்படுத்தக் கூடிய செயல்தான் மரம் நடுதல். அதில் பயனுள்ள மரத்தை நடும்போது அவர்களுடைய புண்ணியம் இன்னமும் அதிகரிக்கிறது. அசோகர் மரம் நட்டார் என்று படிக்கிறோமே, இன்றைக்கும் அதையேதானே உலக நாடுகள் மரம் நடுவோம் என்று வலியுறுத்தி வருகின்றன.

கருப்பைக் கோளாறு

அரசமரத்தின் பட்டை, வேர், விதை இவற்றை பாலில் கொதிக்கவைத்து ஆறிய பின் அதில் தேன் கலந்து தொடர்ந்து 48 நாட்கள் (1 மண்டலம்) அருந்தி வந்தால் தாது விருத்தியடையும். பெண்களுக்கு கருப்பைக் கோளாறுகள் நீங்கும். அரச மரத்தின்

இலையை, பட்டை, வேர், விதை இவற்றை இடித்துபொடியாக்கி வைத்துக்கொண்டு மாதவிலக்குக் காலங்களில் கஷாயம் செய்து அருந்தி வந்தால் மாதவிலக்கில் ஏற்படும் பிரச்சனைகள் தீரும். கருப்பைக் கோளாறுகள் நீங்கும்.

காற்று மண்டலத்திற்கு அதிக பிராணவாயு

அதிகாலை முதல் சூரியன் உதயமாகும் நேரம் காலை சுமார் 10.40 மணி வரையில், சூரியனின் கிரணங்கள் அரச மரத்தில் விழுவதால், அப்போது அரசமரத்திலிருந்து வெளிவரும் காற்று நமக்கு, நமது உடலுக்கும் நன்மையைத் தரும்.நன்கு வளர்ந்த அரச மரம் நாளொன்றுக்கு 1808 கிலோ கரியமில வாயுவை உள்வாங்கி 2400 கிலோ பிராணவாயுவை வெளியிடுவதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். மேலும் இந்த பிராணவாயு காற்று மண்டலத்தில் கலந்து காலை நேரங்களில் இம்மரத்தை சுற்றி வரும்போது நாளமில்லா சுரப்பிகளில் செயல் பாடுகளைத் தூண்டுகின்றன என்றும் கூறுகின்றனர்.

உடல் மற்றும் உள்ள சுத்தியுடன்- பக்தியுடன்- அரச மரத்தை தனது உடலின் அனைத்து அங்கங்களும் படுமாறு, இரண்டு கைகளாலும் இறுக்கி அணைத்துக் கொள்ள வேண்டும். இதனால் தீராத நோய் தீரும். உடல் மற்றும் உள்ளம், வைரம்போல் நல்ல வலிமை பெறும். இது ஒரு சிறந்த பரிகாரமாகும்.

யாகங்களில் அரசமரம்

ஹோமங்களில் நாம் போடும் பொருட்களில் அரசங்குச்சி அவசியமாகஇடம் பெறுகிறது. இந்த அரசங்குச்சியில் இருந்து வரக்கூடிய புகை மூச்சுத் திணறல், சளித் தொந்தரவுகளை போக்கக் கூடியது. நரம்புகளை முறுக்கேற்றக் கூடியது. சோர்வு, களைப்பு, நரம்புத் தளர்ச்சியுடன் இருப்பவர்களுக்கெல்லாம் மிகவும் நல்லது.

இலைகள் :

உடல் சூடு மற்றும் புண்களின் காரணமாக, வயிற்று வலி உண்டாகலாம், அதைப் போக்க, அரச இலைத் தளிர்களை, மோரில் அரைத்து பருகி வரலாம். மேலும்,அரச இலைத் தளிர்களை பாலில் கலந்து பருகிவர, ஜ்ரம் விலகும்.

ரத்தப் போக்கு :

மாத விலக்கு நேரங்களில் பெண்களுக்கு ஏற்படும் அதிக இரத்தப்போக்கை குணப்படுத்த, அரச இலைகளோடு, அத்தி, நாவல் இலைகளை நீரில் சுடவைத்து, பருகி வரலாம்.

மூல வியாதி :

அரச மரம், ஆல மரம் மற்றும் அத்தி மரம் இவற்றின் இலைக் கொழுந்துகளை அரைத்து சாப்பிட, இரத்தம் வடியும் நிலையில் உள்ள மூல வியாதிகள் குணமாகும்.

முறையற்ற மாதவிலக்கு :

அரச மரத்தின் இலைகள், வேர், விதை மற்றும் பட்டைகளை சேகரித்து அவற்றை தூளாக்கி, பெண்கள் மாத விலக்கின் போது, சிறிது நீரில் இட்டு கொதிக்க வைத்து பருகி வர, கருப்பை பாதிப்புகள் நீங்கி, நலம் பெறலாம்.

தழும்புகள் :

அரச மரத்தில் இருந்து உதிர்ந்து விழுந்த பழுப்பு நிற இலைகளை, தணலில் இட்டு தூளாக்கி, தேங்காய் எண்ணையில் கலந்து, தீக்காயங்கள் ஏற்பட்ட இடங்களின் மேல் இட்டு வர, காயங்கள் குணமாகி, தழும்புகளும் மறைந்து விடும்.

அரசம் பட்டையை வறுத்து பொடியாக்கி, ஆறாத நெடுநாள் காயங்கள், சொறி, சிரங்கு இவற்றின் மேல் தேங்காய் எண்ணையில் கலந்து தடவி வர, அவை சரியாகி விடும்.

உயிரணுக்கள் அதிகரிக்க :

அரசம் பழத்தை பதப்படுத்தி உயிரணுக் குறைபாட்டால், மகப்பேறின்மை பாதிப்புள்ள ஆண்கள் தினமும் சாப்பிட்டு வர, உயிரணுக்கள் அதிகரித்து, விரைவில் குறைகள் நீங்கப் பெறலாம். அரச விதைகளை பாலில் கலந்து பருக, உயிர்த்தாதுக்கள் வளமாகும்.

கர்ப்பப்பை பாதிப்பு நீங்க :

அரச மரத்தின் வேர், விதை மற்றும் பட்டை இவற்றை, பாலில் இட்டு காய்ச்சி, தினமும் தொடர்ந்து பருகி வந்தாலும், ஆண்களின் உயிரணு குறைபாடு நீங்கும், பெண்களின் கருப்பை பாதிப்புகளும் சரியாகும்.

வாய்ப்புண் ஆற :

அரசம் பட்டையை நீரில் சுடவைத்து, வாய் கொப்புளிக்க, வாய்ப் புண்கள் ஆறிவிடும். அரசம் பட்டையை தூளாக்கி, சிறிது நீரில் இட்டு, கொதிக்க வைத்து பருக, சரும வியாதிகள் குணமடையும். இதையே, பாலுடன் சேர்த்து பருகிவர, தொடர் இருமல் குணமடையும்.

மலச்சிக்கல் தீர :

அரசம் பட்டை பொடியை சாம்பலாக்கி, அதை மிகச்சிறியளவு நீரில் ஊற வைத்து பருகிட, விக்கல் நின்றுவிடும். அரச விதையை பொடியாக்கி, சிறு அளவு தினமும் சாப்பிட, மலச்சிக்கல் நீங்கும்.

ரத்த வாந்தி நிக்க :

இரத்த வாந்தி குணமாக, அரச மற்றும் ஆல விதைகளை பொடியாக்கி, பாலில் கலந்து பருகிவரலாம்.

சரும ஒவ்வாமை குணமாக :

இக்காலங்களில், பெண்களைப்போல ஆண்களும் அதிக அளவில் நெற்றியில் குங்குமம் இட்டுக் கொள்கிறார்கள், அந்தக் குங்குமம் மஞ்சள் சுண்ணாம்பு போன்ற இயற்கை முறையில் தயாரிக்கப்படாமல், செயற்கை முறையில் தயாரிப்பதால், நெற்றியில் குங்குமம் இட்ட இடத்தில் தோல் கறுத்து, அவ்விடங்களில் அரிப்பு ஏற்படக்கூடும்.

அந்த பாதிப்பு உள்ளவர்கள், அரச மரப்பட்டையை நீரில் ஊற வைத்து, அதை நெற்றியில் அரிப்பு உள்ள இடத்தில் தடவி வர, தோல் இயல்பான நிறத்திற்கு மாறும், அரிப்பும் நீங்கும்.

வெடிப்பு மறைய :

அரச மரத்தை, அதன் பட்டைப்பகுதியை சிறு கத்தியால் அல்லது அரிவாளால் கீற, அவ்விடங்களில் இருந்து, அரசம் பால் வழியும், அந்தப் பாலை சேகரித்து, பாதங்களில் பெரும் சிரமங்களை தந்து வரும், பித்த வெடிப்புகளின் மேல் பூசி வர, அவை யாவும் விரைவில் மறையும்.

க - சூடாமணி நிகண்டு என்னும் நூல் கி.பி. 16 ஆம் நூற்றண்டில் வாழ்ந்த மண்டலபுருடர் என்னும் சமணரால் இயற்றப்பட்டது. இந் நிகண்டு ஆசிரியர் மண்டல புருடர் அவர்கள் வீரமண்டலபுருடர் என்றும் அழைக்கப்பட்டார். இந்நூல் 12 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு விருத்தப்பாவால் ஆன நூல் ஆகும். இதில் 1197 சூத்திரங்களில் 11,000 சொற்களுக்கு விளக்கம் தரப்பட்டுள்ளது.

நாகர்கள்

பாலசுப்பிரமணியம் மோகனா (B.A.(Hons)

நாகர் என்பவர்கள் தமிழ் இலக்கியங்களிலும் இலங்கை இலக்கியங்களிலும் குறிப்பிடப்படும் பழங்குடி மக்களாவர். உலகின் மற்றப் பகுதிகளில் வாழும் நாகர்கள் போல் இவர்களும் பாம்பு வணக்கத்தையும் தாங்கள் வாழ்ந்த இடங்களுக்கு நாகம் என்று பொருள்படும் பெயரையும் வைத்துள்ளதாகவே தெரிகிறது.

இலங்கையை ஆண்ட முடிநாகர்

இலங்கையை மகாவம்சம் குறிப்பிடும் விசயன் (பொ.மு. 543 – 504) என்ற மன்னனுக்கு முன்பே முடிநாகர் என்னும் தமிழ் நாகர் இனத்தவர்கள் ஆண்டனர் என்பது ஆராய்ச்சியாளர்கள் கருத்து.[1] இதற்கு ஆதாரமாக முரஞ்சியூர் முடிநாகராயர் என்னும் முடிநாகர் இனத்தைச் சேர்ந்தவர் சேர மன்னனான உதியஞ்சேரலை பாடியதை குறிப்பிடுகின்றனர். இவர்கள் நாகவுருவை தலையில் அணிந்ததால் இவர்கள் முடிநாகர் என்றும் சூட்டுநாகர் என்றும் அழைக்கப்பட்டனர்.[2]

நாகர்கள் யார்? என்ன மொழிக்குரியவர்கள்?

சரித்திர காலத்திற்கு முற்பட்ட, பெரும்பாலும் தமிழர்களாகவே இருந்திருக்கக்கூடிய, தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் பரந்து வாழ்ந்த இனத்தவரின் ஒரு கிளையினரே நாகர் என சேர் பொன். அருணாசலம் அவர்கள், 'Sketches of Ceylon History" என்ற தமது நூலில் கூறுகின்றார். பன்மொழிப் புலவர் திரு.கா.அப்பாத்துரையாரோ மேலும் ஒருபடி சென்று, "நாகர்கள் தமிழராகவே தமிழகத்தில் வாழ்ந்தனர். எங்கும் வேறு இன மொழிக்கு உரியரென்ற பேச்சும் ஏற்படவில்லை. தனி இனமாகவே வாழ்ந்தனர். ஆகவே, அவர்கள் கடல்கொண்ட தமிழகத்திலோ, தமிழகம் சூழ்ந்த நிலத்திலோ இருந்த தமிழினப் பிரிவினர் என்றும், கடல்கோளின் பயனாகவோ, வேறு காரணங்களாலோ எங்கும் பரந்தவர் என்றும் கருத இடமுண்டு." என்று குறிப்பிட்டுள்ளார். தென்னிந்தியத் தமிழகத்தின் திருநெல்வேலி நகரில் இருந்து 24 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள ஆதிச்சநல்லூர் (ஆதித்த நல்லூர்) என்னும் இடத்தில் குறைந்தது மூவாயிரம் ஆண்டுகளுக்கும் முன்னர் புதைக்கப்பட்ட நூற்றுக்கணக்கான "முதுமக்கள் தாழி"கள் (இறந்தோரின் உடலை இட்டுப் புதைக்கும் மண்சாடிகள்) அகழ்வாராய்ச்சியாளரால் சமீபத்தில் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. புதை குழிகளிலிருந்து சிலநூறு மீற்றர் தூரத்தில் மக்கள் குடியிருப்புப் பகுதியும் தொழிலகங்கள் அமைந்திருந்த பகுதியும் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. சிவப்பு, கறுப்பு நிற மண்பாண்டங்களின் உடைந்த துண்டுகளும், இரும்பு, செம்பு, பொன் முதலிய உலோகங்களில் செய்த பொருட்களும் ஆயுதங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

புதைகுழிகள் மூன்று அடுக்குகளாக ஒன்றின்மேல் ஒன்றாக அமைந்து இருந்தன. இவற்றுள் காணப்பட்ட மட்பாண்டம் ஒன்றின் உட்புறத்தில் தமிழ்ப்பிராமி எழுத்துக்களில் வரையப்பட்ட ஒருவருடைய பெயர் என்று கருதப்படும் ஏழு எழுத்துக்களைக் கொண்ட சொல் காணப்பட்டுள்ளது. மணிமேகலை, நற்றிணை, பதிற்றுப்பத்து, புறநானூறு முதலிய சங்கத் தமிழ் இலக்கியங்கள் விவரிக்கும் இறந்தோர் உடலைப் புதைக்கும் அல்லது இறந்தோர் எலும்புகளைப் புதைக்கும் முறை, ஆதிச்சநல்லூரில் ஒழுங்கு பிசகாமல் பின்பற்றப்பட்டுள்ளது. சரித்திர காலத்துக்கு முற்பட்ட இந்தியர் (திராவிடர்) குள்ளமான தோற்றம் உடையவர்கள் என்று இதுவரை நம்பப்பட்டதைப் பொய்யாக்கும் வகையில் இங்கு புதைக்கப்பட்டவர்கள் உயரமானவர்களாகவும் மொங்கோலிய உருவ அமைப்பின் அம்சங்களைக் கொண்டவர்களாகவும் இருந்தனர் என்று அகழ்வாராய்ச்சி மேற்கொண்ட ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். இத்தகவல்களை ஒருங்கு சேரப்பார்க்கையில் புதைக்கப்பட்ட மக்கள் 'தமிழ் நாகர்' என்று சுட்டுவனவாக உள்ளன.

"நாகர்களின் தசைக் கட்டமைப்பு, மஞ்சள் நிறம், சப்பை மூக்கு, சிறிய கண்கள், உயர்ந்த கன்ன எலும்புகள், சிறிதளவு தாடி முதலியவை, அவர்கள் முன்னொரு காலத்தே மொங்கோலிய இனக் குழுமத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தனர் என்பதைக் காட்டும்" என்று 'இந்து வரலாறு' (Hindu History) எனும் நூலின் ஆசிரியர் திரு.ஏ.கே.மஜும்தார் என்பார் கூறுகின்றமையும் இங்கு நோக்கத் தக்கது. "தாமிரவருணி" ஆற்றங்கரையில் உள்ள ஆதிச்சநல்லூரில் அகழ்ந்து எடுக்கப்பட்ட தாழிகள் போன்ற அதே வகைத் தாழிகள் பல ஆண்டுகளுக்கு முன் இலங்கையின் மேற்குப் பகுதியில் "பொம்பரிப்பு" என்று தவறாக உச்சரிக்கப்படும் 'பொன்பரப்பி' (தாமி ரவருணி) என்ற ஊரிலும் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. இவை முறையான ஆய்வுக்குட்படுத்தப்பட்டால் புத்தர் பிறப்பதற்கு குறைந்தது 500

வருடங்களுக்கு முன்னரே இலங்கையில் தமிழ் நாகர்கள் வாழ்ந்த உண்மை நிரூபணமாகும். இவ்வாறான தாழிகள் திருநெல்வேலி மாவட்டத்தில் சங்கரன் கோவிலையடுத்த குவளக்கரைக் கிராமத்திலும், திருநெல்வேலிக்கு மேற்கே சேரநாடாகிய கேரள எல்லைக்குள் கொல்லம் நகரையடுத்த அட்டமுடி ஏரிக் கரையில் மாங்காடு எனுமிடத்திலும் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. (ஆதாரம்: திரு.டி.எஸ். சுப்பிரமணியன் The Hindu இதழில் 14. மார்ச் 2004 இலும், 3. ஏப்ரல் 2005 இலும் வரைந்த கட்டுரைகளும், The Telegraph இதழில் 20. சூன் 2005 இல் திரு.எம். ஆர்.வெங்கடேசு வரைந்த கட்டுரையும்) நாக வழிபாட்டில் திளைத்த தமிழ்த் தொல்குடியினரான நாகர்கள், நயினாதீவு மற்றும் தீவுகளிலும், யாழ். குடாநாட்டிலும் ஒரு காலத்தில் சிறப்புற வாழ்ந்தனர். பிற்காலத்தில் இந்து சமயம், பௌத்தம், கிறீத்தவம், இஸ்லாம் என்ற பிறமதப் பாதிப்புகளால் தமது நாக வழிபாட்டு அடையாளத்தை இழந்தும், சாதியக் கொடுமைகளால் ஒடுக்கப்பட்டும் நாகர்கள் இன்று சிறப்பொழிந்து போயினர். எனினும், நாகர்களின் வழிவந்த மக்கள் நயினாதீவில் நம்மத்தியில் இன்றும் உளர். கி.பி. 1620 அளவில், நயினாதீவில் அமைந்திருந்த "நயினார் கோவில்" போர்த்துக்கீசரால் தாக்கி அழிக்கப்பட்ட வேளையில், இங்கு வாழ்ந்த நாகர்வழிவந்த மக்களில் பெரும்பாலோர் தமது நயினார் கோவிலைப் பாதுகாக்கும் முயற்சியில் உயிர் இழந்தார்கள். நயினையில் இன்று வாழும் தொல் தமிழராகிய வள்ளுவ சமுதாயத்தவர்கள் எஞ்சிய நாகர்களின் நேரடிப் பிற்சந்ததியார் ஆவர். இவர்களே நயினையின் முதற் குடிகள் ஆவர்.

தமிழ் மற்றும் இலங்கை இலக்கியங்களில் நாகர்கள்

இரட்டைக்காப்பியங்களில் நாகர்கள்

நாகர்களின் நாடு நாகரிகமும் செல்வ வளமும் நிரம்பியது என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.[3]

மணிமேகலையில் நாக இளவரசியான பீலிவளை மீது கிள்ளி என்னும் சோழ வேந்தன் காதலுற்று அவளைப் பிரிந்து வருடந்தோறும் நடத்தும் இந்திர விழாவையும் நடத்த மறந்தான் என்றுள்ளது.

சாவக நாட்டை ஆண்ட பூமிசந்திரனும் அவன் வளர்ப்பு மகனான புண்ணிய ராசனும் நாக மரபினரே என்றும் மணிமேகலையில் உள்ளது.

தீப வம்சமும் மணிமேகலையும்ஜதொகுஸ

இலங்கை வரலாற்று நூலான தீபவம்சம், மகாவம்சம்[4] மற்றும் தமிழ் ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை போன்ற நூல்கள் நாக மன்னர்களுக்கு இடையே நடந்த போர் பற்றி விளக்குகிறது. அவையாவன.

நாகராசன் என்னும் மன்னன் விசயன் என்றவனுக்கு முன்பே நாகநாடான இலங்கையை யாழ்ப்பாணம் நகரை கோநகராக்கி ஆழ்கிறான். இவனுக்கு ஒரு மகளும் மகோதரன் என்ற மகனும் இருந்தனர்.

தன் மகளை மலையராட்டிர நாகராசன் என்ற வேறொரு நாக மன்னனுக்கு மணமுடித்து அவளுக்கு சீதனமாக தன் மணியாசனத்தையும் கொடுத்தனுப்பினான். அவர்களுக்கு குலோதரன் என்னும் மகன் பிறக்கிறான்.

யாழ்ப்பாண நாகராசன் தான் இறக்கும் முன்பு தன் மகனான மகோதரனுக்கு பட்டம் கட்டிவிட்டு இறக்கிறான்.

இப்போது யாழ்ப்பாண நாகராசனான மகோதரன் மலையராட்டிர நாகராசனான் குலோதரன் மீது மணியாசனத்தை பெரும் பெயரில் போர் தொடுக்கிறான்.

இரு படைகளுக்கும் போர் நடக்கும் போது அவர்களின் நடுவில் புத்தர் தோன்றி பேரிருளை உண்டாக்கியதால் நாகர்கள் அஞ்சினர். மீண்டும் புத்தர் அங்கு வெளிச்சத்தை உருவாக்கியவுடன் நாகர்கள் புத்தரை வணங்கி போருக்குக் காரணமான மணியாசத்தில் புத்தரையே அமரச்செய்தனர்.

இதே கதையை மணிமேகலையும் கூறுகிறது.[5]

தமிழ் புலவர்கள்

தமிழ் சங்கங்களில் நாகர் இனத்தைச் சேர்ந்த பல புலவர்கள் தன் இலக்கியங்களை அறங்கேற்றியுள்ளனர். அவர்கள்,

- புறத்திணை நன்னாகனார்
- மருதன் இளநாகனார்
- முரஞ்சியூர் முடிநாகராயர்
- வெள்ளைக்குடி நாகனார்
- சங்கவருணர் என்னும் நாகரியர்



இலம்பகர்ண அரசர்களின் பட்டியல்

இலங்கையை ஆண்ட இலம்பகர்ணர் என்னும் வம்சத்தில் நாகன் என்ற பெயர் தாங்கிய பலர் உள்ளனர். இவர்கள் நாகர் பழங்குடிகளாக இருக்கலாம் என்பது ஆராய்ச்சியாளர்களின் கருத்து.

- வசபன் பொ.பி. 66 - 110
- வங்கனசிக திச்சன் பொ.பி. 110 -113
- முதலாம் கசபாகு பொ.பி. 113 - 135
- மகல்லக்க நாகன் பொ.பி. 135 - 141
- பதிக திச்சன் பொ.பி. 141 - 165
- கனித்த திச்சன் பொ.பி. 165 - 193

- குச்சநாகன் பொ.பி. 193 - 195
- குஞ்சநாகன் பொ.பி. 195 - 196
- முதலாம் சிறிநாகன் பொ.பி. 196 - 215
- ஒகாரிக திச்சன் பொ.பி. 215 - 237
- அபயநாகன் பொ.பி. 237 - 245
- இரண்டாம் சிறிநாகன் பொ.பி. 245 - 247
- விசயகுமாரன் பொ.பி. 247 - 248
- முதலாம் சங்க திச்சன் பொ.பி. 248 - 252
- சிறிகங்கபோதி பொ.பி. 252 - 254
- கோதாபயன் பொ.பி. 254 - 267
- முதலாம் சேட்டதிச்சன் பொ.பி.267 - 277
- மகாசேனன் பொ.பி. 277 - 304
- சிறிமேகவண்ணன் பொ.பி. 304 - 332
- இரண்டாம் சேட்டதிச்சன் பொ.பி. 332 - 341
- புத்ததாசன் பொ.பி. 341 - 370
- உபதிச்சன் பொ.பி. 370 - 410
- மகாநாமன் பொ.பி. 410 -428
- மித்தசேனன் பொ.பி. 428 - 429

நாகர்களும் பரதவர்களும்

யாழ்ப்பாணத்தில் நாகர்கள் இருந்தது போலவே தமிழகத்திலும் நாகர்கள் இருந்தார்கள் என்பதற்கு நாகர் எனப்பெயருடன் தொடங்கும் ஊர்களே சாட்சி. அவர்கள் பரதவர்களாக இருக்கலாம் என்பது ஆராய்ச்சியாளர்களின் கருத்து. அதற்கு வலுச்சேர்ப்பது போல் வருணன் என்ற கடற்கடவுளின் வழிபாடு இரு மக்களுக்கும் பொதுவாக உள்ளதைக் கூறலாம்.[6]

நாகர்கள் பற்றிய ஆராய்ச்சிக் கருதுகோள்கள்

இந்த நாகர்களே ஆரியருக்கு சமஸ்கிருத மொழியை கற்பித்தனர்.என்றகருதுகோளும்கருத்திற்கொள்ளப்படவேண்டிய தொன்றாகும்.

மேற்கோள்கள்

1. செந்தமிழ், ஈழமும் தமிழ் சங்கமும் - ஆ.முத்துத்தம்பிப் பிள்ளை
2. தமிழிலக்கிய வரலாறு, பாவாணர், பப 10 — 11
3. நாகநீள் நகரொடு நாகநாடு அதனொடு போகநீள் புகழ்மன்னும் புகார் நகர்
4. - சிலப்பதிகாரம், மங்கல வாழ்த்துக் காதை.
5. http://www.infolanka.com/org/srilanka/hist/hist4.html
6. வேக வெந்திறல் நாகநாட் டரசர் சினமா சொழித்து மனமாசு தீர்த்தாங்கு அறச்செவி திறந்து மறச்செவியடைத்து பிறவிப்பிணி மருத்துவன் இருந்தறம் உரைக்கும் திருத்தாளி ஆசனம்
7. - மணிமேகலை பீடிகை கண்டு பிறப்புணர்த்திய காதை, 58 — 61
8. வருணன் வணக்கம், பக்கம் 77, தமிழ் சங்கத்து மாத இதழ், சூன்-சூலை 1958 — மயிலை சீனி. வேங்கடசாமி
9. http://www.africaresource.com/rasta/sesostris-the-great-the-egyptian-hercules/ancient-african-kings-of-india-by-dr-clyde-winters/

இந்தச் சுடரில்...

- பஞ்ச புராணம் 1
- ஆன்மீகச்சுடரின் அருள்மடல் 3
- மாமன்றத்தின் பிரார்த்தனைச் செய்தி 4
- நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய வரலாறும் வழிபாட்டு மரபுகளும் சில குறிப்புகள் 5
- நயினாதீவு நாகபூசணி அம்பாள் திருத்தல வரலாறு 9
- நயினாதீவுச் சுவாமிகள் 11
- நயினை நாகேஸ்வரி தோத்திரமாலை 15
- நயினை நாகபூஷணி அம்மன் திருவூஞ்சல் 16
- இந்து அரசியற் கொள்கை - சப்தாங்கக் கொள்கை : ஒரு நோக்கு 17
- வைகாசி விசாகம் 20
- சிதம்பரத்தில் ஆனி உத்தரத் திருவிழா 22
- வற்றாப்பளை கண்ணகை அம்மன் பொங்கல் 24
- சிறுவர் ஒளி - செய்வனத் திருந்தச் செய்! 28
- இந்து சமயத்தவனின் சிந்தனை 30
- மனிதனே அழித்துவரும் மனிதனின் கற்பகவிருட்சம்! "அரச மரம்" 32
- நாகர்கள் 34

மாமன்றச் செய்தி

மாமன்றத்தின், வன்னிப் பிராந்தியப் பணிமனை நிர்மாண வேலைகள் நடைபெற்றுவருகின்றன. பிராந்தியப் பணிமனை வளாகத்தின் சிறப்பம்சமாக சரவணப்பொய்கையும், சைவ உணவகமும், இளைப்பாறும் வசதிகளும் இணைந்ததாக வளாகம் அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடப்படத்தக்கது.

'மனிதநேயமாமனிதர்' அமரர் வி. கயிலாசபிள்ளை – முதலாவது வருட நினைவுநிகழ்வு

11-03-2018 அன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது

திருமதி அ. கயிலாசபிள்ளை, வைத்தியகலாநிதி வி.அம்பலவாணர், மாமன்ற பிரதித்தலைவர் திரு. மா. தவயோகராஜா, இந்திய உயர்ஸ்தானிகராலயத்தைச் சோர்ந்த ஸ்ரீ டி.சி.மஞ்சுநாத் ஆகியோர் மங்கல விளக்கினை ஏற்றுகின்றார்கள்.

திரு.க.அரவிந்தன், வைத்தியகலாநிதி சி.செல்லையா, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் மாண்புமிகு சி. துரைராஜா, பட்டிமன்றம் திரு. ராஜா ஆகியோர் மங்கல விளக்கேற்றுகின்றனர்.



சைவஞானபானு ஆறு.திருமுருகன், சிவத்திரு சுப்பிரமணியம் செட்டியார், மாமன்ற பொதுச் செயலாளர் திரு. வே. கந்தசாமி ஆகியோர் மங்கல விளக்கேற்றுகிறார்கள்.

அமரரின் திருவுருவப்படத்திற்கு அஞ்சலி செலுத்தும் குடும்பத்தினர்



கலாநிதி ஆறு.திருமுருகன், திரு. மா. தவயோகராஜா, வைத்தியகலாநிதி சி.செல்லையா ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

பட்டிமன்றம் திரு. ராஜா அவர்கள் நினைவுப்பேருரை ஆற்றுகின்றார்.

கலாநிதி ஆறு.திருமுருகன் மற்றும் திரு. ராஜா ஆகியோரை திரு.க.அரவிந்தன், வைத்தியகலாநிதி சி.செல்லையா ஆகியோர் கௌரவித்தவேளை

அரங்கில் பிரதானிகள்



திரு. க. அரவிந்தன் அவர்கள் நன்றியுரை வழங்குகிறார்.

HINDU OLI - REGISTERED IN THE DEPARTMENT OF POSTS OF SRI LANKA UNDER NO. QD/37/NEWS/2018

2017 ஆம் ஆண்டு மகோற்சவத்தின் நிழற்படத் தொகுப்பு

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் மகோற்சவ சிறப்பிதழ் கலாநிதி ஆறு. திருமுருகன் அவரகளால் 07-07-2017ல் ஆலய முன்றலில் வெளியிடப்பட்டது

மாமன்றத்தினால் கொழும்பு. பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் ஆலயத்தில் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய மகோற்சவ சிறப்பிதழ் 08-07-2017 அன்று தமிழ்நாடு பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் கலாநிதி தமிழிசை சௌந்தரராஜன் அவர்களால் வெளியிடப்பட்டது.



இலக்கம் இல. 455 புளுமெண்டால் வீதி, கொழும்பு - 3 புனி ஆர்ட்ன பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தில் அச்சிடப்பட்டு அதில் இலங்கை இந்து மாமன்றத்தினால் வெளியிடப்பட்டது.